Registered as a News paper in Sri Lanka

பக்கங்கள்: 12

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

ஞாயிறு வார மலர் THE EELANAATHAM

நாதம் 01 பிரமோதூத ஹூ சித்திரை மீ 16ஆம் வ ஞாயிற்றுக்கிழமை (29 - 04 - 1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 2 ஓசை 70

## 3083 துப்பாக்கிகள் அழிப்பு!

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதிகளிடமிருந்து பொலிஸார் மீட்ட மூவாயிரத்து எண்பத்து மூன்று சுடு கலன்கள் கொழும்புப் பொலிஸ் வெளிகளப் பிரிவு தலைமை அலுவலகத்தில் வைத்து நேற்றுப் பிற்பகல் அழிக்கப்பட்டன.

இந்த ஆயுதங்களை அழிப்பதற்கு உருளை இயந்திரம் பயன்பட்டது. ஒரே சமயத்தில் பெருந்தொகையான ஆயுதங்கள் அழித்தொழிக்கப்பட்டவை இதுவே முதற்தடவையாகும் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்; பயன்படுத்தக் கூடிய ஆயுதங்களை பொலிஸார் எடுத்து வைத்துள்ளனர்.

இத்தொகை எண்ணிக்கையுடைய மற்றொரு தொகுதி ஆயுதங்கள் பிறிதொரு தினத்தில் அழிக்கப்பட இருப்பதாக அதிகாரி மேலும் தெரிவித்தார். அழிக்சுப்பட்ட ஆயுதங்களின் தொகுதி அரசாங்க உருக்குக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்படும்,

# மாகாண சபையை உடன்கலைக்கவும்

### -அரசிடம் புலிகள் வற்புறுத்து

(கொழும்பு)

நேற்று மாலை விடுதலைப் புலிகள் உயர் மட்டக் குழுவிற்கும் இலங்கை அரசின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகள் மாகாணசபை கலைப்புத் தொடர்பான விடயத்தை வற்புறுத்தியுள்ளார்கள். அத்தோடு வடக்குக் கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்புச் சம்மந்தமான விடயமும் பிரஸ்தாபிக்கப் பட்டது.

(கொழும்பு)

நேற்றுமாலை ஆறரை மணியிலிருநது ஒன்பதரை மணி வரையிலும இப்பேச்சுவார்த்தை இடம் பெற்றது. இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் தரப்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் யோகரெட்ணம் யோகியும் கலந்து கொண்டனர். இலங்கை அரசின் சார்பில் நீதி அமைச்சரும் சமாதானக் குழுத்தலைவருமான ஏ. சி. எஸ். ஹமீதும் இலங்கையின் முப்படைகளின் தளபதியும் பொலிஸ்மா அதிபரும், பாதுகாப்புச் செயலாளரும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையில் நடை

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாத யாத்திரை பின்போடப்பட்டது

(வவுனியா)

வடமேல் மாகாண சபை உறுப்பினர் இரத்தநாயக்கா தலைமையில் ஆயிரம் பேருடன் எதிர் வரும் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட விருந்த பாத யாத்திரை பிற்போடப்பட்டுள்ளது.

அனுராதபுரம் ஸ்ரீ மகா போதியிலிருந்து ஆரம்பமாகி யாழ்ப்பாணம் வர விருந்த இச் சமாதானப் பாதயாத்திரை இம் மாதம் 20-ம் திகதி நிகழவுள்ளது. இம் முறை சிங்களவர், தமிழர், முஸ்லிம்களைக் கொண்ட 2000 பேர் பாதயாத்திரையில் கலந்து கொள்வார்களாம். (தி)

## கிளிநொச்சியில் கோமாரி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மீண்டும் கோமாரி நோய் ஏற்பட்டு பெருந்தொகையான கால் நடைகள் இறந்துவருகின்றன.

இரணைபடு கனகாம்பிகை அம்மன் ஆலய சுற்றாடலில் மட்டும் இருபத்திஐந்துக்கு மேற்பட்ட பசுக்கன்றுகளும் இரண்டு ஆடுகளும் இறந்துள்ளன.

(4-ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் தேர்தலை விரும்புகின்றனர்

(வவுனியா) - சந்திரன்

இந்த அமைதி நிரந்தரமாக நீடிக்க வேண்டும் வன்னி வாழ் தமிழ் - முஸ்லிம் மக்கள் எதிர் பார்க்கிறார்கள் வன்னி மக்கள் தமது மனநிறைவு, அமைதி, அடிப்படைப்பிரச்சினைகள், தங்களது உரிமைகள் ஒற்றுமை ஆகியவற்றை வெளிப்படுவதற்கு ஒரு தேர்தலை எதிர்பார்க்கிறார்கள் என வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் ஆர். சந்திரன் ஈழநாதத்துக்கு வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்தார்.

எல்லைப் பிரதேசம் என்ற வகையில் ஓரளவு சிங்களவரும் தமிழரும் சில கிராமங்களில் சேர்ந்து வாழலாம். அதனால் ஏதாவது நடைமுறைப் பிரச்சினைகள் உண்டா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்

இந்த அமைதி நிரந்தரமாக நீடிக்கவேண்டுமென்பது சிங்களவர், தமிழர் முஸ்லிம்களினது எதிர்பார்ப்பாகும். மாமடுவ, மூன்று முறிப்பு, ரம்பைக்குளம் ஆகிய கிராமங்களில் சிங்களவரும், தமிழ் பேசும் மக்களும் வாழ்கிறார்கள். வவுனியாவிலும், முல்லைத்தீவிலும் தமிழ் பேசும் மக்களுக்கும் சிங்களவருக்கும் கருத்து முரண்பாட்டைக் காணக்கூடியதாக வில்லை. கொக்கிளாய், முகத்துவாரத்தில் உள்ள சிங்களவர் தமிழ் பேசும் மக்களுடன் உரையாடுகிறார்கள். சிங்கள மக்கள், அரசாங்கம் தமிழர்களது உரிமைகள் மறுக்கப்படுவதையோ, அடக்கி ஒடுக்கப்படுவதையோ, அன்றிப் புறக்கணிக்கப்படுவதையோ விரும்பவில்லை. அவர்களும் பிரச்சினைகள் ஏற்[illegible]டுவதையோ, குழப்பங்கள் நிகழ்வதையோ விரும்பவில்லை. அவர்களும் அமைதி நீடிக்கவேண்டும் என்றே விரும்புகிறார்கள் என்றார்.

சமீபத்திய அனர்த்தங்களின் போது புலம்பெயர்ந்த தமிழ் மீனவர்கள் மீளவும் நாயாறு, செம்மலை, அலம்பில் ஆகிய இடங்களில் குடியமர்ந்து மீன் பிடித் தொழிலை சுமுகமாகச்



செய்து வருகிறார்கள் என்றார்.

பொருளாதார உற்பத்தித் திறன் வளர வேண்டும்.

புனர் வாழ்வு, புனரமைப்பு

(4ம் பக்கம் பார்க்க)

மே இறுதிக்குள்

## நான்கு சக்கர வாகனங்கள் அனுமதி பெற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதிமுதல் இன்னதாக யாழ். மாவட்டத்தில் உள்ள நான்கு சக்கர வாகன சொந்தக்காரர் அனைவரும் தமது வாகனங்களை பதிவுசெய்வதுடன் வாகனத்தின் சகல அம்சங்களையும் அவர்கள் பரிசோதனை செய்து அதற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்

(4ம் பக்கம் பார்க்க)




## புங்குடுதீவில் கொள்ளை

(புங்குடுதீவு)

# மருதானையில்வெளியேறியதுபோல் கொக்குவிலில் வெளியேறமாட்டோம்

(கொக்குவில்)

உயர்கல்வி அமைச்சின்கீழ் செயற்படும் திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தினால் சுவீகரிக்கப்பட்ட கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக் இப்படித்தான் கொழும்பில் மருதானை தொழில் நுட்பக் கல்லூரியிலும்நாம் இருப்பதை மாணவர் ஆட்சேபித்து எம்மை வெளியேறுமாறு கூறினார்கள் இறுதியாகதாம் அவ்விடத்தை விட்டு வெளியேறி விட்டோம் இவ்வாறு உபவேந்தர் விஜயசேகரா நேற்றுப் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது (மகாநாடல்ல) தெரிவித்தார்.

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)



## மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினரின்

மே இறுதிக்குள்

ணம் யோகியும் கலந்து

பரும், பாதுகாப்புச் செயலாள ரும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் விடுத லைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையில் நடை

(4ஆம் பக்கம் பார்க்க)

அம்மன் ஆலய சுற்றாடலில் மட்டும் இருபத்திஐந்துக்கு மேற்பட்ட பசுக்கன்றுகளும் இரண்டு ஆடுகளும் இறந்துள் ளன.

(4-ஆம் பக்கம் பார்க்க)

இந்த அமைதி நிரந்தரமாக நீடிக்கவேண்டுமென்பது சிங்க ளவர், தமிழர் முஸ்லிம்களினது எதிர்பார்ப்பாகும். மாமடுவ, மூன்று முறிப்பு, ரம்பைக்குளம் ஆகிய கிராமங்களில் சிங்கள

துவாரத்தில் உள்ள சிங்களவர் தமிழ் பேசும் மக்களுடன் உரையாடுகிறார்கள். சிங்கள மக்கள், அரசாங்கம் தமிழர்க ளது உரிமைகள் மறுக்கப்படு வதையோ, அடக்கி ஒடுக்கப் படுவதையோ, அன்றிப் புறக் கணிக்கப்படுவதையோ விரும் பவில்லை. அவர்களும் பிரச்சி னைகள் ஏற்படுவதையோ, குழப்பங்கள் நிகழ்வதையோ விரும்பவில்லை. அவர்களும் அமைதி நீடிக்கவேண்டும் என்றே விரும்புகிறார்கள் என் றார்.

சமீபத்திய அனர்த்தங்களின் போது புலம்பெயர்ந்த தமிழ் மீனவர்கள் மீளவும் நாயாறு, செம்மலை, அலம்பில் ஆகிய



செய்து வருகிறார்கள் என் றார்.

பொருளாதார உற்பத்தித் திறன் வளர வேண்டும்.

புனர் வாழ்வு, புனரமைப்பு

(4ம் பக்கம் பார்க்க)

# நான்கு சக்கர வாகனங்கள் அனுமதி பெற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக யாழ். மாவட்டத்தில் உள்ள நான்கு சக்கர வாகன சொந் தக்காரர் அனைவரும் தமது வாகனங்களை பதிவுசெய்வ துடன் வாகனத்தின் சகல அம்சங்களையும் அவர்கள் பரி சோதனை செய்து அதற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்

(4ம் பக்கம் பார்க்க)




விடுதலைப் புலிகளால் வழங்கப்படும் வாகன அனுமதிப் பத்திரத்தின் மாதிரி

## புங்குடுதீவில் கொள்ளை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தின் ஒன்பதாம் கிளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டு சுமார் ஒன்பதி னாயிரம் ரூபா பெறுமதி யான உணவுப் பொருட்கள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

# மருதானையில்வெளியேறியதுபோல் கொக்குவிலில் வெளியேறமாட்டோம்

(கொக்குவில்)

உயர்கல்வி அமைச்சின்கீழ் செயற்படும் திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தினால் சுவீ கரிக்கப்பட்ட கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக் கட்டடங்களை மாண வர்கள் மீள வழங்கும் படி கேட்பது யாரோ அவர் களைத் தூண்டி விட்டதன் விளைவு என்று திறந்தவெளிப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் டி. எஸ். விஜய சேகரா கூறினார்.

இப்படித்தான் கொழும்பில் மருதானை தொழில் நுட்பக் கல்லூரியிலும்நாம் இருப்பதை மாணவர் ஆட்சேபித்து எம்மை வெளியேறுமாறு கூறினார்கள் இறுதியாகதாம் அவ்விடத்தை விட்டு வெளியேறி விட்டோம் இவ்வாறு உபவேந்தர் விஜய சேகரா நேற்றுப் பத்திரிகை யாளர் மத்தியில் பேசும்போது (மகாநாடல்ல) தெரிவித்தார்.

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)



# மட்டக்களப்பு மின்சாரசபை 1 1/4 கோடி செலுத்தவேண்டும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபை யினால் இலங்கை மின்சார சபைக்கு செலுத்தப்படவேண் டிய மின் கட்டணம் 1 கோடி 20 இலட்சம் 42 ஆயிரம் 720 ரூபா 42 சதம் செலுத்தப் படாமல் நிலுவையாகவுள்ளது

மேற்படி நிலுவை எதிரொ லியாக மாநகரசபை எல்லைக் கான மின்விநியோகம் எந் நேரத்திலும் துண்டிக்கப்படக் கூடிய சூழ்நிலை உருவாகி யுள்ளது.

மாநகர சபையின் வருவாய் அண்மைக் காலமாக வீழ்ச்சி யடைந்துள்ளதால் மாநகர சபை நிர்வாகம் நிதி நெருக் கடியை எதிர்நோக்கியுள்ள தால்தான் இந்நிலை ஏற்பட் டுள்ளது.

( 4ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு மாகாண உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் என ஓர் புதிய சங்கம் ஒன்று நேற்று ஸ்தாபிக்கப் பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத் தில் உள்ள பத்திரிகைத்துறை யையே தொழிலாக கொண் டிருக்கும் பத்திரிகையாளர் நன்மை கருதியும் இப்பகுதி யில் வெளியாகும் பத்திரிகை களின் தரம் பற்றி ஆராய்வ தற்கெனவும் இச்சங்கம் ஸ்தா பிக்கப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# காணாமல் போன பைல்கள் திரும்பி வந்துள்ளன-

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செயலகத்தி லிருந்து புனர்வாழ்வு நிவார ணம் தொடர்பாக சில மாதங் கள் முன்பு காணாமல் போன பைல்கள் மீளதிரும்பியுள்ள தாகதெரியவருகிறது.

புனர் வாழ்வு நிவாரண கொடுப்பனவுகளில் ஊழல், மோசடிகள் இடம் பெற்றுள் ளதால் மேற்படி பைல் முக் கியமான விடயங்கள் கொண் டிருந்தது.

இப் பைல் திடிரென காணாமல் போய் விட்டது.

(4 ஆம் பக்கத்தொடர்ச்சி)

## உதைபந்தாட்டப் போட்டி

(முஸ்லிம் வட்டாரம்)

றம்ழான் பெருநாளைக் கொண்டாடும் முகமாக ஜின்னா சனசமூக நிலையமும், புதிய சோனகதெரு சனசமூக நிலையமும் இணைந்து நடாத்

(4 ஆம் பக்கத்தொடர்ச்சி)

## பயிலுனர் ஆசிரியர் சங்கம்

(பருத்தித்துறை

வடமராட்சிக் கல்விக்கோ ட்டப் பகுதியில் அண்மையில் நியமனம்பெற்ற பயிலுநர் ஆசிரியர்கள் இணைந்து பயி லுநர் ஆசிரியர் சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர்,

வட-இந்து மகளிர் கல்லூ ரியில் நடைபெற்ற இச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத் தில் தலைவராக திரு. எஸ். தர்மலிங்கமும் செயலாளராக திரு. கே. ஸ்ரீசந்திரனும் பொ ருளாளராக செல்விரீ. வசந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திறந்த பல்கலைக் கழகத்திற்கு தோழிநுட்பமாணவர் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல் லூரி மாணவர்கள் திறந்த பல் கலைக்கழக துணைவேந்தர் டி. எஸ். விஜேயசேசரா அவர் கள் நேற்று யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்துக்கு நேற்று விஜயம் செய்திருந்த போது திறந்த பல்கலைக் கழ கம் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி ஆதனத்தில் அமைந் திருப்பது குறித்து தமது ஆட் சேபனையை தெரிவித்து ஒரு மகஜர் சமர்ப்பித்தனர்.

தொடர்ந்து தொழில் நுட் பக் கல்லூரி மாணவர்கள் துணைவேந்தர் விஜயசேகரா வுடன் கலந்துரையாடல்ஒன்று ஒழுங்குசெய்திருந்தனர். இதில்

(4ஆம் பக்கம் பார்க்க)

பயிலுனர் ஆசிரியர்

# குடும்பங்களுக்கு வறுமை நிவாரணமில்லை

(மட்டக்களப்பு)

பயிலுனர் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளவரின் குடும்பத் திற்கு இனிமேல் வறுமை நிவா ரணம் (உணவு முத்திரை) இல்லை.

வறுமை நிவாரண ஆணை யாளரின் சுற்றறிக்கையில் 5ஆம் கட்ட விநியோகம் ரூபா 700ற்கு கீழ் வருமானம்பெறும் குடும்பங்களுக்குவழங்கப்படல் வேண்டுமெனகூறப்பட்டுள்ளது

இதன் பிரகாரம் முன்பு இந் நிவாரணம் பெற்ற ரூபா 1000 அலவன்ஸ் ஆசிரியர் பயிலுநர் கள் புகையிரத கடவை ஊழி யர்கள் குடும்பம் பொலிஸ், ஆயுதப்படைவீரர்களின் குடும் பம் என்பன பெற தகுதிஇழந் துள்ளன.

மட்டக்களப்பில் மேற்படி குடும்பங்கள் தமக்கு வழங்கப் படுவது தொடரவேண்டும்என மனு செய்துள்ளன. சமூக சேவைகள் உதவிப் பணிப்பா ளர் திரு. இரா. தியாகராசா இது குறித்து வறுமை நிவா ரண ஆணையாளரின் கவனத் திற்கு கொண்டு வந்துள்ளார்.

(37)

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள்

# ஈ. பி. ஆர்.எல்.எவ் குழுவினரின் மின்சார பாக்கி 86000 ரூபா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் ஈ. பி. ஆர். எல். எப், ரெலோ, ஈ. என். டி. எல். எவ், ஆகியன பயன் படுத்திய தனியார் கட்டிடங் களுக்கான மின்சாரக் கட்ட ணம் ரூபா 85, 433 சதம் 61 நிலுவையாகியுள்ளது.

ஈ. பி. ஆர். எல்.எவ் 9மின் இணைப்புகள் 15, 915 ரூபா 60 சதம்.

ஈ. என். டி. எல். எவ். 3 இணைப்புகள் 24, 717 ரூபா 43 சதம்

டெலோ 3 இணைப்புகள் 13, 795 ரூபா 18 சதம்.

ஈரோஸ் 3 இணைப்புகள் 18,082 ரூபா 25 சதம்

மேலும் மேற்படி இணைப்பு களுடன் வேலைத்தள இணை ப்பு மின் கட்டணம் 12, 923 ரூபா 15 சதம் ஆகும்.

அதேநேரம் ஈ.பி.ஆர்.எல். எவ். நீர்வரி ரூபா 7902 சதம் 50 நிலுவையாக உள்ளதாக மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 37

# போரதீவு தபாற்கந்தோருக்கு இன்னும் தொலைபேசி இல்லை

வெல்லாவெளி உதவி அர சாங்க அதிபர் பிரிவில் இயங் கும் ஒரேயொரு முதலாம்தர தபாற்கந்தோர் பெரியபோர தீவிலிருக்கின்றது. கடந்தகால வன்செயல்களின்போது இதற் கான தொடர்புக்கம்பிகளும் தொலைபேசிக் கருவிகளும் களவாடப்பட்டன. போக்கு வரத்துக் கஷ்டங்கள் நிறைந்த இப்பகுதி மக்கள் பல வருடங்க ளாக தொலைபேசி வசதி இல் லாமல் பெரிதும் கஷ்டப்படு கின்றனர். நிலைமை வழமைக் குத் திரும்பி பல மாதங்களாகி யும் குறித்த தபாற்கந்தோரில் தொலைபேசி வசதி ஏற்படுத் தப் படாதது குறித்து பொது மக்கள் அதிருப்தி தெரிவிக்கின் றனர். இதேபோல் மண்முனை தென் ஒருவில் பற்றுஉதவி அர

(4ஆம் பக்கம் பார்க்க)

அன்பான வாசக நேயர்களுக்கு

## ஓர் அறிவித்தல்

உங்கள் அபிமானத்திற்குரிய ஈழநாதம் பத்திரிகையின் ஞாயிற்றுக்கிழமை வெளியீடான "ஞாயிறு மலர்" அடுத்தவாரம் முதல் வெள்ளிமஞ்சரியாக வெள்ளிக்கிழமை தோறும் பல்சுவை அம்சங்களையும் தாங்கி வெளிவரவுள் ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

- ஆசிரியர்

## விளம்பரம்

### விற்பனைக்கு

சீயாக்காய், அரிசி, பயறு வந்தயம் ஆகிய நான்குந் க்கைப் பொருட்கள் அடங் யெ சீயாக்காய் பவுடர் எங் கிளிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்MGM.NO. 777 K. K. S. ROAD, JAFFNA.

### சஞ்சிகை ஓடர்

மீண்டும் ஈழநாதம், மங்கை, அம்புலி மாமா, ஆனந்த விகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினமாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன்,யூனியர் போஸ்ட், இந்தியாருடே (தமிழ் – ஆங்கிலம்), FRONT LINE, SPORT STAR மற்றும் ஏனைய எல்லா இலங்கை, இந்திய சஞ்சிகைகளும் மீண்டும் பதிவு செய்யப்படுகின்றன V.P.Pயிலும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ காந் புத்தகசாலை, இல. 165, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

(B.825)

யாழ் நகரில் சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள DILKA WATCH WORKS, Opposite Bus and, Jaffna (குறிப்பு) சகல சீக்கோ' சிற்றிசன் உதிரிப்பாகங்களும் கையிருப்பில் உண்டு.

JAFFNA CHESS ACADEMY

Learning or to Improve your chess play call at 161, Brown Road, JAFFNA.

(R/436)

### தவறி விட்டது

திரு.இ.இரத்தினதுரை என்பவரது காணி உறுதியும் பெறுமதி வாய்ந்த ஆவணங்களும் 27-04-1990 கச்சேரி நல்லூர் வீதியில் தவற விடப்பட்டு விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 29, நாயன்மார் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்தசன்மானம் தரப்படும். R/440.


# மேதினி எங்கும் மேதினக் கொண்டாட்டம்

மே தினம்;

உழைக்கும் மக்களின் உரிமை விழா!

தொழிலாளியின் திருநாள்! பாட்டாளியின் பெருநாள்! உலகின் பாடுபட்டு உழைக்கும் பாட்டாளிகள் எல்லோருமே மே தினத்தைப் பெருமிதத்துடன் கொண்டாடுகிறார்கள்.

மேதினத்தைக் கொண்டாட இடதுசாரிக் கட்சிகளுக்கு மட்டுமே உரிமை இருப்பதாக எண்ணுவது தவறு.

சிக்காகோவில் 1886-ல்எட்டு மணித்தியால வேலை கோரி போராட்டம் முதன்முதலில் நடந்தது. அவர்களில் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதன் பயனாக எட்டு மணித்தியால நேரமே வேலை என்ற உரிமையையும் தொழிலாளர் பெற்றனர். அன்று சோவியத் ரஷ்யா உருவாக்கப்படவில்லை. அன்று நிலவியது ஜார் மன்னர் ஆட்சி.

இன்று உலகெங்கும் மே தினத்தைக் கொண்டாடுகிறார்கள் - உழைக்கும் மக்களின் நலன்களுக்காக - உரிமைகளுக்காக – விடுதலைக்காக.

ஒரு நாளில் எட்டு மணி நேரமே உடலுழைப்பு. எட்டு மணி நேரம் ஓய்வு. எட்டுமணி நேரம் குடும்பத்துடன், நண்பருடன், சுற்றத்துடன் குதூகலமாக வாழ்வது.

இந்த உரிமைத் திட்டத்தை விளக்குவது மே தின விழா.

உடல்நலிய உழைப்பவனுக்கு இத்திட்டத்தை நினைவுபடுத்தி ஆண்டு தோறும் கொண்டாடப்படுவது மே தின விழா.

1889ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் கூடிய சர்வதேச சமதர்ம மாநாட்டில், மே முதல் நாளை, உலகத் தொழிலாளரின் விடுமுறை நாளாகக் கொண்டாட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்றுமுதல் மே முதல் நாள் உலக நாடுகளிலெல்லாம் பாட்டாளிகளின் விடுதலை நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஜார் மன்னன் கொடுங்கோலாட்சிக் காலத்தில் பயங்கரமான அடக்குமுறை இருந்தும்கூட, மேதின ஊர்வலம் இடம் பெற்றது. பொதுக்கூட்டம் நடத்தினர்; பொலிசாரின் தடியடிக்கும் இராணுவத்தின் குண்டுகளுக்கும் மக்கள் இலக்காயினர்.

ஜார் ஆட்சியை ஒழிக்க மே தின விழாவைப் பயன்படுத்தி புரட்சிக்கு வித்திட்டவர் லெனின்.

ஜார் ஆட்சி ஒழிக்கப்பட்டு பாட்டாளிகள் வெற்றி கண்ட பின்னர் 1917ஆம் ஆண்டில் மேதின விழா சுதந்திரமாகக் கொண்டாடப்பட்டது, சோவியத் ரஷ்யாவிலே.

ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளர் தம் தம் பிரச்சினைகளை, மேதின விழாவின் போது முன் வைக்கின்றனர்.

விலைவாசி, கூலி உயர்வு, தொழிலாளர் நலன், மனித உரிமை, அரசியல் உரிமை, அணுவாயுத ஒழிப்பு, ஜனநாயகம் முதலியன ஆராயப்படும். தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

அடிமைப்பட்டுள்ள நாடுகளில் மக்கள் விடுதலை பெற, சுதந்திரமாக வாழ - உரிமை முழக்கமிட – போர் முரசு கொட்ட மேதினம் பயன்படுகிறது.

எமது நாட்டிலே வாழும் இருபெரும் இனங்கள் மேதின விழாவின் போது முன் வைக்கும் பிரச்சினைகளில் பெரியதொரு வேறுபாடு உள்ளது.

சிங்கள இனத்திற்கு முதலாளி – தொழிலாளி பிரச்சினை, அரசியல் உரிமைகள், சம்பள உயர்வு, தமிழ்பேசும் இனத்திற்கு சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை.

தமிழ்பேசுமினம் தன் நாட்டின் - தமிழ் ஈழத்தின் – விடுதலையை முன்வைத்து மேதினத்தைக் கொண்டாடுகின்றது. இக்காரணத்தால் மற்றெந்தக் கட்சிக்கும் இல்லாத குறிக்கோள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கு இருக்கிறது. தமிழ் ஈழத்தில் மேதினத்தைக் கொண்டாடும் எங்கள் சிந்தனையெல்லாம் ஒன்றே ஒன்றுதான். தமிழ் ஈழ விடுதலைதான். இந்த இலட்சியத்துடனே தான் நாம் மே தினத்தில் ஒன்று கூடியுள்ளோம். இந்த இலட்சியம் நிறைவேற நாம் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தவே மே தினத்தைப் பயன்படுத்துகின்றோம்.

விடுதலை! ஆம் ஈழத்தில் தமிழ்பேசுமினம் சுதந்திரமாக வாழவேண்டும். ஆளும் இனம் எம்மீது மேற்கொண்டு வரும் அநீதிகள் நிரந்தரமாக அகல வேண்டுமானால் தமிழ் இனம் ...களாட்சி கண்ட பின்னர் மே தினத்தைச் சுதந்திரமாகக் கொண்டாடியது போன்று நாமும் கொண்டாடும் நாள் வரும்.

அந்த சுதந்திர மேதினம் என்று வரும் ஈழத் தமிழர் வாழ்வில்!

# கல்விச் சட்டமும் சிறுவர் தொழிலாளர்களும்

பொருளாதார முன்னேற்றம் மனித சாதனத்தையே சார்ந்துள்ளது. மனித சாதனத்தைப் பயன்படுத்தும் முறையில்தான் பொருளாதாரத்தின் வளர்ச்சியும் தங்கியுள்ளது ஆனால் இலங்கை உட்பட சில வளர்ந்து வரும் நாடுகளில் மனித வளத்தை செயல் திறமான பயன்பாட்டில் உபயோகிப்பதில்லை. மாறாகத் தொழில்துறைகளில் தேர்ச்சி பெறாது, சிறுவர்களை வீடுகளிலும், வியாபார ஸ்தலங்களிலும் வேலைக்கமர்த்தும் மரபொன்று வடக்கிலும், கிழக்கிலும், தீவின் ஏனைய பகுதிகளில் சில சமுதாய அமைப்பு மட்டங்களில் காணப்படுகின்றது. தேர்வுகளில் சித்தியடையாத மாணவர்களும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் கடைகளிலும், வீடுகளிலும் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். இவ்வகையான சிறார்கள் தொழில் சட்டங்களுக்கமையவும் ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் சாசனத்துக்கமையவும் வேலை வாய்ப்புகளுக்கு ஏற்றவர் அல்லர். இக் கருத்தையே மனிதநேயவாதிகளும் கொண்டிருக்கிறார்கள். வளர்ந்தவர்களையும், துறைசார்ந்த தொழிலாளர்களையும் வேலைக்கமர்த்துவதினால் ஊதியமாகப் பெருந்தொகையான பணத்தைக்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. குறைந்த ஊதியத்தில் அதிக வேலையைப் பெறலாம் என்ற நம்பிக்கையிலும் அனுபவத்திலும் பலர் 5வயது முதல் 18 வயதுக்கிடையிலான சிறார்களை வேலைக்கமர்த்துவது வழக்கமாகிவிட்டது. இப்படியான தன்மையை நாம் பலசரக்குக் கடைமுதல் பெரிய நகைக் கடை வரை காணக் கூடியதாகவுள்ளது. பெற்றோரும் தம் வறுமைகாரணமாக வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத நிலையில் தமது பிள்ளைகளை வியாபார நிலையங்களிலும், தனியார் வீடுகளிலும் வேலைகளுக்கு விட்டுவிடுகிறார்கள். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் காலப்போக்கில் இப்படியான சம்பவங்கள் சமுதாயத்துக்கே நஞ்சாகி விடுகிறது. சிறுவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் வியாபார நிலையங்களிலிருந்தும் வீடுகளிலிருந்தும் தூக்கி எறியப் படுகிறார்கள். வேலையை இழந்த நிலையில் இவர்கள் வீதிகளில் அலைவதால் களவு வழிப்பறி மோசடி போன்ற சமூகப்பிரச்சினைகளும் தலை தூக்குகின்றன.

> ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகு ஏற்பட்ட வியாபாரப் பொருளாதார அமைப்பில் பெருந்தோட்டங்களில் வேலை செய்ய வந்த இந்தியர்களின் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்களே வீடுகளிலும், வேலை நிலையங்களிலும் தொழிலுக்கு அமர்த்தப்பட்டனர். மலையகத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியும், உற்பத்தி உறவு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களினாலும் இன்று பெரும்பாலும் பொருளாதார வரிசையில் குறைந்த வருமானம் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளைப் படிப்பிக்கிறோம் என்ற போர்வையில் வீட்டு வேலைகளுக்கும், வியாபார நிறுவனங்களிலும் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

## அடிமை முறை

பிள்ளைகளை வீடுகளிலும், வியாபார ஸ்தாபனங்களிலும் வேலைக்கமர்த்துவதும் ஒரு வகை அடிமை முறையாகும். இவர்கள் தமது குடும்பங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு எஜமான் வீட்டில் அடிமைகள் போல் நடத்தப் படுகிறார்கள். வீடுகளிலும் கடைகளிலும் இராப் பகல் மாடுபோல் வேலை செய்கிறார்கள். இலங்கையில் 18 வயதுக்குக்குறைந்தவர்களைத் தொழிலில் அமர்த்தப்படாது என்ற சட்டம் சரியாக அமுல் படுத்தப் படுவதில்லை. வேலைக்கமர்த்தப்படும் சிறார்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. கடைகளில் கடமை புரியும் சிறுவர்கள் எட்டு மணி நேரங்களுக்கு மேல் வேலை செய்வதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. மே தினத்தை கொண்டாடப் போகும் நாம் இன்றுள்ள சூழ் நிலையில் இதைப்பற்றிச் சிந்திக்காமல் இருக்கக்கூடாது

குழந்தைகளுக்கு வேண்டிய தாயன்பு, உணவு, உறையுள், உடை, ஓய்வு போன்ற அடிப்படைத் தேவைகளே மறுக்கப் படுகின்றது. தாயின் அரவணைப்பின்றி வாழும் பிள்ளைகள் சமூகமயமாக்கப்படுவது கஷ்டமான காரியமாகும். உளவியல் ரீதியான இப்பிரச்சினை எதிர்காலத்தில் ஒரு சமூகப் பிரச்சினையாக வளரலாம்.

## கல்வியும் தொழிலும்

வேலைகளுக்கு ஆட்களை அமர்த்தும்போது அந்தந்த வேலைகளுக்குப் பொருத்தமானவர்களை அமர்த்திக் கொள்ளவேண்டும். பள்ளிப் பராயத்தில் இருக்கும் சிறுவனைப் பலசரக்குக் கடைகளிலும், வீடுகளிலும், வேறு வியாபார நிறுவனங்களிலும் வேலைக்கமர்த்துவது சமூகத்தில் சிறுவர்களுக்குரிய உரிமைகளை மறுப்பதாகும்.

இலங்கையில் முன் எப்போதும் கட்டாயக் கல்விச் சட்டம் இருந்ததில்லை. ஆனால், சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்படி 14 வயதுக்குக் குறைந்தவர்கள் சட்டாயமாகக் கல்வியைப் பெற்றாக வேண்டும். இல்லையேல் பெற்றோர் அதற்குப் பொறுப்பானவர்கள் எனக் கருதித் தண்டனைக்குள்ளாவார்கள். சட்டம் என்ற வகையில் இது வரவேற்கப்பட வேண்டியது என்றாலும், இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஏற்பாட்டை உருவாக்கிக் கொள்ளுதல் அவசியமாகும். நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனக் குறைவாக இருந்தால், தமிழ் சிறுவர்களின் எதிர்காலம் வீணாக்கப்பட்டு சீரழிவதற்கு நாமே பொறுப்பு என்பதை மறந்து விடக்கூடாது. சிறார்கள் தங்கள் கல்வித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், உற்பத்தித் திறனை வளர்க்கவும் நாம் ஓர் திட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டும்.

பொருளாதார வகையில் பின்தங்கிய சமூக அமைப்புக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

ஈ. ஆர். திருச்செல்வம்


## இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சாரசபையின்பிரதி பொது முகாமையாளரின் அலுவலகம் 1990-ம் ஆண்டு மே மாதம் முதலாந் திகதி தொடக்கம் காங்கேசன்துறை வீதி இல. 536/1 இல் உள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டு இருப்பதாக சகலருக்கும் அறிவிக்கப்படுகிறது.

வே. கந்தசாமி

### யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6 30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.30
ஜெயசங்கர், முத்துராமன்,

3 வம் ஆண்டு நினைவஞ்சலி!

ACADEMY

Learning or to Improve your chess play call at
161, Brown Road,
JAFFNA.

(R/436)

## தவறி விட்டது

திரு.இ.இரத்தினதுரை என்பவரது காணி உறுதியும் பெறுமதி வாய்ந்த ஆவணங்களும் 27-04-1990 கச்சேரி நல்லூர் வீதியில் தவற விடப்பட்டு விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 29, நாயன்மார் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்தசன்மானம் தரப்படும். R/440.

வது மே தின விழா.

1889ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் கூடிய சர்வதேச சமதர்ம மாநாட்டில், மே முதல் நாளை, உலகத் தொழிலாளரின் விடுமுறை நாளாகக் கொண்டாட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்றுமுதல் மே முதல் நாள் உலக நாடுகளிலெல்லாம் பாட்டாளிகளின் விடுதலை நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஜார் மன்னன் கொடுங்கோலாட்சிக் காலத்தில் பயங்கரமான அடக்குமுறை இருந்தும்கூட, மேதின ஊர்வலம் இடம் பெற்றது. பொதுக்கூட்டம் நடத்தினர்; பொலிசாரின் தடியடிக்கும் இராணுவத்தின்

...தினத்தைக் கொண்டாடுகின்றது. இக்காரணத்தால் மற்றெந்தக் கட்சிக்கும் இல்லாத குறிக்கோள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கு இருக்கிறது. தமிழ் ஈழத்தில் மேதினத்தைக் கொண்டாடும் எங்கள் சிந்தனையெல்லாம் ஒன்றே ஒன்றுதான். தமிழ் ஈழ விடுதலைதான். இந்த இலட்சியத்துடனேதான் நாம் மே தினத்தில் ஒன்று கூடியுள்ளோம். இந்த இலட்சியம் நிறைவேற நாம் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தவே மே தினத்தைப் பயன்படுத்துகின்றோம்.

விடுதலை! ஆம் ஈழத்தில் தமிழ் பேசுமினம் சுதந்திரமாக வாழவேண்டும். ஆளும் இனம் எம்மீது மேற்கொண்டு வரும் அநீதிகள் நிரந்தரமாக அகல வேண்டுமானால் தமிழ் இனம் ஒரு தனி அரசை உருவாக்க வேண்டியது அவசியமாகும்.

ரஷ்சிய மக்கள் ஜார் மன்னன் ஆட்சியை ஒழித்து மக்

...ஏற்படுகிறது. குறைந்த ஊதியத்தில் அதிக வேலையைப் பெறலாம் என்ற நம்பிக்கையிலும் அனுபவத்திலும் பலர் 5வயது முதல் 18 வயதுக்கிடையிலான சிறார்களை வேலைக்கமர்த்துவது வழக்கமாகிவிட்டது. இப்படியான தன்மையை நாம் பலசரக்குக் கடைமுதல் பெரிய நகைக் கடை வரை காணக் கூடியதாகவுள்ளது. பெற்றோரும் தம் வறுமைகாரணமாக வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாத நிலையில்

வியாபார ஸ்தாபனங்களிலும் வேலைக்கமர்த்துவதும் ஒரு வகை அடிமை முறையாகும். இவர்கள் தமது குடும்பங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு எஜமான் வீட்டில் அடிமைகள் போல் நடத்தப் படுகிறார்

குழந்தைகளுக்கு வேண்டிய தாயன்பு, உணவு, உறையுள், உடை, ஓய்வு போன்ற அடிப்படைத் தேவைகளே மறுக்கப் படுகின்றது. தாயின் அரவணைப்பின்றி வாழும்

களாட்சி கண்ட பின்னர் மே தினத்தைச் சுதந்திரமாகக் கொண்டாடியது போன்று நாமும் கொண்டாடும் நாள் வரும்.

அந்த சுதந்திர மேதினம் என்று வரும் ஈழத் தமிழர் வாழ்வில்!

- வேரற்கேணியன்

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி சிவஞானசுந்தரம்
தேவவர்த்தினி
( தேவா )

(சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

அன்னை மடியில் : 12 - 08 - 1970
ஆண்டவன் அடியில் 02 - 05 - 1987

திதி : 29 - 04 - 1990

அன்புத் தேவாவே ஆசை மகளே
பண்பின் திருவுருவே பாசமுள்ள சோதரியே
ஆண்டு மூன்று ஆனாலும் ஆறாது எம் துயரம்
என்றும் நிலைத்து இருப்பாய் எம் நெஞ்சமதில்
தேவாவே
எம்பிரான் அருள் வேண்டி நிற்கின்றோம்
நின் ஆத்ம சாந்திக்காக !

ஏழாலை கிழக்கு
ஏழாலை.

அப்பா, அம்மா,
அக்கா, அண்ணா, தம்பி.

(R/433)

## அக்குபங்சர் வகுப்புகள்

பயிற்சி வகுப்புகள் யாவும்
1-05-1990 இல் ஆரம்பமாகின்றன.

1. அக்குபங்சர் பயிற்சி M. Ac. F.
(ஆங்கில மொழி மூலம்)
(சர்வதேச பல்கலைக்கழகப் பரீட்சை)

போதனாசிரியர்
**Dr. V. S. K. சிவலோகநாதன்**

2. அக்குபங்சர் பயிற்சி M. Ac. A.
(தமிழ் மொழி மூலம்)
(இலங்கை அக்குபங்சர் சங்கப் பரீட்சை)

போதனாசிரியர்
**Dr. V. P. சுந்தரராஜன்**

பிரதம பரீட்சையாளர்
பேராசிரியர்
**Dr. அன்ரன் ஜெயசூரியா**
அவர்கள்

வைத்தியர்களும், வைத்திய மாணவர்களும் மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் வகையில் வகுப்புகள் நடைபெறும்.

விபரங்களுக்கு:
**சாயி மெடிக்கல் அக்கடமி**
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(B/861)

## இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சாரசபையின்பிரதி பொது முகாமையாளரின் அலுவலகம் 1990-ம் ஆண்டு மே மாதம் முதலாந் திகதி தொடக்கம் காங்கேசன்துறை வீதி இல. 536/1 இல் உள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டு இருப்பதாக சகலருக்கும் அறிவிக்கப்படுகிறது.

வே. கந்தசாமி
பிரதி பொது முகாமையாளர்
இலங்கை மின்சாரசபை
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.
1) 025-2840
2) யாழ்ப்பாணம் 2284

B/830

## உத்தியோகத்தர்கள் தேவை

1. அலுவலகச் செயலாளர் (OFFICE SECRETARY)

தகமை: அலுவலக நிர்வாகத்தில் அனுபவமுள்ள ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள்.

சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

2. ஆராய்ச்சி உதவியாளர்கள் (RESEARCH ASSISTANTS)

தகமை: விஞ்ஞான, கலைப்பட்டதாரிகள் அல்லது புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளில் அனுபவமுள்ளவர்கள்.

குறிப்பிட்ட திட்டங்களை தயாரிப்பதற்கேற்ற நிதி ஒதுக்கித்தரப்படும்.

3. தட்டெழுத்தாளர் (TYPIST)

தகமை: ஆங்கிலம், தமிழ் தட்டச்சு வேலைகளில் தேர்ச்சி பெற்ற ஆண்கள்.

சம்பளம்: பேசித்தீர்மானிக்கப்படும்.

சகல விபரங்களும் அடங்கிய விண்ணப்பங்கள் கீழே உள்ள முகவரிக்கு 10. 05. 90 க்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**புனர்வாழ்வுப் பிரிவு**
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
207, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

(R/443)

## யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6 30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.30
ஜெயசங்கர், முத்துராமன், லட்சுமி, நாகேஸ் நடித்த
**கண்ணன் வருவான்**
(புதிய பிரதி)

**மனோகரா - (யாழ்**
தினசரி 4.00, 6.45, 9.4 5
ஜெய்சங்கர் ராஜஸ்ரீ நிர்மலா நாகேஸ் நடித்த
**நீதிதேவன்**
(புதிய பிரதி)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

**வெலிங்டன் யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-30
சனி,ஞாயிறு 10-30, 2-30
6-30, 9-30
ரகுமான் - நதியா
**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-30
பிரபு-அமலா
**பூ பூவா பூத்திருக்கு**
(கடைசி வாரம்)
(B/860)

உலக அரசியல் நோக்கு

# நேபாளத்தின் புதிய அரசு இந்தியாவுடன் உறவை நீடிக்குமா?

நேபாளத்தில் முதலாவது பல கட்சி அரசு பதவி ஏற்றுள்ளது. மன்னர் பிரேந்திரா பதவிப் பிரயாணம் செய்து வைத்தார். கட்சி சார்பற்ற முப்பது ஆண்டுகள் பழமைவாய்ந்த பஞ்சாயத்து ஆட்சிமுறை நீங்கி இப் பலகட்சி ஆட்சிமுறை ஏற்பட்டுள்ளது. இதன் முதல் பிரதமராக நேபாள காங்கிரஸ் கட்சித் தலைவர் கிருஷ்ணபிரசாத் பட்டாராய் பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

அமைச்சர்களை மன்னர் பிரேந்திரா பதவிப் பிரமாணம் செய்து வைத்துள்ளார்.

மன்னர் பிரேந்திரா நியமித்த அமைச்சர்களை புதிய பிரதமர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

## மக்கள் போராட்டம்

இம்மாத ஆரம்பத்தில் நேபாளத்தில் நடைபெற்ற மக்கள் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. அதன் பயனாகவே முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையிலிருந்து வந்த பஞ்சாயத்து முறையிலான ஆட்சி முறை நீக்கப்பட்டு பல கட்சி ஜனநாயக ஆட்சிமுறை வகுக்கப்பட்டுள்ளது.


இந்தப் போராட்டங்களில் நூற்றுக்கணக்கான உயிர்கள் கள் குறைக்கப்பட வேண்டும் பலியாகிய போதிலும் கலைக்சாது மக்கள் தமது போராட்டத்தை வழிநடத்திச் சென்றமையால் அங்கு ஜனனாயகத்திற்கு புத்துயிர் கிடைத்துள்ளது என்றால் அதுவே உண்மை.

ஆறு மாத காலத்துக்கு மேலாக பஞ்சாயத்து ஆட்சி முறையை எதிர்த்துப் போராடி சிறையில் இடப்பட்ட பல கைதிகள் மன்னரால் எதுவித நிபந்தனையும் இன்றி விடுவிக்கப்பட்டனர். இது போதாது ஆட்சி முறையில் மாற்றம் வேண்டும். மன்னருக்குள்ள அதிகாரங் என்று ஐந்து எதிர்க் கட்சிகளைக் கொண்ட கூட்டு முன்னணி மக்களை வழிநடத்திய போராட்டத்திற்கு வெற்றி கிடைத்துள்ளது. மன்னர் படியிறங்கி வந்து தனது ஆட்சியையே மாற்றிஅமைத்துள்ளார்.

இதனை இம் மாதம் எட்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நேபாளத்தின் அரசுக்குச் சொந்தமான நேபாள வானொலியும் தொலைக்காட்சியும் அறிவித்தபோது மக்கள் வெற்றிக் களிப்படைந்தனர். வெற்றிப் பெருமிதத்துடன் தமது போராட்ட உக்கிரத்தைத் தணித்துக் கொண்டனர்.

## கடந்த காலப் போராட்டம்

1985 ஆம் ஆண்டு ஆரம்ப கட்டத்திலிருந்த நேபாள மன்னராட்சிக்கு பல வடிவங்களில் நெருக்குதல்கள் ஏற்பட்டு வந்துள்ளது. [இதில் நேபாள காங்கிரஸ்] கட்சி



மன்னர் பிரேந்திரா

அவ் வருடம் மே மாதத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தியது. இக் கட்சி ஒரு மிதவாதக் கட்சி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் சற்று தீவிரவாத இடதுசாரி கட்சிகள் 1985 ஆம் வருடத்தில் நேபாளத்தில் மன்னர் ஆட்சியை எதிர்த்து பல சிறு சிறு வன்முறையில் ஈடுபட்டு வந்துள்ளன. இதில் முன்னாள் நேபாள சட்டசபை உறுப்பினர் ராம் ராஜா பிரசாத் தலைமையில் ஒரு சிறு குழு இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இருந்தவாறு நேபாளத் தலைநகர் காட்மண்டு உட்பட பல முக்கிய நகரங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கு உரிமை கோரியிருந்தனர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறிப்பாக மன்னர் பிரேந்திராவின் அரண்மனை வாசல் உட்பட தேசிய சட்டசபை அலுவலகர், உல்லாச பிரயாண ஹோட்டல்கள் முதலியவற்றில் நிகழ்ந்துள்ளது. இதேபோல் ஏனைய பல நகாங்களில் மூக்கிய பூங்காக்கள் உட்பட பல மையங்களில் நிகழ்ந்தது.

இத்தகைய ஒரு ஹோட்டல் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் மிக முக்கியமாக குறிப்பிடக்கூடியது "அன்ன பூரணா" ஹோட்டல் குண்டு வெடிப்பு ஆகும். இது பரம்பரை பரம்பரையாக நேபாள மன்னர்களின் சொத்தாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதாகும். நேபாளத்துக்குச் செல்லும் உயர் விருந்தாளிகள் உட்பட வசதி மிக்க உல்லாசப் பிரயாணிகள் இங்கு தங்கிச் செல்வது மழக்கமாகும். இந்நிகழ்வுகள் உல்லாச பிரயாண துறையையே நம்பியிருக்கும் நேபாள அரசுக்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாக என்றும் இருந்து வந்தது.

ஆனாலும் இத்தகைய பாரிய தாக்கங்களை விளைவிகக்க் கூடிய குண்டுவெடிப்புகள் நிகழ்த்தப்பட்ட போதிலும், ஆட்சியைக் கவிழ்க்கும் விடயத்நில் இறுதியாக மக்கள் போராட்டமே வெற்றி கண்டுள்ளதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## இந்தியா - நேபாள உறவு

தற்போது நேபாளத்தில் நடைபெற்றுள்ள இந்த ஆட்சி மாற்றத்திற்கு இந்தியப் பிரதமர் வி. பி. சிங் வரவேற்பு தெரிவித்துள்ளதுடன், இந்தியா நேபாளத்துடன் புதிய உறவுகளை வளர்த்துக் கொள்ள விரும்புவதாக அவர் அண்மையில் புதிய நேபாள பிரதம மந்திரி கிருஷ்ணபிரசாத் பட்டாராய்க்குச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளமை பற்றி சற்று நோக்குவோம்.

நேபாள நாட்டிற்கு நீண்ட காலமாக இந்தியாவுடன் மத, கலாசார, பொருளாதார உறவு ஒன்றைவிட்டு, ஒன்று பிரிக்க முடியாத வகையில் இருந்து வந்தது. இதுமட்டுமல்லாது இராணுவ, ராஜதந்திர ரீதியிலும நேபாளம் இந்தியாவிற்குப் பெரும் உடந்தையாக இருக்க வேண்டிய நிலையிலும் உள்ளது என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

அதற்கேற்றவாறு புவியியல் ரீதியாக நேபாளம் தனது பொருளாதார, போக்குவரத்து துறைகளில் இந்தியாவுடன் சேர்ந்திருக்க வேண்டிய நிலையில் உள்ளது.

இதன்படி 1950ஆம் ஆண்டு வர்த்தக, பொருளாதார மற்றும் போக்குவரத்து உடன்படிக்கை ஒன்று இந்தியாவுக்கும் நேபாளத்துக்குமிடையில் கைச்சாத்தானது. இவ்வுடன்படிக்கைக்கு முன்பு 1959 ஆம் ஆண்டு நேபாளத்தின் பாதுகாப்பையும், இந்தியாவின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவற்கென்றே ஒரு நட்புறவு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கை இரு நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நேபாள நாடு தனக்குத் தேவையான ஆயுதங்கள், வெடிமருந்துகள் அனைத்தையும் இந்தியாவின் அனுசரணையுடன மட்டுமே தனது தேவைகளுக்குப் பெற்றுக்கொள்ளப்படவேண்டும் என்பதாகும். அத்துடன் இரு நாட்டு இராணுவ நிலைகள் பற்றி ஒன்றுக்கொன்று ஒழிவு மறைவின்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும் என்பது அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த தசாப்தத்தின் இறுதிப் பகுதியில் நேபாளம் இந்த உடன்படிக்கையை மீறும் வகையில் சீனாவிடமிருந்து விமான எதிர்ப்பு ஆயுதங்கள் உட்பட பல நவீன ரக ஆயுதங்களையும், எலக்ரோனிக் உபகரணங்களையும் இராணுவ வாகனங்களையும் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து இந்தியாவுக்கு நேபாளத்தின் மீது சினம் எழுந்தது.

நேபாள அரசு இத்துடன் நின்றுவிடாது. பல வர்த்தக உடன்படிக்கைகளையும் சீனா நாட்டுடன் செய்து கொண்டது இந்நிகழ்வானது தனது வட பிராந்தியத்தில் தனக்கெதிரான ஒரு மையம் உருவாகுவலத இந்தியாவுக்கு உணரக்கூடியதாக இருந்தது.

முன்பு திபெத்தில் ஒரு பகுதியை இழந்ததுபோல மீண்டும் அத்தகைய ஒரு நிகழ்வு நடந்துவிடக்கூடாதே



என்ற முன்னெச்சரிக்கையுடன் நேபாளத்திற்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக போக்குவரத்து பாதைகளை மூடிவிட்டது. இதனால் நேபாளம் பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி இருந்தது.

இவ்விடத்தில் இன்னும் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். பல கட்சி ஆட்சி முறை நேபாளத்தில் வரவே கூடாது. அப்படி சட்டசபை தேர்தல்களில் அரசில் கட்சிகளை பங்கு பற்ற அனுமதித்தால் அது வெளிநாடுகளின் தலையீட்டை அதிகரிக்கச் செய்யும் என்று காலாகாலம் பல கட்சி ஜனநாயகம் கோரி போராட்டங்கள் இடம்பெற்றபோது நேபாள மன்னர் பிரேந்திரா கூறிவந்தார்.

இவ்வாறு மன்னர் கூறியது குறிப்பாக இந்தியாவையே என்பது தெளிவாகிறது. காரணம் நேபாளத்துக்கெதிராக தலைமறைவு இயக்கங்கள் நடத்தி வந்தவர்களுக்கு இந்திய எல்லையிலேயே முகாமகள் அமைந்துள்ளன. அத்துடன் தலைமறைவு இயக்கத்தவர்களது தலைமையகப் புதுடில்லியில் இருந்தமையும் காரணமாகும்.

ஆகவே நேபாளத்தில் ஏற்பட்ட உள்நாட்டு பொருளாதார நெருக்கடியே அங்கு பலகட்சி ஜனநாயக முறை ஆட்சி ஏற்பட வேண்டும் என ஏகமனதாக மக்கள் போராட்டத்தில் இறங்கியதற்கு காரணம் என இந்தியா எண்ணியுள்ளது.

இதையே இந்தியப் பிரதமர் வீ. பி. சிங அவர்கள் இந்தியாவின் பொருளாதார தடைகள் நேபாளத்தின் பல கட்சி ஜனநாயகத்தின் வெற்றிக்கு உதவியுள்ளது என்றதுடன் புதிய அரச நிர்வாகத்துடன் உறவை வளர்த்துக் கொள்ள ஆதங்கப்படுவதாக அறிவித்துள்ளார்.

ஆனால் தற்போதைய புதிய அரசு இந்தியாவுடனான ஒப்பந்தத்தை நீக்க வேண்டும் எனச் சில கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளதால் நேபாள இந்திய உறவு எப்படி அமையப்போகிறது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**லோகன்**

### கல்விச்சட்டம்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சேர்ந்த குடும்பங்களிலுள்ள பிள்ளைகளே பெரும்பாலும் வீடுகளிலும், வியாபார நிலையங்களிலும் வேலைக்கமர்த்தப்படுவதால், அவ்வகையான குடும்பங்களுக்கு சுயதொழில் அடிப்படையில் புனர்வாழவு வழங்குவதன் மூலம் சிறார்களை வேலைக்கமர்த்தும் முறையை ஓரளவுகுறைக்கலாம்.

சமூகத்தில் வளர்ச்சி என்பது மக்களும் வளங்களும் சேர்ந்து உருவாகும் ஒன்றாகும். ஆகவே, சமூகத்தின் வளர்ச்சி முயற்சியில் சிறார்களின் தேவைகளை சார்ந்து அவர்களது எதிர்காலத்துக்கான வழிவகைகளை ஏற்படுத்துவது எமது கடமையாகும். இவ்வகையில் எமது எதிர்காலச் சந்ததியாரை அடிமை வாழ்வில் இருந்து விடுவிப்பது மனிதநேய நடவடிக்கையாகும்

### 24ஆவது வருட விளையாட்டு விழா

(கொழும்புத்துறை)

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம் நடத்தும் 24வது வருட விளையாட்டு விழா நிலையத் தலைவர் திரு.வே. தம்பிரத்தினம் தலைமையில் இன்று சனிக்கிழமை பி.ப. இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க.செல்வநாயகம் நிலையக் கொடியை ஏற்றி வைப்பார்.

# இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண எதிர்க்கட்சிகள் முன்வருவார்களா?

நீடிக்கப்பட்டது என எல்லா எம்பீக்களும் பாராளுமன்றத்தில் பேசியுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தபபட்டுள்ளன. இளைஞர்கள் சரணடைய விரும்புவதற்கு ஒரு குழுவும் மாவட்டங்கள் தோறும் நியமிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டு தீர்மானப்படி செய்

முன்னேற்றத்திற்கு அவர்கள் பாடுபடுவார்கள் என்று எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதைவிடுத்து சுதந்திரக் கட்சியினர் வடக்கு கிழக்கு பிரச்சினைகளை பெரிதாக்கினால் மீண்டும் வன்முறைகள் எழுந்து நாடு குட்டிச்சுவராக வேண்டிய நிலை ஏற்படும்.

மேதினத்தில் எதிர்க்கட்சி

உண்மை.

ஆறு மாத காலத்துக்கு மேலாக பஞ்சாயத்து ஆட்சி முறையை எதிர்த்துப் போராடி சிறையில் இடப்பட்ட பல கைதிகள் மன்னரால் எதுவித நிபந்தனையும் இன்றி விடுவிக்கப்பட்டனர். இது போதாது ஆட்சி முறையில் மாற்றம் வேண்டும். மன்னருக்குள்ள அதிகாரங் என்று ஐந்து எதிர்க்கட்சிகளைக் கொண்ட கூட்டு முன்



மன்னர் பிரேந்திரா

களில் நிகழ்ந்தது.

இத்தகைய ஒரு ஹோட்டல் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் மிக முக்கியமாக குறிப்பிடக்கூடியது "அன்னபூரணா" ஹோட்டல் குண்டு வெடிப்பு ஆகும். இது பரம்பரை பரம்பரையாக நேபாள மன்னர்களின் சொத்தாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவதாகும். நேபாளத்துக் குச் செல்லும் உயர் விருந்

இருந்து வந்தது. இதுமட்டு மல்லாது இராணுவ, ராஜதந்திர ரீதியிலும் நேபாளம் இந்தியாவிற்குப் பெரும் உடந்தையாக இருக்க வேண்டிய நிலையிலும் உள்ளது என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

அதற்கேற்றவாறு புவியியல் ரீதியாக நேபாளம் தனது பொருளாதார, போக்குவரத்து துறைகளில் இந்தியா

தொடர்ந்து இந்தியாவுக்கு நேபாளத்தின் மீது சினம் எழுந்தது.

நேபாள அரசு இத்துடன் நின்றுவிடாது. பல வர்த்தக உடன்படிக்கைகளையும் சீனா நாட்டுடன் செய்து கொண்டது இந்நிகழ்வானது தனது வட பிராந்தியத்தில் தனக்கெதிரான ஒரு மையம் உருவாகுவதை இந்தியாவுக்கு

கள் அமைந்துள்ளன. அத்துடன் தலைமறைவு இயக்கத்தவர்களது தலைமையகம் புதுடில்லியில் இருந்தமையும் காரணமாகும்.

ஆகவே நேபாளத்தில் ஏற்பட்ட உள்நாட்டு பொருளாதார நெருக்கடியே அங்கு பலகட்சி ஜனநாயக முறை ஆட்சி ஏற்பட வேண்டும் என

சந்ததியாரை அடிமை வாழ்வில் இருந்து விடுவிப்பது மனிதநேய நடவடிக்கையாகும்

## 24ஆவது வருட விளையாட்டு விழா

(கொழும்புத்துறை)

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம் நடத்தும் 24வது வருட விளையாட்டு விழா நிலையத் தலைவர் திரு.வே. தம்பிரத்தினம் தலைமையில் இன்று சனிக்கிழமை பி.ப. இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க.செல்வநாயகம் நிலையக் கொடியை ஏற்றி வைப்பார்.

பிரதம விருந்தினராக வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கலந்து கொள்வார். (24)

# இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண எதிர்க்கட்சிகள் முன்வருவார்களா?

இம்முறை மேதினக் கூட்டங்கள் நாடு முழுவதும் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. இதற்காக அவசரகால விதிகளின் பன்னிரண்டாவது சரத்தும் 30 ஆம் திகதி நள்ளிரவு முதல் 1 ஆம் திகதி நள்ளிரவு வரை நீக்கப்பட்டுள்ளது. இதனால் ஊர்வலங்கள் கூட்டங்கள் நடாத்துவதற்கு 24 மணி நேரம் அவகாசம் தரப்பட்டுள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினத்துக்கு அரசியல் கட்சிகளுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பக் கூடாது எனவும் ஆக்கபூர்வமான திட்டங்களைக்கூறும்கோஷங்கள் எழுப்பப்படலாம் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். இதுகடந்த கால ஐக்கிய தேசியக்கட்சி மேதினக் கூட்டங்களிலிருந்து வேறுபட்டுள்ளது.

அத்துடன் அரசாங்க ஊழியர்களுக்கு மேதினத்துக்கு ஏதோ வழங்கப் போவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியை முதலாளித்துவ கட்சி என்று ஏனைய அரசியல் கட்சிகளும் குறிப்பாக சோஷலிஸ கட்சிகள் கூறி வருவது வழமை. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி தொழிற்சங்கமான ஜாதிக சேவக சங்கத்தில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இதனால் தொழிலாளவர்க்கத்திற்கு ஏற்றவகையில் ஐக்கியதேசியக்கட்சியின் சில கொள்கைகள் சிறிது சிறிதாக மாற்றமடைந்து வருவதை அண்மைக்கால நடவடிக்கைகள் தெளிவாக்குகின்றன. ஜனாதிபதி பிரேமதாஸாவின் சில கொள்கைகள் திட்டங்கள் இதனை எடுத்துக்காட்டுகின்றன,

இனி எதிர்க்கட்சிகளின் மேதினம் பற்றி சென்றவாரம் இங்கு கவனித்தோம். திருமதி சந்திரிகா நாடு திரும்பியதையடுத்து ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி இரண்டாகியுள்ளது. மேதினக் கூட்டம் இரு பகுதியாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சி நடாத்துகின்றது! ஏனைய எதிர் கட்சிகளும் தனித்தனியே நடாத்துகின்றன.

தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படவேண்டும் என்றுஇவ்வாரம் பாராளுமன்றத்தில் பல எம். பிக்கள் பேசியுள்ளனர். மீண்டும் இரத்தக்களரி ஏற்படாது நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பவேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

ஆனால் சுதந்திரக்கட்சி மாத்திரம் புலிகள் அம்பாறையில்முகாம் புலிகள் ஆயுதம் வைத்திருப்பது போன்ற விடயங்களை பெரிதாக்கி வருகின்றது. ஆனால் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு என்ன என்று ஒன்ம பேசமாட்டேறுடார்சள்.

சில தினங்களுக்கு முன்னர் கோட்டை ரயில் நிலையத்தில் தமிழ் இளைஞன் ஒருவன் சுடப்பட்ட சம்பவத்தையடுத்து "கொழும்பில் மீண்டும் பயங்கரவாதிகள்" என்று ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. நல்ல வேளை

## தென்னிலங்கை அரசியல் ஒரு நோக்கு

அந்தச்சம்பவத்தில் ஒருபெரும்பான்மையினத்தவருக்கு ஏதும் நிகழ்ந்திருந்தால் கதை எப்படியோ மாறியிருக்கும். இப்படியாக மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை சில தீய சக்திகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

பருத்தித்துறை, மட்டக்களப்பு சம்பவங்கள் பற்றி சென்றவாரம் இங்கு கவனித்தோம்அமைச்சர் ரஞ்சன்விஜயரடணாவும் இது குறிதது பாராளுமன்றத்தில் பேசுகையில் பொலிஸாரின் தவறை தெளிவுபடுத்தியுள்ளார்.

இப்படியாக தெற்கில் வடக்கு கிழக்கு பகுதிகளின் நிலகைகளைப்பற்றி பெரிது படுத்துகிறார்களேயன்றி அமைதியான நிலமைக்கு வழிவகைகள் என்ன என்பதைப்பற்றி சிந்திக்கிறார்கள் இல்லை.

இந்த நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்க்காததால் தமிழ்த் தீவிரவாதம் தோன்றியது. பின்னர்இந்தியப்படை வந்தது. மீண்டும் வடக்கு கிழக்கில் பிரச்சனைகள் எழுந்தன. இதனால் இந்தியப் படைக்கு எதிராக தெற்கில் வன்முறைகள் எழுந்தன வடக்கு கிழக்கில் ஸ்ரீலங்கா படைகள் செய்தவற்றைவிட மிக மோசமாகவே தெற்கில் இராணுவ நடவடிக்கைகள் எழுந்தன.

இதிலிருந்து சிங்கள மக்களும் தென்பகுதி அரசியல் வாதிகளும் தமிழர்களின் பிரச்சினைகள தீர்க்கபபட வேண்டும் என்றளவுக்கு பேசத் தொடங்கினார்கள். ஆனால் சுதந்திரக்கட்சியோ மீண்டும் இனவாதம் பேசுகிறது. ஏனெனில் அவர்களுக்கு அரசின் திட்டங்களை எதிர்க்க முடிய



விலலை. ப்ஜ. வ். பியல நடவடிக்கைகள் குறைந்து விட்டது. உல்லாசப்பயணத்துறையில் வளர்ச்சி, நாட்டில் அமைதி. இவ்வாறு ஜனாதிபதியும் அமைச்சர்களும் பேசி வருகின்றனர். அப்படியிருந்தும் ஏன் அவசரகால நிலமை நீடிக்கப்பட்டது என எல்லா எம்பிக்களும் பாராளுமன்றத்தில் பேசியுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தபபட்டுள்ளன. இளைஞர்கள் சரணடைய விரும்புவதற்கு ஒரு குழுவும் மாவட்டங்கள் தோறும் நியமிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டு தீர்மானப்படி செய்துள்ளார். இளைஞர்களின் மனவிரத்தியாலேயே நாட்டில் பிரச்சினைகள் எழுந்துள்ளன அவற்றிற்கு பரிகாரம் காண வேண்டும் என்று சர்வகட்சி மாநாட்டில் ஆராயப்பட்டது.

அமைச்சர்கள் எம்பிக்கள் சரியாக மக்களுக்கும் நாட்டுக்கும் சேவையாற்ற வேண்டும். இல்லையேல் பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதாக ஜனாதிபதி அறிவித்தார். அவ்வாறு தேர்தல் நடைபெற்றால் புதிய முகங்கள் (இளைஞர்கள்) தோன்றுவார்கள். அத்துடன் வடக்கு கிழக்கிலும் புதிய முகங்கள் தோன்றுவார்கள். எல்லோரையும் சேர்த்து மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஜனாதிபதிக்கு கிடைத்தால் ஆறாவது சரத்து

ரூபன்

நீக்கம் போன்ற சில சட்டங்களை நீக்கவும், உண்டாக்கவும் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

உள்ளூராட்சி சபைத்தேர்தல்களில் இளைஞர்களுக்கு அதிக இடம் ஒதுக்கவேண்டும் என்று சர்வகட்சி மாநாடு தீர்மானித்துள்ளது.

இவற்றின் மூலம் இளைஞர்களுக்கு அரசியல் அதிகாரம் போன்றவற்றில் அதிக இடங்களை ஒதுக்கினால் அவர்கள் விரக்தி குறைந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு அவர்கள் பாடுபடுவார்கள் என்று எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதைவிடுத்து சுதந்திரக் கட்சியினர் வடக்கு கிழக்கு பிரச்சினைகளை பெரிதாக்கினால் மீண்டும் வன்முறைகள் எழுந்து நாடு குட்டிச்சுவராக வேண்டிய நிலை ஏற்படும்.

மேதினத்தில் எதிர்க்கட்சியினரின் பேச்சுக்களில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண ஏதாவது வழி கூறுவார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

## முள்ளியவளை கண்காணிப்பு குழுக் கூட்டம்

(முள்ளியவளை)

வீதிகள் அமைத்தல், வைத்தியசாலை திருத்துதல், குளங்களைப் புனரமைத்தல், வீட்டு மான்யம், கடன் வசதி ஆகிய விடயங்கள் சம்பந்தமாகப் பிராந்திய திணைக்கள அதிகாரிகளும், கிராம சேவை உத்தியோகத்தர்களும் போதிய கவனமெடுத்து புனரமைப்புச் செய்யும் வேலைகளிலெல்லோரும் தம்மாலான பங்களிப்பை வழங்கி ஒத்துழைக்க வேண்டுமென்று கடந்த வியாழனன்று உதவி அரசாங்க அதிபர் அ. இராசரெட்ணம் முள்ளியவளைக் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் கூறினார். இக் கூட்டம் முள்ளியவளை உப அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்றது

அவர் தொடர்ந்து பேசுகையில் ஒதுக்கப்பட்ட பணம் புதிய திட்டங்களுக்குச் செலவிடப்படக் கூடாது என்றும், உத்தேச திட்டங்களிருப்பின் இவ்வருடம் ஒக்டோபர் மாதத்திற்குப்பின் அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் இக்கூட்டம் புனர்வாழ்வு தொடர்பான கண்காணிப்புக் குழுக்கூட்டமே அன்றிப் புதிய விடயங்களை ஆராய்வது பொருத்தமற்றது என்றார்.

இக்குழுக்கூட்டத்தில் திட்டமிடல் இணைப்பாளர் ஆர். அருமைநாயகம், பிரதேசக் கல்வி அதிகாரி சண்முகராசா மக்கள் வங்கி உதவி முகாமையாளர் சிவபாதம் உட்படப் பல திணைக்களப் பணிப்பாளர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (58)

## கவிதைப் போட்டி

(கிளிநொச்சி)

இந்து கலாசார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சகம் வீரகேசரி பத்திரிகை நிறுவனமும் இணைந்து அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதலாம் இடத்தை கவிஞர் சவ்வந்தி மகாலிங்கம் பெற்றுள்ளார். (த)

## தனியான கூட்டுறவுச் சபை

(கொழும்புத்துறை)

வடக்குக்கிழக்கு மாகாணத்திற்கெனத் தனியான கூட்டுறவுச்சபை ஒன்று விரைவில் உருவாக்கப்படல் வேண்டும் என்ற தீர்மானம் யாழ்ப்பாண மாவட்ட ஐக்கியநாணய சிக்கனக்கூட்டுறவுச் சங்கச்சமாசன வருடாந்த பொதுக்கூட்டத்தில் பொதுச்சபை உறுப்பினர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (24

# ஈழநாதம்

## வான் குடைசாய்ந்து ஆறுபேர் காயம்

செட்டிகுளம் மன்னார்றோட்டில்நெளுங்குளம் என்ற இடத்தில் நேற்று வான் ஒன்று குடை சாய்ந்ததால் ஆறுபேர் காயமடைந்தனர் ஒருவர் படுகாயமுற்றார்

காயமடைந்தவர்கள் மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மீன்பிடி வாழ்வை இழந்தவர்கள் நஸ்டஈடு கோருகின்றார்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களபில் வாவி நோய் காரணமாக தொழில் வாய்ப்பு இழந்த மீனவர்கள் தமக்கு நிவாரணம் கோருகிறார்கள்.

மீன்பிடி அமைப்புக்கள் நிவாரணம் கோரி அரச அதிபர், மீன்பிடி விஸ்தரிப்பு அலுவலகர், சமூக சேவைகள் உதவி பணிப்பாளர் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பாக மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு இரா. தியாகராசா ஈழநாதத்திற்கு தகவல் தொரிவிக்கையில்

மேற்படி விவகாரம் தொடர்பாக மாவட்ட மீன்பிடி விஸ்தரிப்பு அலுவலகர் அறிக்கை கோரப்பட்டுள்ளது என்றார். (37)

## பூனகரிப்பிரதேசத்தில் 40 சிற்றூர்கள்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சியான மக்கள் முன்னணி பூநகரி பிரதேசத்தில் 40 சிற்றூர்களை அமைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பூநகரி பிரதேச பொர்றுப்பாளர் சாம் தலைமையிலேயே இச்சிற்றூரவைகள் நிறுவப்பட்டன ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு ஒன்று என்ற அடிப்படையிலேயே இவை நிறுவப்

பூநகரி பிரதேசப் பொறுப்பாளருடன் கிராமியப் பொறுப்பாளர்களான கணேசன், கெல்மன், அனிஸ், மகேஸ்வரன், குட்டி, ஆகியோரும் இணைந்தே நிறுவினர்.

# எமது நல்லெண்ணத்தைச் சிதறடிக்காமல் மக்களுடன் சேர்ந்து வாழுங்கள்

(யாழ்ப்பாணம்)

தவறான கருத்துக்கள் மூலம் நீங்கள் விரும்பியோ விரும்பாமலோ மாற்று இயக்கத்தில் சேர்ந்துள்ளீர்கள். எனவே நீங்கள் உண்மை நிலையைப் புரிந்து எமது நல்லெண்ணத்தைச் சிதறடிக்காமல் மக்களோடு சேர்ந்து நீங்கள் வாழவேண்டும். நீங்கள் பெற்ற இராணுவப் பயிற்சியை தவறான வழியில் பயன்படுத்தாதீர்கள். அப்பயிற்சியை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துங்கள் உங்களை நம்பிக்கையின் அடிப்படையில் விடுதலை செய்தாலும் தொடர்ந்து கண்காணிக்கப் படுவீர்கள் என நேற்று மாலை மனோகரா திரையரங்குச் சந்தியில் விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுதலை செய்து பேசும்போது யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் நீங்கள் பெற்ற இராணுவப் பயிற்சியை உள்ளூர் சண்டைகளுக்குப் பயன்படுத்தாதீர்கள் முன்பு நாம் இயக்கங்களைத் தடைசெய்தபோது மக்கள் கேட்டதிற்கு இணங்க அவர்களை விடுதலை செய்தோம். ஆனால் பின்பு எமது ஆதரவாளர்களையும் உறுப்பினர்களையும் தேவையற்ற முறையில் கொன்றீர்கள். இப்போது மக்கள் உங்களை விடுதலை செய்ய வேண்டாமெனவும்விடுதலை செய்வதால் பிரச்சனைகள் உருவாகும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் தாங்கள் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்கிறோம் என்றார். தொடர்ந்து பேசுகையில், உங்கள் நடமாட்டத்தில் சந்தேகம் இல்லாமல் நீங்கள் செயற்பட வேண்டும் யாராவது பழைய உங்களது உறுப்பினர்கள் அணுகினால் எங்களுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில் எமக்கு அன்றே தெரியும் இந்தியப்படை வெளியேறிய பின்னர் கொலைக்காரக் கும்பல்களின் தலைவர்கள் தலைமறைவார்கள் என்று அவர்கள் கொடுத்த பயிற்சியுடனும், ஆயுதத்துடனும் இளைஞர்கள் எம்மிடம் சரணடைந்துள்ளார்கள் என்றும் தெரிவித்தார். இவர்களை யுத்ததர்மத்தின் அடிப்படையிலேயே விடுதலை செய்கிறோம். இவர்களுக்கு எந்த வித தண்டணையும் நாம் வழங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

சதாசிவம் தலைமை வகித்த மேற்படி நிகழ்ச்சியில் 86 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் பலர் வெளிமாவட்டங்களையும் சேர்ந்தவர்களாகும்.

அதேவேளை மேலும் மூன்று பேர் புங்குடுதீவில் வைத்து விடுதலைசெய்யப்பட்டார்கள்

## வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல்

(முள்ளியவளை)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் உற்சவம் எதிர்வரும் ஜுன் 11ஆம்திகதி நடைபெறும்.

பஞ்சாங்கங்களில் வேறு பட்ட நாட்கள் கணிக்கப்பட்டிருப்பதால் இரகுநாதையர் பஞ்சாங்கத்தின்படி ஜுன் மாதம் 4ஆம் திகதி சமுத்திர தீர்த்தமும், 11 ஆம் திகதி பொங்கலும் நடைபெறும் என ஆலய நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். (58)

## அட்றா கோழும்புப் பிரதிநிதி கிளிநொச்சிக்கு விஜயம்

(கிளிநொச்சி)

அமெரிக்காவின் அட்றா நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதியான திரு. மைக்போட்டர் என்பவர் கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகத்தின் அழைப்பின்பேரில் அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்கள்வாழும் கிராமங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த மைக்போட்டரைக் கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகத் தலைவர் திரு. வி. சிவநாதன், செயலாளர் திரு. எஸ். எஸ். செல்லையா, முன்னைநாள் தலைவர் திரு. எஸ்.சிவகுருநாதன் ஆகியோர் கிளிநொச்சியிலுள்ள உல்லாசப் பிரயாணிகள் விடுதியான ''ராங் வியூ'' ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று விருந்துபசாரம் அளித்துக் கௌரவித்தனர்.

மேற்படி றோட்டறிக் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உதவி வழங்கும் அமெரிக்க ஸ்தாபனமான அட்றாவின்

கிளிநொச்சிபரந்தன் றோட்டறிக் கழகம் கிளிநொச்சியில் மிகவும்வறிய மலையக மக்கள் வாழுகின்ற செல்வா நகர் கிராமத்திற்கு என்னை அழைத்துச் சென்று அங்கு வாழும் மக்கள் படும் கஷ்டங்களை நேரில் காண்பித்தனர்.

அங்குவாழுகின்றமக்களுக்கு நல்ல வீடில்லை. கிணறுகள் இல்லை. மலகூட வசதிகள் இல்லை. வேலை வாய்ப்புகள் இல்லை. ஆதலால் இவர்கள் படும் கஷ்டங்களை நேரில்கண்டுள்ளேன். இவர்களுக்கு உதவி வழங்கும் படி தமிழீழ விடுதலைப் புலிகளும், கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகமும் என்னைக் கேட்டுள்ளன.

அட்றா நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி என்றமுறையில் உங்கள் கோரிக்கைகளை அமெரிக்காவிலுள்ள எமது தலைமை அலுவலகத்தின்முன் சமர்ப்பித்து ஆவன செய்வேன் என்றார்.

றோட்டறியன் எஸ். எஸ். செல்லையா நன்றி கூறினார்.

## இன்று வவுனியாவில்

## மக்கள் தேர்தலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான விடயங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், மற்ற இடங்களைப் போல் அல்லாது வன்னியை விட்டு இடம்பெயர்ந்த மக்கள் பல வருடங்களாகத் தொழில் செய்ய வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருந்தது. அத்துடன் இப்பிரதேசத்தில் வாழும் மக்களில் அநேகப் பொருளாதார வகையில் பின்தங்கியவர்கள். அரசாங்கம் போதிய கவனமெடுத்து இவர்களுக்கு உதவவேண்டும், அரசாங்கம் வழங்கும் ரூபா 15,000 வீடமைப்புக் கடனும், ரூ 2000 மீளக் குடியமர்தலுக்குமான காசு இவர்களுக்குப் போதாது இதே வேளை வன்னியின் பொருளாதாரத்துக்கு விவசாயமே அடிப்படையானது. வன்னி மக்களின் மிகப் பெரும்பாண்மையர் வேளாண்மையையே நேரடியாகச் சார்ந்திருக்கின்றனர் ஆகவே, மற்ற மக்களுடன் ஒப்பிடுகையில் சிறுதொழிலுக்கோஅரசாங்கத்தால்வழங்கப்படும் ரூபா4000 வேளாண்மையின் ஆக்கத் திறனுக்குப் போதாதது என்றார்.

அரசாங்கத்தின் கையை எதற்கும் வன்னி மக்கள் நம்பி

பிராந்தியக் கல்வியைப்பற்றிக் குறிப்பிடுகையில், இன்று பிள்ளைகளை வழி நடத்துவதும் நெறிப்படுத்துவதும் முக்கிய தேவை என்றும், கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வன்னிப்பகுதியில் நீண்டகாலமாகப் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டிருந்ததாலும்' பிறமாவட்ட ஆசிரியர்கள் சூழ்நிலை காரணமாக சரியாகக் கடமையாற்ற முடியாமையினாலும் வன்னிப் பிராந்தியத்தில் பின்னடைந்துள்ளதென்றும் கட்டடப் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறையினால் சிலமுதன்மைப் பாசாலைகளில் கூடப் பிளளைகள் தரையில் இருந்து படிக்கிறார்கள் என்றார்.

### தமிழரும் முஸ்லிம்களும்

வன்னியில் உள்ள தமிழர்கள் முஸ்லிம்கள் உறவு பற்றிக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், தமிழர்களும் முஸ்லிம்களும் ஐக்கியமாக வாழ்கிறார்கள் என்றார். தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எவ்வகையிலும் முரண்பாடு இல்லை என்றும் தென் மாகாணத்தில் உள்ள அரசியல் வாதிகள் தங்கள் சுய நலத்துக்காக ஆரம்பித்த

## பயிலுனர்

(1ம் பக்க தொடர்ச்சி)

மலரும் தெரிவாகினர். அத்துடன் எட்டுக்கொத்தணிப் பகுதியிலிருந்தும் தலா இரண்டு பேர்கள் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

## மருதானையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருதானையைவிட்டு வெளியேறியது போல கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியையும் நீங்கள் விட்டுவெளியேறும் நோக்கமுண்டா? என்றுஈழநாத விசேட நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மருதானை தொழில் நுட்பக் கல்லூரியை விட்டு நாம் வெளியேறினோம். ஆனால் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியையும் விட்டுவெளியேறுவது எமது நோக்கமல்ல என்றார் உபவேந்தர்.

பயிலுநர் ஆசிரியர் தெரிவில் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் சித்தி பெற்றவர்களுக்குப் புள்ளி வழங்காதிருந்தால் தம்முடன் தொடர்பு கொண்டால் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இடை நிலைக் கல்விக்குப் பின் கல்வி ஒத்திசைவாக அமைய வேண்டும். பல்கலைக் கழகங்கள் வரை கற்கைநெறிகள் செங்குத்தாகவும், கிடைக்கையாகவும் இசைந்துபோக வேண்டும். தொழில் நுட்பக் கல்லூரி என்றும், பிறிதொரு கற்கை நெறி என்றும் பிரித்துப் பார்ப்பதில் அர்த்தம் இல்லை இவ்வாறு உபவேந்தர் விஜயசேகரா தெரிவித்

## மட்டக்களப்பு மாநகர சபைக்கு இந்திய ராணுவத்தால் பல லச்சம் நஸ்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபைக்கு இந்திய படையின் முகாம்கள் காரணமாகவும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மாநகர சபை ஆணையார் திரு. கே. கார்த்திகேசு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

வாடி வீடு 20 மாதங்கள் முகாமாக பயன்படுத்தப்பட்டது. மாத வாடகை ரூபா 4500 ஆகும். இதனால் 90,000 இழப்பு ஏற்பட்டது.

சுகாதார சேவைகளுக்கு ரூபா 65,000 செலவு செய்யப்பட்டது. நீர் வரிரூபா 18,500 செலுத்தப்பட வில்லை.

1 இலட்சத்து 10,000 பெறுமதியான மின் உபகரணங்கள் இந்திய படையினர் பெற்றனர்.

இதற்கான கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்பட வில்லை,

மின்சார பாவனை கட்டணங்கள் மட்டும்தான் கச்சேரி செலுத்தியுள்ளது என்றார். (37)

## போரதீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க அதிபர் பிரிவில் இயங்கும் துறைநீலாவணை, தேற்றாத்தீவு குறுமண்வெளி, குருக்கள் மடம் ஆகிய உபதபாற் கந்தோர்களுக்கும் இன்னமும் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை இதனால் பொதுமக்களுக்கு பல வசதியீனங்கள் ஏற்படு

## நெடுந்தீவில் விளையாட்டுப்போட்டி

(நெடுந்தீவு)

தொழிலாளர் தினத்தையொட்டிய கழக உறுப்பினர்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளை சென் அன்ரனிஸ் நிலாஜோதி முத்தமிழ் இளைஞர் சங்கம் நெந்தீவு மத்தியில் நாடாத்தி வருகிறது எல்லே கரபந்தாட்டம் மரதன்ஒட்டம் நீச்சற்போட்டி துவிச்சக்கரவண்டி ஒட்டம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன விளையாட்டுப் பேட்டிகளை திரு' ச. கணேசதாசன் திரு க.அரசரத்தினம் ஆகியோர் ஆரம்பித்து வைக்கின்றர்

தொழிலாளர் தினமான மேதினத்தன்று விசேட நிகழ்ச்சிஞடன் வெற்றி வெற்ற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் பரிசுகளும் வழ்ங்கப்படும்

தின் அழைப்பின்பேரில் அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்கள்வாழும் கிராமங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த மைக்போட்டரைக் கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகத் தலைவர் திரு. வி. சிவநாதன், செயலாளர் திரு. எஸ். எஸ். செல்லையா, முன்னைநாள் தலைவர் திரு. எஸ்.சிவகுருநாதன் ஆகியோர் கிளிநொச்சியிலுள்ள உல்லாசப் பிரயாணிகள் விடுதியான ''ராங் வியூ'' ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று விருந்துபசாரம் அளித்துக் கௌரவித்தனர்.

மேற்படி றோட்டறிக் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உதவி வழங்கும் அமெரிக்க ஸ்தாபனமான அட்றாவின் இலங்கைப் பிரதிநிதியான திரு. மைக்போட்டர் பேசுகையில் கூறியதாவது:-

பூநகரியிலுள்ள வலைப்பாடு கிராம மக்கள் குடிதண்ணீர் வசதியில்லாது கஷ்டப்படுவதாகவும், ஆதலால் அக்கிராமத்திற்குக் குடி தண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்து தரும்படி கேட்டுள்ளனர்.

மக்கள் படும் கஷ்டங்களை நேரில் காண்பித்தனர்.

அங்குவாழுகின்றமக்களுக்கு நல்ல வீடில்லை. கிணறுகள் இல்லை. மலகூட வசதிகள் இல்லை. வேலை வாய்ப்புகள் இல்லை. ஆதலால் இவர்கள் படும் கஷ்டங்களை நேரில்கண்டுள்ளேன். இவர்களுக்கு உதவி வழங்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகளும், கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகமும் என்னைக் கேட்டுள்ளன.

அட்றா நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி என்றமுறையில் உங்கள் கோரிக்கைகளை அமெரிக்காவிலுள்ள எமது தலைமை அலுவலகத்தின்முன் சமர்ப்பித்து ஆவன செய்வேன் என்றார்.

றோட்டறியன் எஸ். எஸ். செல்லையா நன்றி கூறினார்.

## இன்று வவுனியாவில் தேனிசை செல்லப்பா

(வவுனியா)

தேனிசைச் செல்லப்பா, சொர்ணலதா ஆகியோரது இன்னிசை நிகழ்ச்சி இன்று மாலை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறும்.

வவுனியா வர்த்தகர் சங்கம் இப் பொன்மாலைப் பொழுதை ஒழுங்கு செய்துள்ளனர்.

## படித்தவர்களுக்கு வேலை வழங்குவது பற்றிய மகாநாடு

(கிளிநொச்சி)

படித்து விட்டு வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது சம்பந்தமான மகாநாடு ஒன்று கிளிநொச்சிக் கச்சேரியில் நடைபெற்றது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலமையில் நடைபெற்ற இம் மாநாட்டில்சர்வோதயம்,ஒக்ஸ்பாம் மற்றும் அரசசார்பற்ற பொது ஸ்தாபனங்களும் கலந்து கொண்டன.

கால்நடை, தையல், தச்சு வேலைப் பயிற்சிகளை இளைஞர், யுவதிகளுக்கு வளங்குவது சம்பந்தமாக இம்மாநாட்டில் ஆராயப்பட்டது. மேற்படி ஸ்தாபனங்கள் இபயிற்சிகளை வளங்க ஆர்வமாக உள்ளனர். (த)

## ஒப்பந்த ஸ்தாபனங்களுக்கு பணம் வழங்குவதில் தாமதம்

(கிளிநொச்சி)

ஒப்பந்தவேலை முடிந்து பல மாதங்களாகியும் ஒப்பந்த வேலையைச் செய்து முடித்த ஸ்தாபனத்திற்குப் பணம் வழங்கப்பட வில்லையாம்.

கிளிநொச்சி பட்டின சபையின் திருத்த வேலைகளை கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒப்பந்த அடிப்படையில் செய்து முடித்துள்ளது.

திருத்த வேலை முடிந்து அக்கட்டிடத்தில் பட்டின சபை அலுவலக வேலைகள் ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. ஆனாலும் இது சம்பந்தமான கொடுப்பனவுகள் இன்னும் முடிவடையவில்லை என மேற்படி பட்டின சபை ஆணையாளருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது. (த)

டன் இப்பிரதேசத்தில் வாழும் மக்களில் அநேகப் பொருளாதார வகையில் பின்தங்கியவர்கள். அரசாங்கம் போதிய கவனமெடுத்து இவர்களுக்கு உதவவேண்டும், அரசாங்கம் வழங்கும் ரூபா 15,000 வீடமைப்புக் கடனும், ரூ 2000 மீளக் குடியமர்தலுக்குமான காசு இவர்களுக்குப் போதாது இதே வேளை வன்னியின் பொருளாதாரத்துக்கு விவசாயமே அடிப்படையானது. வன்னி மக்களின் மிகப் பெரும்பாண்மையர் வேளாண்மையையே நேரடியாகச் சார்ந்திருக்கின்றனர் ஆகவே, மற்ற மக்களுடன் ஒப்பிடுகையில் சிறுதொழிலுக்கோஅரசாங்கத்தால்வழங்கப்படும் ரூபா4000 வேளாண்மையின் ஆக்கத்திறனுக்குப் போதாதது என்றார்.

அரசாங்கத்தின் கையை எதற்கும் வன்னி மக்கள் நம்பி வாழக் கூடாது போராட்டம் என்றால் அரசியல் போராட்டத்தோடு மட்டும் நிற்கக் கூடாது. போராட்டம் என்னும் கடிகாரத்தின் முள் ஓடாமல் நின்றுவிடவில்லை அரசியல் போராட்டத்துடன் வன்னிப்பிரதேசத்தின் பொருளாதார உற்பத்தித் திறன்களை உயர்த்த வன்னி மக்கள் சுயமாக முயற்சிக்க வேண்டும். மக்கள் செயல் நோக்கம் கொண்டவர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் சந்திரன் தெரிவித்தார்.

பேட்டியின்போது வன்னிப்

### மாகாணசபையை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி,

பெற்ற பேச்சுவார்த்தைகளின் போதும் மாகாணசபை கலைப்பு, தேர்தல் அம்சங்கள் பேசப்பட்டனவாயினும் இம்முறைமாகாணசபையைவிரைவில் கலைக்க வேண்டுமென விடுதலைப்புலிகள் நீதிஅமைச்சரிடம் வற்புறுத்தியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் இன்று யாழ்ப்பாணம் திரும்புவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.

### நர்ன்கு

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

றுக்கொள்ள வேண்டுமென விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிவிக்கிறது.

இப்பரிசோதனைக்கென யாழ்ப்பாணம் மனோகரா தியட்டரின் அருகில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி காரியாலயத்தில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. (லோ)

மாக சரியாகக் கடமையாற்ற முடியாமையினாலும் வன்னிப் பிராந்தியத்தில் பின்னடைந்துள்ளதென்றும் கட்டடப் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறையினால் சிலமுதன்மைப் பாசாலைகளில் கூடப் பிளளைகள் தரையில் இருந்து படிக்கிறார்கள் என்றார்.

### தமிழரும் முஸ்லிம்களும்

வன்னியில் உள்ள தமிழர்கள் முஸ்லிம்கள் உறவு பற்றிக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், தமிழர்களும் முஸ்லிம்களும் ஐக்கியமாக வாழ்கிறார்கள் என்றார். தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எவ்வகையிலும் முரண்பாடு இல்லை என்றும் தென் மாகாணத்தில் உள்ள அரசியல் வாதிகள் தங்கள் சுயநலத்துக்காக ஆரம்பித்த ஜிகாத் இயக்கத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்றும் இது அரசியல் சக்திகளின் குழப்பம் என்றும் அவர்களோடு தாம் ஒத்துப்போகத் தயாராகவில்லை. என்று முஸ்லிம்கள் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பத்திரிகைகளைப் பற்றிப் பிரஸ்தாபிக்கையில், வடமாகாணத்திலுள்ள பத்திரிகைகள் தம்மைப் புறக்கணிப்பதாகத் தவறான ஒரு கருத்து வன்னிப் பிரதேசத்தில் நிலவுகிறது, இதற்கு நீங்கள்பொறுப்பில்லையானாலும்கூட, இந்தத் தவறான கருத்தைக் களைய பத்திரிகையாளர்களாகிய நீங்கள்தான் உதவ வேண்டும் என்றும் கூறினார்,

### மட்டக்களப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மின்சார வருமானம் வேறு ஊழியர் சம்பளம் உட்பட வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத மின்சார பாவனை, பாவனையாளர்களிடமிருந்து 40 இலட்சம் ரூபா மின் நிலுவை போன்றனவும் இதற்கு காரணம் ஆகும்

இ.போ.ச. மட்டக்களப்புச் சாலை 5 இலட்சம் 65 ஆயிரம் 891 ரூபா 72 சதம் செலுத்த வேண்டும்.

ஒரு சினிமா நிறுவனம் 39 ஆயிரம் 767 ரூபா 55 சதம்.

மற்றுமோர் சினிமா நிறுவனம் 67 ஆயிரம் 365 ரூபா 43 சதம் நிலுவை என்றும் மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (37)

### கிளிநொச்சியில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கால்நடை வைத்திய அதிகாரி வந்து பார்வையிட்டு தடுப்பூசி ஏற்றிவிட்டுச்சென்ற மறுநாளே கால்நடைகள் காமரி நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தனவாம் (த)

வில் தொழில் நுட்பக் கல்லூரியையும் விட்டுவெளியேறுவது எமது நோக்கமல்ல என்றார் உபவேந்தர்.

பயிலுநர் ஆசிரியர் தெரிவில் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் சித்தி பெற்றவர்களுக்குப் புள்ளி வழங்காதிருந்தால் தம்முடன் தொடர்பு கொண்டால் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இடை நிலைக் கல்விக்குப் பின் கல்வி ஒத்திசைவாக அமைய வேண்டும். பல்கலைக் கழகங்கள் வரை கற்கைநெறிகள் செங்குத்தாகவும், கிடைக்கையாகவும் இசைந்துபோக வேண்டும். தொழில் நுட்பக் கல்லூரி என்றும், பிறிதொரு கற்கை நெறி என்றும் பிரித்துப் பார்ப்பதில் அர்த்தம் இல்லை இவ்வாறு உபவேந்தர் விஜயசேகரா தெரிவித்தார்.

திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் தொழில் முறை ஆங்கிலக் கற்கைநெறியை தொழில் நுட்பக்கல்லூரியால் வழங்கப்படும் ஆங்கிலத்தில் தேசிய டிப்புளோமா தரத்துக்கு உயர்த்தப் போவதாகவும் தெரிவித்தார்.

### காணாமல்போன.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேடுதலிலும் பயன் இன்றி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அண்மையில் காணாமல் போன மேற்படி பைல் அரசியல் வாதியொருவரால் கையளிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

அப்படியானால் இப் பைல் எப்படி வெளியே சென்றது? இதன் பின்னனி என்ன? என மக்கள் கேட்கிறார்கள் (37)

### புங்குடுதீவில்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பால்மாவகைகள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன. இக்கடையின் ஓடுகள் பிரிக்கப்பட்டு பின் கதவு உடைக்கப்பட்டு இக்கொள்ளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த பத்து நாட்களுக்கிள் இப்பகுதியில் இடம்பெற்ற மூன்றாவது கொள்ளைச்சம்பவம் இதுவாகும். (22)

### வடக்கு- கிழக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச்சங்கத்தை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்களாகிய ஸ்ரான்லி டொமினிக் இ. ராஜன் ஆகியோர் ஸ்தாபித்து வைத்தனர்

வடக்கு-கிழக்கு பத்திரிகைகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதிகள் இதில் அங்கம் வகிப்பதுடன் மாதம் இருமுறை இவர்கள் கூடி ஆலோசிப்பர் என இவ் ஆரம்பக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (லோ)

முகாமாக பயன்படுத்தப்பட்டது. மாத வாடகை ரூபா 4500 ஆகும். இதனால் 90,000 இழப்பு ஏற்பட்டது.

சுகாதார சேவைகளுக்கு ரூபா 65,000 செலவு செய்யப்பட்டது. நீர் வரிரூபா 18,500 செலுத்தப்பட வில்லை.

1 இலட்சத்து 10,000 பெறுமதியான மின் உபகரணங்கள் இந்திய படையினர் பெற்றனர்.

### போரதீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க அதிபர் பிரிவில் இயங்கும் துறைநீலாவணை, தேற்றாத்தீவு குறுமண்வெளி, குருக்கள் மடம் ஆகிய உபதபாற்கந்தோர்களுக்கும் இன்னமும் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை இதனால் பொதுமக்களுக்கு பல வசதியீனங்கள் ஏற்படுகின்றது. (45)

### திறந்த பல்கலைக்கழக..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் தமது தொழில் நுட்பக்கல்லூரி நிலைமைபற்றி முறையீடு செய்திருந்தனர்.

இந்த கலந்துரையாடலில் மாணவர்கள் சுலோக அட்டைகளுடன் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ

### உதைபந்தாட்ட..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று மாலை 4 மணிக்கு புதிய குடியிருப்பு மைதானத்தில் நடைபெறும்.

சென் பேரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை (பி)பிரிவும், றோசபார் விளையாட்டுக் கழகம் எதிர் புதிய சோனகதெரு உதை பந்தாட்டக் குழுக்களும் மோதிக் கொள்ளும்.

பிரதம அதிதியாக புதிய சோனகதெரு கிராம சேவையாளர் பீற்றர் இமானுவேல் பிரதம விருந்தினராக விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி முஸ்லிம் வட்டாரப் பொறுப்பாளர் சிட்டுவும் கலந்து கொள்வார்கள்.

(நெடுந்தீவு)

தொழிலாளர் தினத்தை யொட்டிய கழக உறுப்பினர்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளை சென் அன்ரனிஸ் நிலாஜோதி முத்தமிழ் இளைஞர் சங்கம் நெந்தீவு மத்தியில் நாடாத்தி வருகிறது எல்லே கரபந்தாட்டம் மரதன்ஒட்டம் நீச்சற்போட்டி துவிச்சக்கரவண்டி ஓட்டம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன விளையாட்டுப் பேட்டிகளை திரு' ச. கணேசதாசன் திரு.க.அரசரத்தினம் ஆகியோர் ஆரம்பித்து வைக்கின்றர்

தொழிலாளர் தினமான மேதினத்தன்று விசேட நிகழ்சிளுடன் வெற்றி வெற்ற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் பரிசுகளும் வழ்ங்கப்படும் பிரதமவிருந்தினராக நெடுதீவு வைத்திய அதிகாரி திரு. வை. யோகேஸ்வரன் கலந்துகொள்கிறார்

## மின்னொளியில் கரைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(பருத்தித்துறை)

தொண்டமானாறு வல்வை வீதி கலைமகள் சனசமூக நிலையம் அதன் 12வது ஆண்டு நிறைவையொட்டி மின்னொளியில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை வடமராட்சிப் பகுதி ரீதியில் நடாத்தவுள்ளது.

நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ள இக்கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகங்கள் ஸ்ரீமுருகன் கரப்பந்தாட்ட விளையாட்டு அமைப்பாளர் தொண்டமானாறு வல்வை வீதி கலைமகள் சனசமூக நிலையம் தொண்டமனாறு என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## பத்திரிகையாளர் மகாநாடு ரத்து

28-ஆம் திகதி பி.ப. 12·15 மணியளவில் கொக்குவில் திறந்தவெளிப் பல்கலைக் கழகத்தில் உபவேந்தர் டி. எஸ். விஜயசேகரா பத்திரிகையாளர் மகாநாடு நடாத்துவார் என்றும், ஆங்கிலம் தெரிந்த பத்திரிகையாளர் ஒருவரை அனுப்புமாறும் வேண்டியிருந்தார்கள். ஏனோ பத்திரிகையாளர் மகாநாட்ளை ஒழுங்கு செய்தவர்கள். அதை ரத்துச் செய்துவிட்டார்கள். ஆனால், உபவேந்தர் விரல் விட்டு எண்ணக் கூடிய பத்திரிகையாளருடன் சமயோசிதமாகப் பேசினார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டுக் ஏப்ரல் மாதம் 29-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது·

# ஈழநாதம்

## ஞாயிறு மலர்

சுபாஷ் சந்திரபோஸ்



- பலம், பலவீனம் இரண்டுமே ஆத்மாவைப் பொறுத்த விடயமே, உடலைப்பொறுத்ததல்ல
- உண்மையான வீரமென்பதும் - மனோபலத்தையும், தியாக சிந்தையையும் பொறுத்த விடயமே, உடலைப் பொறுத்ததல்ல.
- ஒரு இலட்சியவாதியின் பலம் அவனது மனோதர்மத்தை பொறுத்ததே, உடலைப்பொறுத்ததல்ல
- ஒரு மகாமனிதன் என்பவன் தன் மனோ தர்மத்தின் மூலம் உலகை ஆகர்ஷிக்கிறான். மனோபலத்தின் மூலம் உலகை வெல்கிறான். மனோ திடத்தின் மூலம் இலட்சியத்தை சாதிக்கிறான்.



குயில்கள்
பாடும் கீதத்தில் மூழ்கி
பாதங்கள்
அசைகின்றன!

பூமி
பூவாய் விரிகிறது.

கருமுகில் கண்டு
மயிலாடும்.

அட!
கலைந்தோடும்
முகில் கண்டு
கவிதை ஆடுகிறது!

சல சலக்கும்
இலைகளே .......
மௌனம் அனுஷ்டியுங்கள்!

ஒரு மான் குட்டியின்
சந்தோஷத்தை
மௌனித்து ரசியுங்கள்!

வவுனியா — திலீபன்.

1 – 5 – 1989

கப்டன் மொறிஸ் (தியாகராஜா பரதராஜன்) பருத்தித்துறை பிரதேச பொறுப்பாளனாக தனது பொறுப்புக்களையெல்லாம் திறம்பட ஆற்றிய அந்த வீரமறவன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டதினம் கடந்த வருடம் மேதினம் ஆகும். 1886 ஆம் வருடம் சிக்காகோ நகர தொழிலாளர்கள் சிந்திய இரத்தம் உலகம் பூராவும் இன்று செங்கொடியாகப் பறப்பது போல மொறிஸ் போன்ற 1355 விடுதலைப் புலிகளும் 26000 பொதுமக்களும் சிந்திய குருதியில் இரத்தச் சிவப்பேறிய கொடியாக தியாகத்தின் சின்னமாக இன்று தமிழீழம் எங்கும் எங்கள் தேசியக் கொடியாகப் புலிக்கொடி பறந்து

டைக் கழற்றி இராணுவத்தினர் மீது மொறிஸ் வீசினான. கிரனைட் வீச்சால் நிலைகுலைந்த இராணுவம் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு மறுதாக்குதலுக்கு தயாராகுமுன் அந்த சுற்றிவளைப்பை உடைத்துக் கொண்டு மொறிஸ் வெளியேறினான். அப்போது மொறிசுக்கு மார்க்கண்டேயரிலும் பார்க்க ஒரு வயது குறைவு.


இவ்வாறாகப் படிப்படியாக பல தாக்குதல்களிலும் விடுதலைப்புலிகளோடுஇணைத்து ஈடுபட்ட மொறிஸ் 1986 ஆம் ஆண்டு தொண்டைமானாற்று இராணுவத்துடன் ஒரு நாள் ஒரு பெரிய மோதலில் ஈடுபட்டான். 1984 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.

### ஒப்றேசன் லிபறேசன்

ஏப்பிறல் பத்தொன்பதாம் திகதி நல்லூரில் இடம்பெற்ற எழுச்சிவிழாவில் பேசிய விடுதலைப்புலிகளின் பிரமுகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''இலங்கை அரசாங்கம் வடமராட்சி மீது நடாத்திய ஒப்றேசன் லிபறேசன் தொடர்பான விபரம் முன்கூட்டியே இந்திய அரசுக்கு தெரிந்திருத்தது, ஆனால் இந்திய றோ அதிகாரிகளோ நயவஞ்சமாக யாழ்ப்பாணத்தின் மீது தான் இலங்கை அரசு ஒரு பாரிய தாக்குதலை நடாத்த

பெற்ற எட்டாவது மினி முகாம் தாக்குதலாகும். அத்தோடு இந்தத் தாக்குதல் பல வழிகளிலும் அரசியல் முக்கியத்துவம் பெற்றதொரு இராணுவ நடவடிக்கையாகும். இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் மூலம் எமது போராட்டத்தின் உறுதித் தன்மை இரண்டு அரசுகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.



நாட்டின் அரசியல் தலைவர் நெடுமாறன் இரண்டு அரசுகளின் கூட்டு மோசடி என்றார். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமுன்னர் புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்ட தலைவர் பிரபாகரன் அவர்கள் அங்கே தடுத்து வைக்கப்பட்டிருந்த போது ஈழத்திற்கு வந்திறங்கிய இந்திய இராணுவம் முகாம்களைவிட்டு வெளியேறி மக்கள் வாழும் பகுதிக்குள் நுழைய முயன்ற போது மக்கள் இராணுவ முகாம்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்து தமது தலைவனை அழைத்து வருமாறு கோரிக்கை விடுத்து வீதிமறியல் போராட்டம் செய்தனர். அடுத்ததாக தியாகி திலீபன் ஐந்து அம்ச

### குழந்தைகள்மீது பிரியம்

போராளிகளுக்குக் குழந்தைகள்மீது பிரியம் இயற்கையாகவே ஏற்படுவதுண்டு. இன்றைய குழந்தைகளின் நாளைய நல்வாழ்வுக்காகவே தமது வாழ்வைத் தியாகம் செய்பவர்கள் போராளிகள். அதேபோல விடுதலைப் புலிகள் மீது குழந்தைகள் அலாதி பிரியம்வைத்து ''புலிமாமா'' என்று அழைப்பது சகஜமான விடயமாகும். தளபதி விக்டர் மடியிலும் தோளிலும் ஏறி அமர்ந்துகொண்டு மகிழ்ச்சியுற்ற மழலைகள் பலர். இதே போல மேஜர் அல்பேர்ட்டை ஒரு மழலைபட்டாளமே சுற்றிவளைத்துக்கொண்டு மகிழ்ந்து கொண்டாடுவது ஒரு சர்வ சாதாரண நிகழ்வாகும். அல்பேர்ட்டும் குழந்தைகளைக் குட்டிச்சாத்தான்கள் என அழைத்து மகிழ்வான். இதே போல மொறிஸ் மாமாவை குழந்தைகள் சுற்றிவளைத்துக் கொள்வதுண்டு. அவனுக்கும் குழந்தைகள் மீது அலாதி பிரியம். ஒருமுறை பருத்தித்துறைப் பகுதியில் இந்திய இராணுவத்திற்கும்- மொறிஸ் தலைமையிலான போராளி குழுவினருக்கும் இடையில் பலத்த மோதல் நடைபெற்ற போது ஒரு நாலு வயதுக் குழந்தை பரதன் மாமாவை காப்பாற்றுமாறு கடவுளை வேண்டி பிரார்த்தனை செய்தது. இன்னுமொரு தடவை பருத்தித்துறை - தம்பசிட்டி வீதிவழியாக மொறிஸ் தலைமையிலான போராளிக் குழுக்கள் வந்துகொண்டிருந்தனர். அதே பகுதிக்குள் இந்திய இராணுவத்தினர் சுற்றிவளைப்பு தேடுதல் வேட்டைக்காக வந்துகொண்டிருந்தனர். இதனைக் கண்ணுற்ற ஐந்து வயதுப் பிள்ளையொன்று மொறிஸ் மாமா அருகில்வந்து மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ''மாமா ஓடி ஒளியுங்கோ அவங்கள் வாறாங்கள்'

## நேதாஜி

என்று பாசத்தோடும் பற்றோடும் பதைபதைப்போடும் சத்தம் போட்டுக் கூறியதை மொறிஸ் அடிக்கடி நினைவு கூர்ந்து கொள்வான். இவை போன்ற பல நிகழ்வுகள் மொறிஸ் குழந்தைகள் மீது பிரியத்தை வளர்த்துக் கொண்டு தானும் குழந்தைகளோடு ஒரு குழந்தையாக இணைந்து கொண்டு குதூகலிக்கக் காரணமாயிற்று.

### தப்பிவந்த சீக்கியன்

தம் நடாத்த முற்பட்டது. மனிதக் கேடயங்களாக நிற்கும் அப்பாவி மக்களைக் காப்பாற்ற விரும்பிய கப்டன் மொறிஸ், லெப். றம்போ, போராளி சிறீ ஆகியோர் தாக்குதலைத் தவிர்க்கவே விரும்பினார்கள். ஆனால் இராணுவத்தினரின் அடாவடித்தனத்தால்போர் தொடங்கியது. மொறிஸ் குறிபார்த்து துப்பாக்கி விசையை அழுத்திய போது ஒரு இராணுவக் கப்டன் அந்த இடத்திலேயே இறந்தான். இதனால் வெறி கொண்ட மதயானைகளைப் போல் இந்திய இராணுவ சிப்பாய்கள் கண்டபடி சுட்டுத் தள்ளினார்கள். மரங்கள், வீடுகள் எல்லாம் குண்டுகள் துளைத்த வண்ணம் இருந்தன. ஆங்காங்கே கொமாண்டோ மோட்டார் ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன. பெரும் யுத்தம் ஒன்றே அங்கே நிகழ்ந்தது. ஒரு புயலினால் சீரழிக்கப்பட்ட பிரதேசம் போல் அப்பகுதி காணப்பட்டது. யுத்தம் முடிந்து திரும்பி வந்த நண்பர்கள் மொறிஸ் அண்ணாவைத் தேடினார்கள்.

மக்களும் போராளிகளும் யுத்தம் நடந்த இடத்திற்கு விரைந்து மொறிசையும் இரண்டு நண்பர்களையும் தேடினார்கள். மொறிஸ் அணிந்திருந்த கைக்கடிகாரமும் அவனது பாதணி ஒன்றுமே மொறிசை தேடிய மக்கள் கண்களில் பட்டன. மொறிஸ் இறந்த இடத்தில் அவன் சிந்திய குருதியில் தோய்ந்து போயிருந்த மணலை அள்ளி மக்கள் தமது நெற்றியில் பூசிக்கொண்டனர் அவனது உடலை புலோலி இராணுவ முகாமுக்கு சிப்பாய்கள் எடுத்துச் சென்றிருந்தனர்.

அவனது உடலை மீட்டு எடுத்து இறுதிச் சடங்குகள் செய்ய முகாமுக்குச் சென்ற மொறிசின் தாயிடம் ஒரு இராணுவ கப்டன் பின்வருமாறு சொன்னான்.

''உங்கள் மகன் ஒரு
சுத்தவீரன்;
கண்ணியமான மக்கள்
விசுவாசி:
இதையிட்டு நீங்கள் பெருமையடையுங்கள்''

அவனது தாய் அடிக்கடி நீ இராணுவத்திடம் உயிருடன் பிடிபடடுவிடாதே என்று அறிவுரை கூறுவதுண்டு. இதனால் மொறிசும் தனது தாயைப்பற்றி நண்பர்களிடம் கூறி பெருமைப் படுவதுண்டு. தாயின் விருப்பத்தை பூர்த்தி

கப்டன் மொறிஸ் (தியாகராஜா பரதராஜன்) பருத்தித்துறை பிரதேச பொறுப்பாளனாக தனது பொறுப்புக்களையெல்லாம் திறம்பட ஆற்றிய அந்த வீரமறவன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டதினம் கடந்த வருடம் மேதினம் ஆகும். 1886 ஆம் வருடம் சிக்காகோ நகர தொழிலாளர்கள் சிந்திய இரத்தம் உலகம் பூராவும் இன்று செங்கொடியாகப் பறப்பது போல மொறிஸ் போன்ற 1355 விடுதலைப் புலிகளும் 26000 பொதுமக்களும் சிந்திய குருதியில் இரத்தச் சிவப்பேறிய கொடியாக தியாகத்தின் சின்னமாக இன்று தமிழீழம் எங்கும் எங்கள் தேசியக் கொடியாகப் புலிக்கொடி பறந்து கொண்டிருக்கிறது.

கப்டன் மொறிஸ் எப்படி ஒரு போராளியானான்? 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் தென்னிலங்கையில் தீயோர் இட்ட தீயின் நாக்குகள் சுவாலையாக வடிவெடுத்து தமிழர் சொத்துக்களை சாம்பல் மேடுகளுக்குச் சொந்தமாக்கின. இது வட இலங்கை வாலிபர்கள் நெஞ்சில் வெப்பக்கனலாக மூண்டெரிந்தது, இதே கலவரத்தில் தென்னிலங்கைத் தமிழர்கள் சிந்திய குருதி வட இலங்கைஇளைஞர்களின்நாடி நரம்புகளில் விடுதலைத்தியாகத்திற்கு சூடேற்றியது. போராட்டத்திற்கான இராணுவக் கட்டமைப்பு உருவானது. இந்தக் கட்டமைப்பு மொறிசையும் உள்வாங்கிக் கொண்டது.

## முதல் தாக்குதல்

ஒருநாள் 1984 ஆம் ஆண்டு பருத்தித்துறை மேற்கில் உள்ள முருகையன் கோவில் அருகில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்காகச் சென்றியில் நின்றிருந்த மொறிசை இலங்கை இராணுவம் சுற்றி வளைத்துக் கொண்டது, இராணுவ சுற்றி வளைப்பை உடைத்துக் கொண்டு வெளியேறுவதே மிகப் பொருத்தமான நடவடிக்கை என்பது மொறிசுக்கு விளங்கியது. இவ்வாறான ஒரு சுற்றி வளைப்பின் போது ஒரு கெரில்லாப் போராளி தனக்கு முற்றிலும் பிரதி கூலமான நிலையில் நின்று கொண்டு தாக்குதல் நடத்திக் கொண்டிருப்பதிலும் பார்க்க தப்பிக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுதலே அனுகூலமான இராணுவ நடவடிக்கையாக இருக்கும். மொறிசின் மூளை துரிதமாகச் செயல்பட்டது. ஒரு கடிகாரத்தின் பெரிய முள் ஒரு நிமிடத்தைக் கடக்கு முன்கையில் இருந்த கிரனைட்டைக் கழற்றி இராணுவத்தினர் மீது மொறிஸ் வீசினான. கிரனைட் வீச்சால் நிலைகுலைந்த இராணுவம் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு மறுதாக்குதலுக்கு தயாராகுமுன் அந்த சுற்றி வளைப்பை உடைத்துக் கொண்டு மொறிஸ் வெளியேறினான். அப்போது மொறிசுக்கு மார்க்கண்டேயரிலும் பார்க்க ஒரு வயது குறைவு.

இவ்வாறாகப் படிப்படியாக பல தாக்குதல்களிலும் விடுதலைப்புலிகளோடுஇணைத்து ஈடுபட்ட மொறிஸ் 1986 ஆம் ஆண்டு தொண்டைமானாற்று இராணுவத்துடன் ஒரு நாள் ஒரு பெரிய மோதலில் ஈடுபட்டான். 1984 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் அத்துலத் முதலியைத் தேசிய பத்தோபஸ்து அமைச்சராக நியமித்தபோது அவர் மூன்று மாதத்தில் வடபகுதியில் அமைதியைக் கொண்டு வருவேன் என சபதமெடுத்து இரண்டு புதிய முகாம்களை குடாநாட்டிற்குள் அமைத்தார். ஒன்று நாவற்குழியில் அமைக்கப்பட்டது. மற்றது தொண்டைமானாற்றில் அமைக்கப்பட்டது. இந்த தொண்டைமானாறு முகாமில் இருந்த இராணுவம் அங்கிருந்து வெளியேற முயன்ற போது அந்த இராணுவத்துடன் வீராவேசத்துடன் மோதிய விடுதலைப்புலிகளில் மொறிசும் ஒருவனாகும். இம்மோதலில் மொறிஸ் காயமுற்று வீரவிழுப்புண்களைத் தனது உடலில் சின்னமாகப் பெற்றுக்கொண்டான்.




## ஒப்றேசன் லிபறேசன்


ஏப்பிறல் பத்தொன்பதாம் திகதி நல்லூரில் இடம்பெற்ற எழுச்சிவிழாவில் பேசிய விடுதலைப்புலிகளின் பிரமுகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''இலங்கை அரசாங்கம் வடமராட்சி மீது நடாத்திய ஒப்றேசன் லிபறேசன் தொடர்பான விபரம் முன்கூட்டியே இந்திய அரசுக்கு தெரிந்திருத்தது, ஆனால் இந்திய றோ அதிகாரிகளோ நயவஞ்சமாக யாழ்ப்பாணத்தின் மீது தான் இலங்கை அரசு ஒரு பாரிய தாக்குதலை நடாத்த திட்டமிட்டுள்ளதாக எமக்கு பிழையான தகவலைத் தந்து எமது போராளிகளைப் பிரிக்கச் செய்து எமது பலத்தைக் குறைத்து எதிரிகளுக்கு துணைபோனார்கள் என்று குற்றம் சாட்டினார்.

இந்தப் பாரிய இராணுவ நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசுக்கு இந்தியா துணை போனதன் மூலம் இலங்கை விடயங்களில் தலையிட ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொண்டது. இந்தப் பாரிய நடவடிக்கைக்கு எதிராக பல விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்தினார்கள். இத்தாக்குதலில் பங்கேற்ற மொரிஸ் தனது பங்களிப்பைச் செய்தான். இந்தத் தாக்குதலின் போதுதான் மொரிஸ் தனது உயிர் நண்பனான லெப். வீமனை (நாகராசா) இழந்து வேதனைக்குள்ளானான். ஒப்றேசன் லிபறேசன் காலத்திகுற் பின்னர் சிங்கள இராணுவ வீரனைப் போல் வேடம்போட்டு சிங்கள சிப்பாய்களைத்தேடி அலைந்த மொரிஸ் சிறந்த கண்ணிவெடித்தாக்குதல் வீரனாக (MINES OPERATER) விழங்கினான். இதனால் M. O. என்ற கௌரவப் பெயர் இவனுக்கு வழங்கப்பட்டது.

## பூநகரித் தாக்குதல்

விடுதலைப்புலிகள் 1987ஆம் ஆண்டு முற்பகுதியில் குடாநாட்டிக்குள் இருந்த பல மினி முகாம்கள் மீது பல தாக்குதல்களை மேற்கொண்டனர். அத்தகையதொரு மினி முகாம் தாக்குதல் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் திகதி மாலை 5. 30 மணியளவில் பூநகரி ஒல்லாந்தர் கோட்டையினுள் தங்கியிருந்த இலங்கை இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்டது. இது அந்த ஆண்டில் இடம்பெற்ற எட்டாவது மினி முகாம் தாக்குதலாகும். அத்தோடு இந்தத் தாக்குதல் பல வழிகளிலும் அரசியல் முக்கியத்துவம் பெற்றதொரு இராணுவ நடவடிக்கையாகும். இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் மூலம் எமது போராட்டத்தின் உறுதித் தன்மை இரண்டு அரசுகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.



கப்டன் மொறிஸ்

இலங்கை ஒப்பந்தத்தை ஏற்கும்படி விடுதலைப் போராட்டத் தலைவர்களை இந்தியா டில்லியில் வைத்து நெருக்குதல் செய்தவேளையில் மறுபுறம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு போராளிகள் ஆயுதங்களையும் ஒப்படைத்து போராளிகளின் கடந்த காலநடவடிக்கைகளுக்காக தம்மிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தர்மிஸ்டர் ஜே. ஆர். கூறிக்கொண்டிருந்த வேளையில் மில்லர் பாணியில் நடந்த இத் தாக்குதல் ஒரு அதிர்ச்சி வைத்தியமேயாகும்.

இத்தாக்குதலிலும்மொறிஸ் பங்கு பற்றினான் ஒரு சினைப்பர் தாக்குதல் வீரனாசப் பங்கு பற்றிய மொறிஸ் எரிகாயங்களுடன் உயிர் தப்பினான். இதனால் மொறிசின் அழகிய முகத்திலும் எரிகாயத்தின் வீரவடு அவனால் பொறிக்கப்பட்டது, இத்தாக்குதலில் மேஜர் அசோக் உட்பட ஏழு விடுதலைப்புலிகள் தம்மை முழுமையாக அர்ப்பணம் செய்து வீரமரணமடைந்தனர்.

## அந்நிய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு

1987ஆம் ஆண்டு உருவான இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை விடுதலைப்புலிகள் அடிமைச்சாசனம் என்று வர்ணித்தனர். அதனைத் தமிழ் நாட்டின் அரசியல் தலைவர் நெடுமாறன் இரண்டு அரசுகளின் கூட்டு மோசடி என்றார். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமுன்னர் புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்ட தலைவர் பிரபாகரன் அவர்கள் அங்கே தடுத்து வைக்கப்பட்டிருந்த போது ஈழத்திற்கு வந்திறங்கிய இந்திய இராணுவம் முகாம்களைவிட்டு வெளியேறி மக்கள் வாழும் பகுதிக்குள் நுழைய முயன்ற போது மக்கள் இராணுவ முகாம்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்து தமது தலைவனை அழைத்து வருமாறு கோரிக்கை விடுத்து வீதிமறியல் போராட்டம் செய்தனர். அடுத்ததாக தியாகி திலீபன் ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நல்லூரில் உண்ணா நோன்பை மேற்கொண்டபோது மக்கள் அவனது கோரிக்கைக்கு ஆதரவாக ஆங்காங்கே வீதிமறியல் போராட்டம் செய்தனர். இவ்வாறான சாத்வீகப் போராட்டங்களின் போது எல்லாம் பருத்தித்துறை பகுதியில் மொரிஸ் மக்களுக்கு பெரும் ஆதரவு கொடுத்தான் ''போராட்ட வடிவங்கள் மாறலாம். போராட்ட இலட்சியம் மாறாது'' என்று தலைவர் பிரபாகரன் சுதுமலையில் கூறியதற்கு ஒப்ப காலத் தேவையையொட்டி மக்களை அணிதிரட்டி மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட வெகுஜன போராட்ட வடிவங்களை அவன் மக்களோடு மக்களாக முன்னின்று திறம்பட நடத்தியுள்ளான். அவ்வாறான ஒரு வீதிமறியல் போராட்டம் ஒன்றில் ஒரு முறை பருத்தித்துறை வீதி வழியாக ஏகப்பட்ட கவச வாகனங்களோடு வந்த இந்திய இராணுவ கொமாண்டர் மேஜர் அணில்ராஜ் வீதி மறிப்புப் போராட்டத்தின் போது பொதுமக்களால் கவசவாகனங்களோடு திருப்பி அனுப்பப்பட்டார். இந்தியா விடுதலைப் புலிகள் மீது போர் தொடுத்தபின் கூடவே உண்டு உறங்கி பழகிய பல நண்பர்களை மொறிஸ் இழக்க வேண்டி ஏற்பட்டபோது அவன் மிகுந்த வேதனையுற்றான். ஆனால் அவர்களது அகால மரணங்கள் அவனது உள்ளத்தில் சோர்வை ஏற்படுத்தவில்லை மாறாக அந்நிய ஆக்கிரமிப்பாளனுக்கு எதிராகப் போராட வேண்டும் என்று உறுதியையே வளர்த்தது.

மொறிஸ் மாமா அருகில்வந்து மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ''மாமா ஓடி ஒளியுங்கோ அவங்கள் வாறாங்கள்'

## நேதாஜி

என்று பாசத்தோடும் பற்றோடும் பதைபதைப்போடும் சத்தம் போட்டுக் கூறியதை மொறிஸ் அடிக்கடி நினைவு கூர்ந்து கொள்வான். இவை போன்ற பல நிகழ்வுகள் மொறிஸ் குழந்தைகள் மீது பிரியத்தை வளர்த்துக் கொண்டு தானும் குழந்தைகளோடு ஒரு குழந்தையாக இணைந்து கொண்டு குதூகலிக்கக் காரணமாயிற்று.

## தப்பிவந்த சீக்கியன்

ஒருமுறை வடமராட்சி பகுதி இராணுவ முகாம் ஒன்றிலிருந்து தப்பிவந்த சீக்கிய சிப்பாய் ஒருவன் குடிமக்கள் வாழும் பகுதிக்குள் நுழைந்து பொதுமக்களிடம் தன்னை மொறிஸிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொண்டான். அவனது கோரிக்கை நிறைவேற்றப்பட்டு அவன் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டான்.

## இறுதிப் போர்

1989 மே மாதம் முதலாம் திகதி பருத்தித்துறை இராணுவ முகாம், புலோலி இராணுவ முகாம், வியாபாரி மூலை இராணுவ முகாம் என மூன்று முகாம்களிலிருந்து அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவம் ஆத்தியடி என்ற கிராமத்தை மூன்று புறங்களாலும் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது. அப்பாவி மக்களைப் பிடித்து மனிதக் கேடயங்களாக்கி கொண்டு அவர்கள் பின்னால் நின்று கொண்டு இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளோடு யுத்

அவனது உடலை மீட்டு எடுத்து இறுதிச் சடங்குகள் செய்ய முகாமுக்குச் சென்ற மொறிசின் தாயிடம் ஒரு இராணுவ கப்டன் பின்வருமாறு சொன்னான்.

''உங்கள் மகன் ஒரு சுத்தவீரன்;
கண்ணியமான மக்கள் விசுவாசி:
இதையிட்டு நீங்கள் பெருமையடையுங்கள்''

அவனது தாய் அடிக்கடி நீ இராணுவத்திடம் உயிருடன் பிடிபடடுவிடாதே என்று அறிவுரை கூறுவதுண்டு. இதனால் மொறிசும் தனது தாயைப்பற்றி நண்பர்களிடம் கூறி பெருமைப் படுவதுண்டு. தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்மண் துணுக்காக மண்ணின் விடுதலைக்காக மரணத்தைத் தழுவிய மொறிசும் மற்றும் றம்போவும், சிறீயும் போராட்ட வரலாற்றுக் களஞ்சியத்தில் புதிய அத்தியாயங்களாகியுள்ளனர்.

கப்டன் மொறிசுடன் அன்றைய தினம் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட லெப். ரம்போ (தணிகாசலம் ஜெகதீசன்) போராளி வெள்ளை சிறி (வடிவேலு சிறீதரன்) ஆகியோருக்கும் எமது வீர வணக்கங்கள்.

சருகு விழும்
உக்கும்
மரத்திற்கே உரமாகும்
மீண்டும்
மரம் துளிர்விடும்
மண்ணை நேசிப்பவர்களின்
மரணம்
இன்னொரு
ஜனனம்
மறைந்து விட்ட
மாவீரர்களே!
உங்கள் பாதச் சுவடுகள்
சுதந்திரத்தின் படிக்கற்கள்



தலைவர் பிரபாகரன் அவர்களை புதுடில்லியில் வீட்டுக் காவலில் வைத்து விட்டு 1987 ஆம் ஆண்டு எமது மண்ணுக்குள் நுழைந்த இந்தியப்படைகளுக்கு எதிராக ஆங்காங்கே தமிழீழ மக்கள் வீதி மறிப்புப் போராட்டம் நடாத்தினார்கள். இந்திய இராணுவ கொமாண்டர் மேஜர் அனில் ராஜுக்கு எதிராக பருத்தித்துறை பிரதான வீதி ஒன்றில் மறியல் செய்யும் தாய்மார்களை இங்கே பார்க்கிறீர்கள், இந்த மறியல் போராட்டத்தை ஒழுங்கு செய்வதில் கப்டன் மொறிஸ் முக்கிய பங்கெடுத்தான். □

அபிவிருத்தி

விவசாயம்

# யாழ். மாவட்டத்தில் பணப்பயிர் செய்கையும் எதிர்காலமும்

பொன்னுத்துரை பாலகுமார்

**யாழ் மாவட்டம்**

யாழ்ப்பாண மாவட்டம் 103,000 ஹெக்டர் விஸ்தீரணம் கொண்டதாகவுள்ளது. இங்கு ஏறத்தாழ 12,000 ஹெக்டரில் நெற்செய்கையும் 10,000 ஹெக்டரில் உபஉணவுப் பயிர்களும், பழப்பயிர்கள் 2500 ஹெக்டரிலும் பயிரிடப்படுவதாகப் புள்ளிவிபரங்கள தெரிவிக்கின்றன. மேலும் யாழ். மாவட்டத்தின் பயிர்செய்கை முறைகளை ஏனைய தமிழ் பிரசே மாதவட்டங்களின் பயிர்செய்கை முறைகளுடனோடு ஒப்பிடுகையில் யாழ். மாவட்டத்தின் பயிர்ச்செய்கை முறைகள் தனித்துவமான முறையில் வேறுபட்டு நிற்பதனைக்காணலாம். எமது பிரதான உணவான நெல் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பிரதான பயிராககூடிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டும் உப உணவுப்பயிர்கள் மிகக்குறைந்த முக்கியத்துவத்துடனும் பயிரிடப்படுகின்றன. மாறாக யாழ் மாவட்டத்தில் உபஉணவுப்பயிர்கள் கூடியளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஏற்று நீர்ப்பாசன மூலமும் நெல் மானாவாரியாக முக்கியத்துவம் குறைந்த நிலையிலும் பயிரிடப்படுகின்றன. இவ்வாறு கூடிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வினைத் திறனாக மேற்கொள்ளப்படும் உபஉணவுப்பயிர்களிலும் பணப்பயிர்களே பெருமளவு பெருமுதலிட்டு மேற்கொள்ளப்பட்டு

கின்றன.

**பணப் பயிர்கள்**

இன்று நமது பிரதேசங்களில் உணவு உற்பத்தியானது பொதுவாக மூன்று நோக்கங்களின் அடிப்படையில் பயிரிடப்படுவதைக் காணலாம். சிலபயிர்கள் அவர்களது நுகர்வுத் தேவைக்கு மட்டும் பயிரிடப்படுகின்றன. வேறு சில பயிர்கள் தங்களது நுகர்வுத் தேவையினைப் பூர்த்தி செய்வதோடு மிகுதியை விற்பனை செய்வதற்காகப் பயிரிடப்படுகின்றன. இவ்விரண்டு பயிர் செய்கை முறைகளும் கூடுதலாக மரபு வழி வந்த விவசாயக்குடும்பங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில பயிர்கள் வெறுமனே விற்பனை செய்யும் நோக்குடன் செய்கை பண்ணப்படுகின்றன. இந்த அடிப்படையில்நோக்குகின்றபோது தமது நுகர்த் தேவைக்குப் பயன்படுத்தியபின்விற்பனைக்குப் பயன்படுத்தப்படும் பயிர்

பணப்பயிர் செய்கையானது இலாபத்தை அடிப்படையாக கொண்டே மேற்கொள்ளப்படுகிறது. எனவே இங்கு ஒரு பயிரின் மொத்த உற்பத்திச் செலவைவிட அறுவடைசெய்யப்படுகின்றவிளைபொருளின் மொத்த விலை கூடுதலாக இருக்க வேண்டும்.

இந்த அடிப்படைகளோடு சமகாலத்தில் பணப் பயிர்களைச்செய்கை பண்ணுவோர் எதிர் நோக்கும் பொதுவான பிரச்சினைகளை முதலில் தரிசிப்போம்.

(அ) உற்பத்திச் செலவு

கடந்த நான்கு அல்லது ஐந்து ஆண்டு காலங்களில் பணப்பயிர்களின் மொத்த உற்பத்திச் செலவானது ஒவ்வொரு ஆண்டிலும் முன்னைய ஆண்டுகளைவிட பெருமளவு அதிகரித்திருப்பதனைக் காணலாம். அதிகரித்துச் செல்லும் உள்ளீடுகளின் விலை உரியநேரத்தில் உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்ள முடியாமையுமேயாகும் அண்மைக்காலங்களில் அசேதனைப்பசளைகள் கிருமிநாசிகள் என்பவற்றின்பன் மடங்குவிலையேற்றம் விவசாயிகளிற்கு மீளமுடியாதஅதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இந்நிலை எதிர்காலத்தில் இவற்றின் பாவனை இலாபகரமானதா என்ற ஐயப்பாட்டையும் எழுப்பியுள்ளது. 188ரூபா 75 சதம் பெறுமதியான ஒரு அந்தர் யூரியாவின் விலை 409 ரூபாவாகவும் 191 ரூபா 75 சதம் பெறுமதியான ரீ.டீ.எம். இன் விலை 426 ரூபா 75 சதமாகவும் அதிகரித்துள்ளது. இவ்வாறு உள்ளீடுகளின் அதிகரித்த விலை எதிர்காலத்தில் பெரு முதலீட்டுப் பணப்பயிர்ச் செய்கையை மேற்கொள்பவர்களைச் சிந்திக்க வைக்கிறது.

(ஆ) பீடை நோய்கள்

பொதுவாக பணப்பயிர்களின் மொத்த உற்பத்திச்செலவில் ஏறத்தாழ 20-20 வீதம் பீடைகள் நோய்களின் கட்

அச்சுறுத்தலாகவும், சவாலாகவும் அமைந்துள்ளன. மேலும் யாழ் மாவட்டத்தில் பயிரிடப்படும் பெரும்பாலான பணப் பயிர்களும் சொலனசியே தாவரவியற் குடும்பத்தைச் சேர்ந்தவை. இப்பயிர்களைத் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் பயிர் செய்வதும் சில பயிர்களை தொடர்ச்சியாக பயிரிடப்படுவதும் வர்த்தக நோக்கம் கருதி இரசாயனங்களை பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்தசிபார்சுசெய்யப்பட்ட அளவிலும் கூடுதலாகப் பயன்படுத்துவதும் பீடைகள் நோய்களின் தாக்கம் அதிகரிக்கவும் அதனால் இவற்றைக் கட்டுப்படுத்த உற்பத்திச்செலவைக் கூட்டவும் அதேவேளையில் இவற்றின் பாதிப்பினால் பாரதூரமாகப் பாதிக்கப்படவும் நேரிடுகின்றது.

(இ) சந்தைப் போட்டி

அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவிற்கும் பீடை நோய் தாக்கத்தினால் ஏற்படும் விளைவுக்கு குறைவிற்கும் முகம் கொடுத்து நம்பிக்கையோடு முன்னேறும் யாழ் விவசாயி தனது விளை பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும் பலத்த சந்தைப் போட்டியை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மிளகாய் உற்பத்திக்குப் பிரசித்திபெற்ற யாழ் மாவட்டம் தற்பொழுது மகாவலிப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் மிளகாய் செய்கையினால் சந்தைப் போட்டியைச் சந்திக்க நேரிடுவதுடன் வருமானத்தில் கணிசமான அளவு பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இங்குஉற்பத்தியாகும் வெண்காயம் புத்தளப் பகுதியில் உற்பத்தியாக்கப்படும் வெண்காயத்துடன் கொழும்பு சந்தையில்

இன்னோரன்ன மேற்கூறப்பட்டனவற்றின் அடிப்படையில் பணப்பயிர்ச்செய்கையில் யாழ். மாவட்டம் தொடர்ந்தும் தன்நிலையை ஸ்திரப்படுத்தி காலத்திற்கேற்ப சில மாற்றங்களைச் செய்தேயாக வேண்டும். விசேடமாக யாழ்ப்பாண மாவட்ட உற்பத்திக் கட்டத்திலிருந்து சேமித்தல், பதனிடுதல் போன்ற கட்டங்களிற்கு மாறிச்செல்லும் காலம் வந்துவிட்டது. குறிப்பாக விவசாயம் சார்ந்த கைத்தொழில் முயற்சிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மேலும் மிளகாய், வெண்காயர், உருளைக்கிழங்கு, புகையிலை, பீற்றூட், தக்காளி, வாழைப்பழம், திராட்சை போன்ற சகல பணப்பயிர்களும் யாழ். மாவட்டத்தின் மொத்த நுகர்ச்சித் தேவைக்கும் அதிகமாகவே உற்பத்தி செய்யப்படுகின்றன. மிளகாய் 2000 மெற்றிக் தொன்னும், சின்னவெண்காயம் 40, 000 மெற்றிக் தொன்னும், பம்பாய் வெண்காயம் 5000 மெற்றிக் தொன்னும், தக்காளி 700 மெற்றிக் தொன்னும், பீற்றூட் 8000 மெற்றிக் தொன்னும், உருளைக்கிழங்கு 8000 மெற்றிக் தொன்னும், வாழைப்பழம் 2000 மெற்றிக் தொன்னும், திராட்சை 2000 மெற்றிக் தொன்னும், மேலதிகமாக உற்பத்தி செய்யப்படுவதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வகையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய சில நடவடிக்கைகள்.

★ இங்கு மேலைநாடுகளில் உள்ளது போன்று குளிரூட்டிப் பாதுகாக்கின்ற வசதிகள் இல்லை. இதனால் எல்லா வகையான பணப்பயிர்களையும் சேமித்து வைத்தல் முடியாது. ஆயினும் சேமித்து வைக்கக்கூடிய வசதிகள் மிளகாய், வெண்காயம், புகையிலை போன்றவற்றை அறுவடை முடிந்தவுடனேயே விற்காது அவற்றைச் சேமித்து சந்தை விலை அதிகரிக்கின்ற காலகட்டங்களில் கூடுதலான விலைக்கு விற்கலாம்.

★ சேமிக்கப்பட முடியாத உருளைக்கிழங்கு, பீற்றூட், தக்காளி போன்றனவற்றைப்

தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், சந்தை வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்றனவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதே வேளை உள்ளூரில் உற்பத்தியாக்கப்படும் பொருள்களை சுதேசிய உணர்வுடன் பாவிக்கும் மனப்பாங்கினை நுகர்வோர் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

யாழ்மாவட்டத்தின் பணப்பயிற்செய்கையின் எதிர்காலத்தின் ஸதிரத்பிதன்மையை வளர்க்க கூட்டுறவுத்துறை பெரும் பங்களிப்பினைச் செய்ய முன்வரவேண்டும். சேமித்துவைக்க கூடிய உற்பத்திகளை ஒவ்வொரு போகத்திலும் அவற்றின் உற்பத்திக்கேற்படும் மொத்தச் செலவிலும் சிறிது கூடிய விலைக்கு கொள்வனவு செய்து அவற்றை சேமித்து தட்டுப்பாடான காலங்களில் விற்பனை செய்வதன் மூலம் பிரதேச அபிவிருத்திக்குப் பங்களிப்புச்செய்ய முடியுய்.

மேலதிகமாக உற்பதி செய்யப்படும் பயிர்கள் செய்கை பண்ணப்படும் பரப்பளவை குறைத்து அதோவேளையில் ஓரளவு கூடிய சந்தைவிலைக்கு விற்பனை செய்யக் கூடிய கோவா, கரட், போஞ்சி, போன்ற மலைநாட்டு மரக்கறிப் பயிர்களின் உற்பத்தியில் ஈடுபடவேண்டும்.

முடிவாக......

இக் கட்டுரையின் முற்பகுதியில் பணப் பயிர்களிற்கு கொடுக்கப்பட்ட வரை விலக்கணங்களின் அடிப்படையில் நோக்குகையில் அன்று பணப் பயிர்கள் எனக் குறிப்பிட்ட மிளகாய்வெங்காயம்உருளைக் கிழங்கு போன்றவற்றை இன்று அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு, இவற்றை தாக்கும் பீடைகள் நோய்களின் தாக்கத்தினால் ஏற்படும் விளைவுக்குறைவு சந்தைப்போட்டி காரணமாக ஏற்படும் குறைந்த சந்தை விலை என்பனவற்றோடு நோக்கும் போது பணப் பயிர்கள் என குறிப்பிடமுடியாதுள்ளமையே நிதர்சனமாகும். இந்ததுர்அதிஷ்டவசமான நிலை நீடிப்பின் காலப்



கவிதை

## அளவிடப்பட்ட நேர்கோடு

எஸ்: கருணாகரன்

ஒவ்வொரு இரவுகளிலும்
மரணம் நிகழ்த்தும் சாமநேரங்களில்
நாய்கள் குரைக்கும்
அந்தகாரத்தில்
அபாயத்தை அறிவிக்கும்;
எச்சரிக்கையை
நன்றியின் விசுவாசிப்பில்
உணர்த்தும்.

துப்பாக்கியுடன்
காக்கியணிந்த ராட்சதர்
திரிவார்
கனத்த அமைதியில்
சப்பாத்துச் சத்தங்கள் நெஞ்சை அமுக்கையில்
சுற்றிவளைப்பு, தேடுதல்,
கைது செய்தல்,
அப்பாவிமக்கள் துன்புறுத்தப்படல்...
இராணுவத்துக்கென
பொதுக்குணமென்பது இப்படியிருக்கிறது

எந்தத் தேசத்திலும்
துப்பாக்கிகளால் தீர்ப்புககள்
தீர்க்கப்பட்டதாக
யாருக்கும் தெரிந்ததில்லை
அடக்க முனைவதற்கும்
சமாளிப்புக்களை திணிப்பதற்குமே
படைகளின் பலப்படுத்தல்கள்
நடந்தேறுகின்றன.

ஒரு துப்பாக்கியால்
மரணத்தைமட்டும்தான்
நிகழ்த்த முடியும்
மற்றப்படி
வரலாற்றை உருவாக்கவும்
வாழ்வின் உன்னதங்களைத் தேடவுந்
இன்னும் எதனையும்
செய்தல் இயலா.

எங்களின் முகங்களில்
ஓங்கியறையப்படும்
உமது கரங்களை
இந்நாளில் ஏற்பதாக நினைப்பீர்
மறுமுறை அறைவதற்கு
மறுபடியும் கன்னத்தைக் காட்டுதற்கு
நாம் ஏசுபிரானல்ல

இன்று நமது பிரதேசங்களில் உணவு உற்பத்தியானது பொதுவாக மூன்று நோக்கங்களின் அடிப்படையில் பயிரிடப்படுவதைக் காணலாம். சிலபயிர்கள் அவர்களது நுகர்வுத் தேவைக்கு மட்டும் பயிரிடப்படுகின்றன. வேறு சில பயிர்கள் தங்களது நுகர்வுத் தேவையினைப் பூர்த்தி செய்வதோடு மிகுதியை விற்பனை செய்வதற்காகப் பயிரிடப்படுகின்றன. இவ்விரண்டு பயிர் செய்கை முறைகளும் கூடுதலாக மரபு வழி வந்த விவசாயக்குடும்பங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. இன்னும் சில பயிர்கள் வெறுமனே விற்பனை செய்யும் நோக்குடன் செய்கை பண்ணப்படுகின்றன. இந்த அடிப்படையில்நோக்குகின்றபோது தமது நுகர்த் தேவைக்குப் பயன்படுத்தியபின்விற்பனைக்குப் பயன்படுத்தப்படும் பயிர் வகைகளும் முழுக்க முழுக்க விற்பனைக்காகவே பயிரிடப்படும் பயிர் வகைகளும் பணப் பயிர்கள் என வரைவிலக்கணப் படுத்த முடியும். யாழ். மாவட்டத்தில் மிளகாய் வெண்காயம் போன்ற வாசனைப் பயிர்களும், உருளைக் கிழங்கு, தக்காளி, பீற்றூட் போன்ற உணவு வகைகளும் போதையூட்டும் பிரதான புகையிலையும் திராட்சை, வாழை போன்ற மூவகைப் பயிர்களிற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

...சியைக் கொடுத்துள்ளது. இந்நிலை எதிர்காலத்தில் இவற்றின் பாவனை இலாபகரமானதா என்ற ஐயப்பாட்டையும் எழுப்பியுள்ளது. 188ரூபா 75 சதம் பெறுமதியான ஒரு அந்தர் யூரியாவின் விலை 409 ரூபாவாகவும் 191 ரூபா 75 சதம் பெறுமதியான ரீ.டீ. எம். இன் விலை 426 ரூபா 75 சதமாகவும் அதிகரித்துள்ளது. இவ்வாறு உள்ளீடுகளின் அதிகரித்த விலை எதிர்காலத்தில் பெரு முதலீட்டுப் பணப் பயிர்ச் செய்கையை மேற்கொள்பவர்களைச் சிந்திக்க வைக்கிறது.

(ஆ) பீடை நோய்கள்

பொதுவாக பணப்பயிர்களின் மொத்த உற்பத்திச்செலவில் ஏறத்தாழ 20-20 வீதம் பீடைகள் நோய்களின் கட்டுப்பாட்டிற்குச் செலவிடப்படுகிறது. அண்மைக் காலங்களில் யாழ் மாவட்டத்தில் செய்கை பண்ணப்படும் பெரும்பாலான பணப்பயிர்களில் பீடைகள் நோய்களின் தாக்கம் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு பெருகியுள்ளமையை காணலாம். வெண்காயத்தில் தாள் கோதியும் மிளகாயில் இதைச் சுருளும், புகையிலையில் வைரசுகளின் தாக்கமும் உருளைக் கிழங்கில் வாடல் நோயின் தாக்கமும் பணப்பயிர்களின் செய்கைக்கு

கையோடு முன்னேறும் யாழ் விவசாயி தனது விளை பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும் பலத்த சந்தைப் போட்டியை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மிளகாய் உற்பத்திக்குப் பிரசித்திபெற்ற யாழ் மாவட்டம் தற்பொழுது மகாவலிப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் மிளகாய் செய்கையினால் சந்தைப்

பாதுகாக்கின்ற வசதிகள் இல்லை. இதனால் எல்லா வகையான பணப்பயிர்களையும் சேமித்து வைத்தல் முடியாது. ஆயினும் சேமித்து வைக்கக்கூடிய வசதிகள் மிளகாய், வெண்காயம், புகையிலை போன்றவற்றை அறுவடை முடிந்தவுடனேயே விற்காது அவற்றைச் சேமித்து சந்தை

## பொன்னுத்துரை பாலகுமார்

போட்டியைச் சந்திக்க நேரிடுவதுடன் வருமானத்தில் கணிசமான அளவு பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இங்குஉற்பத்தியாகும் வெண்காயம் புத்தாப் பகுதியில் உற்பத்தியாக்கப்படும் வெண்காயத்துடன் கொழும்பு சந்தையில் போட்டியிட வேண்டியுள்ளது. இவற்றை எல்லாம்விட யாழ். மாவட்டத்தில் பெருமளவு செய்கை பண்ணப்படும் பணப் பயிர்களான மிளகாய், வெண்காயம் உருளைக்கிழங்கு போன்றவை அறுவடை செய்படுகின்ற வேளையில் இறக்குமதி செய்யப்பட்டு குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டமையால் உற்பத்திகளை உயர்ந்த விலைக்கு சந்தைப்படுத்த முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

விலை அதிகரிக்கின்ற கால கட்டங்களில் கூடுதலான விலைக்கு விற்கலாம்.

★ சேமிக்கப்பட முடியாத உருளைக்கிழங்கு, பீற்றூட், தக்காளி போன்றனவற்றைப் பதப்படுத்தி அவற்றிலிருந்து துணை உணவுப் பொருள்கள் தயாரிக்கப்படல் வேண்டும். தக்காளிப் பழவகைகளில் இருந்து பழச்சாறுகள், பழக்குழம்புகள் போன்றன தயாரித்தல், தகரத்தில் அடைத்தல் போன்றனவற்றின்மூலம் பாதுகாத்து அவற்றிற்கான சந்தை வாய்ப்புக்களை பெற முயல வேண்டும். இத்துறை பற்றிய ஆய்வுகள், இலகு

யில் பணப் பயிர்களிற்கு கொடுக்கப்பட்ட வரை விலக்கணங்களின் அடிப்படையில் நோக்குகையில் அன்று பணப் பயிர்கள் எனக் குறிப்பிட்ட மிளகாய்வெங்காயம்உருளைக் கிழங்கு போன்றவற்றை இன்று அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு, இவற்றை தாக்கும் பீடைகள் நோய்களின் தாக்கத்தினால் ஏற்படும் விளைவுக்குறைவு சந்தைப்போட்டி காரணமாக ஏற்படும் குறைந்த சந்தை விலை என்பனவற்றோடு நோக்கும் போது பணப் பயிர்கள் என குறிப்பிடமுடியாதுள்ளமையே நிதர்சனமாகும். இந்ததுர்அதிஷ்டவசமான நிலை நீடிப்பின் காலப் போக்கில் எப்பயிரையும் பணப்பயிர்கள் என குறிப்பிடமுடியாத ஒரு நிலைகூடத் தோன்றலாம் வெள்ளம் வரு முன்னே அணைகட்டு என்பது என்பது எம் முன்னோர் முதுமொழி. இதற்கமைய ஆய்வாளர்கள், எம் பிரதேச அபிவிருத்தியில் அக்கறை கொண்டோர் அனைவரும் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். □

---



சென்றகிழமை கல்வியமைச்சின் ராஜாங்க மந்திரியான திருமதி புலேந்திரன் இராஜமனோகரி வவுனியாக் கச்சேரிக்கு விஜயம் செய்து திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடினார். இச்சந்திப்பின்போது திணைக்களங்களிலும், விதானையார் மட்டத்திலும் இருந்த, இருக்கின்ற ஊழல்கள் எடுத்துக் காட்டப்பட்டன.

இக்கலந்துரையாடலின் திருமதி புலேந்திரன் இராஜமனோகரி சொன்னார். "ஒரு வன்னிப்பிரதேசக் கிராம சேவகர் புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களைத் தானே நிரப்பிப் பொதுமக்களுக்கு அளித்தாராம். சும்மா அல்ல! கட்டணம் பதினைந்தாம்.'' அவர் சும்மா சொல்லமாட்டார். ஆனால் அந்த விதானையாரின்ரை பேரைப் பகிரங்கப்படுத்தவில்லை! ஒரு நபரின் மீது குற்றம் சுமத்தினால் அவரின் பெயரையும் சொல்லிவிடுவது நல்லது. ஏனெண்டால் நேர்மையாய் வேலை செய்யும் விதானைமார் மிகவும் கவலைப்படுவினம்! முண்டு சதத்துக்கு ஒருபொருளைக் கூட்டிவிற்கும் வியாபாரி மறியலுக்குப் போகிறார். மூவாயிரம் ரூபா ஒரு நாளைக்கு கமிஷன் அடிக்கும் வர்த்தகரோ, வர்த்தக சங்கத் தலைவர் ஆகிறார். எதைச் சொன்னாலும் இடக்கரடக்கராகக் கதைக்கக்கூடாது. மந்திரிமார் மட்டத்திலை 'லோ பொயின்ற்' ரோடை கதைக்க வேணும்.

திருமதி இராஜமனோகரி புலேந்திரன் திணைக்களத் தலைவர்களுடன் நடாத்திய கூட்டத்தில் இலங்கை வங்கி ஹட்டன் நாஷனல் வங்கி, மக்கள் வங்கி முகாமையாளர்களும் கலந்துகொண்டனர். புனர்வாழ்வு விடயமான வீடு கட்டல், திருத்தல், வேலை தொடங்கல் இப்படியான திட்டங்கட்கு கடன் வழங்குதலில் வன்னி மக்கட்குப் பெரும் இடைஞ்சல் ஒன்று உண்டு. அதுதான் விவசாயிகட்கு இருக்கும் உறுதி இல்லாத 'பெர்மிட்' காணிகள் - வங்கியில் கடன் எடுக்கப் போனால் உறுதியைக் கொண்டுவா எனக் கேள்வி பிறக்கின்றது. உறுதி இல்லாததால் வங்கியில் இருக்கும் பணம்எவருக்கும்வழங்கப்படுவதில்லை. இதனைக் கிராமிய ரீதியில் விஸ்தரித்தால் நல்லது எனஅவர்கூறினார். அரசாங்கத்தின் ஆள் என்பதற்காக நாம் எதிர்க்கவில்லை. அரசாங்க அதிகாரிகளை 'லோ'பொயின்ரின்படி 'டிறக்ட்' பண்ணலாம் அல்லவா? கோடையில் குடை ஒன்றை இரவலாகக் கொடுத்துவிட்டு மாரியில் திருப்பிக்கேட்கும் வங்கிகளாக வன்னிப் பிரதேச வங்கிகள் இருக்கப்படாது பாருங்கோ.... பிணைகாரரைக் கேட்பதிலும் விவசாயி உழவு யந்திரத்தையோ, மாடுகளையோ, விடுகளையோ பிணையாகக் கேட்கலாம். எடுத்ததற்கெல்லாம் உறுதி, உறுதி என்று அலட்டி என்ன பலன்? 'லோ பொயின்'ரின் படி பார்த்தால் வெலி ஓயாக் காணி யாருடையது? யார் கையில் உறுதி இருக்கிறது? திருமலை ஸ்ரீமாவோபுரம் காணிகள் கோயில் சொத்து... இப்ப இருக்கிறது யார்?

உலகத்தில் கெட்டவர்களில் இருவர்க்கம் உண்டு. அதில் முதலாமவன் பொது சனங்கட்கட்குக் கொடுக்கச் சோன்ன காசைத் திருப்பி அனுப்புவன். இரண்டாமவன் கட்டிய மனைவியைக் கொண்டு உழைத்துச் சாப்பிடுபவன். இந்தமாதிரியான சனங்கள் இருக்குமட்டும் இத்தமண் முன்னேறாது.

இனி விட்ட இடத்துக்கு விதானைமாரிட்டை வருவம். நெடுந்தீவிலிருந்து திருக்கோவில் வரை இப்ப விதானைமாற்றை கதைதான்! பாம்பு கடிச்சுச் செத்தவன் 'ஷெல்' அடிச்சுச் செத்தவன் என மாற்றுதல் முதற்கொண்டு இப்ப ஒரே ஊழல்! உண்மையாகப் 'பொம்பர்' அடிச்சு வீடு உடைஞ்சவணுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. அதிர்ச்சியால் வீட்டுக் கண்ணாடி உடைந்த உரிமையாளர் 15 ஆயிரம் எடுத்திருக்கினம். பிறப்புச்சேட்டிபிக்கற், மரண அந்தாட்சிப்பத்திரம் எல்லாம் ஒரே பொய்.. ஒரு நாளைக்கு எங்களுக்கு அல்ல.... கடவுளுக்குத் தான் கணக்குக்காட்டவேண்டிவரும். இதனால் ஏழைகள் தண்ணீரிலும், பணக்காரன் அகதி நிவாரணப் பன்னீரிலும் வாழ்க்கை நடத்துகின்றான்.

கல்முனையில் தனது கணவன் இறந்துவிட்டதாக ஒருத்தி 50 ஆயிரம் எடுத்துள்ளாள். அவளே யாழ்ப்பாணத்தில் எடுத்துள்ளாள் என்று கூறப்படுகின்றது. இந்த நிலைக்கு விதானைமாரும் சாட்சி, எனக்குத் தெரிந்த அளவில் என ஒரு 'ஷரத்து' இருக்கிறது. அதுதான் விதானைமாரை இன்றுவரை காப்பாற்றி வருகின்றது.

கோலம் மாறி வருகின்றது. இந்த ஷரத்து விதானைமாரைக் காப்பாற்றுமோ என்பது சந்தேகம்தான். □

---

நடந்தேறுகின்றன.

ஒரு துப்பாக்கியால்
மரணத்தைமட்டும்தான்
நிகழ்த்த முடியும்
மற்றப்படி
வரலாற்றை உருவாக்கவும்
வாழ்வின் உன்னதங்களைத் தேடவுந்
இன்னும் எதனையும்
செய்தல் இயலா.

எங்களின் முகங்களில்
ஓங்கியறையப்படும்
உமது கரங்களை
இந்நாளில் ஏற்பதாக நினைப்பீர்
மறுமுறை அறைவதற்கு
மறுபடியும் கன்னத்தைக் காட்டுதற்கு
நாம் ஏசுபிரானல்ல
இருபது நூற்றாண்டின் முதாதையுமல்ல.

உங்கள் கரங்களைத் தடுப்பதற்கு
இன்றில்
முடியாதெனினும்
கன்னத்தைக் காட்ட மறுக்கும்
வலிமையுண்டு.

ஒரு மனிதனுக்கு
இன்னொரு மனிதன் அடிப்பதென்பது
அடிமைப்படுத்தல்:
அடக்கியாள்தலாகும்
மனித நாகரிகம்
நசிவதாகும்.
'ஜனநாயகப் பெருநாடென'
செய்தியனுப்பும் நீவீர்
அடிப்பது என்ன நாகரிகம்
கொலைபுரிதல்
எந்த நியாயத்தில்

வேதனைகளை ஆற்றுப்படுத்த
நமக்குயாரும்
முட்டும்கொடுக்கத் தேவையில்லை
தன்னுடைய கர்ப்பத்தை
தாமே பெற்றெடுக்க வேண்டிய நியதி
அவளுக்காக இன்னொருத்தி
முக்கி ஈன்றுவிட முடியாது.

ஓர் நேர்கோட்டில்
எம்மை ஒன்றுடுத்தி
விலங்குகளைக் கழற்றுவோம்.

சாம்பல் பூத்த நிலங்களுக்கும்,
வடுபட்ட நெடும்பனைகளுக்கும்
அழுது புலம்பும் அவைகளுக்கும்
மீண்டுமொரு வைகறையை
அடையாளம் காட்டுவோம்
இன்றும்
இந்தக் காற்றில்
புதிய சேதியை எழுதிவைப்போம்.

## சிறுகதை

# இவர்களும் மனிதர்களா..




பங்குனி மாத வெய்யில் காலை பத்து மணிக்கே தனது ஆக்கிரமிப்பின் ஆரம்பக் கட்டத்தைக் காட்டத் தொடங்கி விட்டிருந்தது.

மெள்ளச் சயிக்கிளை விட்டிறங்கிப் படலையைத் திறந்து கொண்டு வளவுக்குள் காலடி எடுத்து வைக்கிறேன். வாசலில் நின்ற மாமர நிழலில் கால் வைத்ததும் தண்ணி ஊத்தி அணைத்தது போல களைப்பெல்லாம் நீங்கி ஒரு புதுத்தெம்பு பிறக்க வீட்டினுள் நுழைகிறேன். எனவரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த எனது மனைவி இங்கிதம் தெரிந்தவளாகையால் களைத்து வந்தவனிடம் வந்ததும் வராததுமாக ஏதும் சேட்டுக் கரைச்சல் கொடுக்கக் கூடாதென்பது போல் அடுப்படிக்குள் சென்று தேநீர்போடத் தயாராகிறாள்

வந்த களைதீர உடைகளைக் கூட பாற்றாமல் மாமரத்தடியில் போட்டிருந்த ஈசிச்சேரில் சாய்ந்து கொள்கிறேன். உடலைத்தான் சாய்த்தேனல்லாமல் உள்ளத்தையும் என்னால் சாய்க்க முடியவில்லை.

எண்ண அலைகள் வந்து ஒன்றன் பின் ஒன்றாக மோதிக் கொண்டிருக்கின்றனவே.

எப்படியெப்படியெல்லாம் ஒவ்வொருத்தனும் நெஞ்சிலே ஒன்று நாவலே ஒன்று என்று வைத்து நாடகமாடி ஊரை ஏமாத்தி பச்சோந்தியாக வாழ்கின்றான். எனக்கு மட்டும் ஏன் அந்த வாழ்க்கை வாழ முடியவில்லை.?

நீதி, நேர்மை, நியாயம் இவைகள் தான் என்னுடைய அகராதியின் முதற்பக்கத்தில். உள்ளதை உள்ள படி சொன்னால் இவன் கொழுவற்காரன்; குற்றம் செய்தவனிடம் அந்தக் குற்றத்தை நீ செய்தது என்று எடுத்துக் காட்டினால் ஓ.... அவர் எடுக்கிறது முழுவதும் களவு பிறகு என்னடாவெண்டால் மற்றவையளைத் திருத்த வந்திட்டார். பார் பார் இவருக்கு வைக்கிறன் வேலை என்பவை தான்.

''நாங்கள் எல்லாம் நாட்டுக்குத் தொண்டு செய்யிறவங்கள். என்னோடை ஒரு பிள்ளை கை நீட்டிக் கதைக்க முடியாது தெரியுமே. அப்படி ஆரும் ஏதும் கதைச்சால் ஐஞ்சு நிமிசத்தில் என்ன நடத்துவன் எண்டு உங்களுக்குத் தெரியாது '.- தேத்தண்ணிக் கடைக் கந்தையா அண்ணையின் எக்காளத் தொனி- எனக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வருகிறது.

எண்பத்தேழு அக்டோபர் தமிழீழ மக்களின் வரலாற்றில் இருள் சூழ்ந்த மாதம். அமைதிகாப்பது என்ற பெயரோடு வந்திறங்கிய அழிவுப் படையின் அட்டூழியங்கள் ஆரம்பமாகி விட்டிருந்தது. அக்கம் பக்கம் எந்தவொரு வீட்டிலும் மக்கள் நடமாட்டமோ கலகலப்போ எதுவுமில்லை ஒரே பயங்கர அமைதி.

அடுத்தடுத்து நாலு புறமும் இருந்து டாயும் ஷெல்களும் சீறிடபாயும் துப்பாக்கி வேட்டுக்களும் மட்டுமே சேட்டவண்ணம் இருந்தன.

எனது சுற்றாடலிலும் எவரும் இல்லாத நிலையில் எனது குடும்பமும் சந்தையா அண்ணையின் குடும்பமும். இன்னும் பக்கத்து வீட்டில் வயோதிபத் தம்பதிகள் பிள்ளைகளை எங்காவது ஓடித் தப்புங்கள் நாங்கள் இரண்டு பேரும் வீடுவாசல் பொருள் பண்டங்களுக்குக் காவலாய் இருக்கிறம். விதி வந்தால் போறம் என்டு வீட்டிலேயே தங்கி விட்டார்கள்.

நானோ ஸ்ரீலங்கா ஆமிப் பிரச்சனைக்கு பயாவிளான் பள்ளிக் கூடத்தில்லிருந்து அடிக்கும் ஷெல்லுக்கும் ஹெலியில் இருந்து ஏவும் குண்டுகளுக்கும். வேட்டுகளுக்கும் பயந்து ஊர் ஊராக ஓடி வீடுவீடாக மாறி இருந்து. பிள்ளை குட்டிகளுடன் திரிந்து அலுத்துச் சலித்ததில் இனிச் செத்தாலும் பிழைத்தாலும் ஒரு இடமும் ஓடுவதில்லை என்ற வைராக்கியம்.

சந்தையா அண்ணையும் ஏதோ எங்களின் தைரியத்தில் தனது குடும்பத்தோடு தங்கிவிட்டார்.

இத்தனைக்கும் எனது வீடு பலாலிறோட்டிலிருந்து கொஞ்சத் தூரம் உள்ளே தள்ளி இருந்தபடியால் ஒருவாறாக இருந்து விட்டோம்.

தொழிலோ, எதுவுமில்லை- முருங்கைக் கீரையோ முருங்கைக் காயோ எதுவோ கிடைத்ததை ஒன்று சேர்த்து ஒரு சாப்பாடு. இது தவிர மூன்று குடும்பமும் சேர்ந்து ஒன்றாயிருந்து எனது இரண்டு பற்றறி வானொலியின் புழுகைக் கேட்பதுமே பொழுது போக்கு.

''இவையளென்ன வெல்லுவினமெண்டு நினைக்கிறியேடாதம்பி'' கந்தையா அண்ணை புதிர்போடுகின்றார்.

''ஏனண்ணை? வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் எண்டு ஒரு வேளை வெல்லவும் கூடும் தானே'' - எனக்குள் ஒரு ஆதங்கம். தோல்வியடையக் கூடாதே. நம்முடைய பெடியள். என்ன செய்யப் போறான்களோ?

''எட மடையா! அவங்கள் எங்களுக்கு உதவி செய்ய வந்தவர்கள். உந்தச் சீனாக்காரன், பாகிஸ்தானியன் எல்லாரையும் விரட்டியடிச்ச எந்தப் பெரிய வல்லரசோட இவை போதி என்ன செய்வினம்'' - சந்தையர் உன்னிப் பாகத் தலையை ஆட்டி விளாசுகிறார்.

எனக்கும் நாவடக்க முடியாமல் கேட்கிறேன் - ''அப்பக் சந்தையா அண்ணை ஊர் வலங்களென்றும், கூட்டங்களென்றும் முன்னுக்கு நிண்டு பெடியளின்ர மோட்டார் சைக்கிளிலைமுன்னாலும் பின்னாலும் ஏறித் திரிஞ்சீங்களே அந்த நேரம் என்ன நினைவிலை இருந்தனீங்கள்?''

''அதடா பெடியா. அந்த நேரம் அவங்களோட திரிஞ்ச போது எத்தனை பேர் எவ்வளவு மரியாதை குடுத்தவை தெரியுமே எனக்கு. அட்ப நான் இப்பிடி நிலைமை வரு மெண்டு நினைக்கேல்லை. இவையளுக்கு முன்னாலை பின்னாலை திரிஞ்சால் எனக்கும் ஒரு பெருமையெண்டு தான் திரிஞ்சனான். அது சரி தெரியாமல தான் கேட்கிறன் இவையளுக்கேன் ஈழம்? நீயுமில்லை, நானுமில்லையெண்டால் ஆருக்குக்காணும் ஈழம்'.

நீண்டபெருமூச்சொன்றைத் தான் என்னால் விட முடிகிறது. இப்படியும் மனிதர்களா? அந்தக் காலங்களில் தங்கராசர் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஓடியாடித்திரியும் போது மற்றவர்களுடன் உற்சாகமாக அரசியல பேசும் போதும் என்னை நினைத்து நானே எனக்குள் வெட்கப் படுவதுண்டு. காரணம் தமிழ் மக்களின் அவலங்கைகள் எவையெவை? போராட்டம் ஏன் அரம்பமானது? போராளிகளின் தியாகங்கள் யாவையும் என்னால் விளங்கிக் கொள்ள முடிகிறது. தமிழ் மக்களின் சிறுமை நிலையை எண்ணி உள்ளம் கொதித்தெழுகிறது. ஆனால் ஆயுதம் ஏந்தும் வயதை நான் தாண்டி விட்டேன் அத்தோடு குடும்பச் சுமை. கடன்காரரின் தொல்லை. இவைகளே எனக்கு முன்னால் பூதாகாரமாக எழுந்து நிற்கும் போது மக்களின் துயர் துடைக்கும் தொண்டில் இறங்க என்னால் முடிவதில்லை என்றாலும் போராளிகளின் தூய்மையான தியாகங்களை, தலைமைத்துவத்தின் பண்பான, கட்டுப்பாடான கொள்கைகளை என்றுமே நான் மனதார நேசிக்கிறேன; போற்றுகிறேன்.

—''என்னப்பா தேத்தண்ணி கொண்டு வந்து வைச்ச நேரமென்ன? நீங்கள் என்ன யோசனையிலை இருக்கிறியள்'' மனைவியின் குரல் கேட்டுச் சுயநினைவிற்கு வருகிறேன்.

—''இப்படியே யோசித்து யோசித்து மூளையைக் குழப்பாமல் கடன்காரர் வந்தால் சொல்ல வேண்டியது தான். இவ்வளவு காலமும் பிரச்சனையாலை நிம்மதியா ஒரு தொழிலும் செய்ய முடியவில்லை. இனியெண்டாலும் ஏதோ பாடுபட்டு உழைச்சு உங்கட கடன்களைக் கட்டுறமெண்டு வேறை என்ன செய்யிறது.''

மனைவியின் பத்திரதிக்குப் பதிலாக - 'எடி? பைத்தியக்காரி பிரச்சனை நாட்டிலை உனக்கும் எனக்கும் தானா நடந்தது? சகலபேரும் தான் இதால கஸ்டப்பட்டவர்கள் எங்களுக்குக் கடன் தந்தவர்களுக்கும் ஏதாவது தொழில்லை செய்யிறதற்குப் பணம் தேவைப்படத் தானே செய்யும்'' - இதனை நான் சொல்லி முடிப்பதற்கு முன்னமேயே அவள் நின்ற இடத்திற்கும் பேசாமல் திரும்பி விட்டாள். என்ன செய்வது எல்லாரையும் போல தன் வீடு, தன் குடும்பம் என்றிருக்கும் ஒரு சாதாரணப் பெண் தானே அவளும் பரந்த மனப்பான்மையென்பது எவருக்கும் உண்டாகும் ஒரு அறிவல்லவே.

அன்றொருநாள் இப்படித் தான் நல்ல களைப்பு வீட்டுக்குப் போய்ச் சேரும் முன் தேநீர் அருந்தாமல் சைக்கிள் மிதிக்க முடியாது. என் கால்களும் கைகளும சோர்ந்து விட்டன நாவும் வரண்டு விட்டது. கந்தையா அண்ணையின் கடையிலை போய் ஒரு 'ரீ' குடித்து விட்டுப் போவம என நினைத்துக் கொண்டு கடைப்பக்கமாகச் சயிக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே நுழைய முனைகிறன்.

அன்று இராமாயணத்திலே அழகிய இலங்காபுரியைத் தீயிட்டுப் பொசுக்கிய அனுமான்களின் மறு அவதாரங்கள் மூன்று அங்கே மூக்கும் முழிகளுமாக உட்கார்ந்திருப்பதை காணுகிறேன். அதற்குள் கறுப்புத் துண்டுக்கொண்டைக்காரன் ஒருவன் எழுந்து என் சட்டைக்கலரைப்பிடிக்த வண்ணம் தாடையில் ஒரு குத்து விடுகிறான் அம்மா.... ஐம்புலன்களுமே கலங்கி விட்டன. ''யூ. எல். ரி. ரி'' கேட்டு மறுகணமே அடிவயிற்றில் ஒரு உதை. துடிக்கிறேன் கடவாயால் வழிந்து கொண்டிருக்கும் இரத்தத்தை கூடத் துடைக்க என்னால் முடியவில்லை. உடம்பெல்லாம் கிடுகிடு வென்று நடுங்கிறது.

இதற்குள் கந்தையா அண்ணையும் அமைதிப்படையிடமிருந்து பொறுக்கிய இரண்டொரு 'இங்கிலீசு' பேச என் சொண்டைக் குழிப் பிடியும் கொஞ்சம் தளர்த்தப்படுகிறது.

ஒருவன் வில்லன் வேஷம் போடும் போது அடுத்தவன் கதாநாயகன் வேஷம் போட்டு அவனைக் கண்டித்து அன்பொழுகுகஎன்னோடு கதைக்க வருகிறான்.

வேதனை கூடத் தெரியாது ஒரு ஆக்ரோஷ வெறி என்னுள் கிளர்ந்தெழுகிறது. என்றைக்கோ ஒரு நாள் போக வேண்டிய உயிர் தானே காரணமின்றி மக்களை வதைத்துக் கொண்டிருக்கும் இந்த அந்நியனில் ஒருவனையாவது வீழ்த்தி விட்டுப் போனாலென்ன? மறுகணம் எனது மனைவி பக்களின் பரிதாப முகங்கள் கண் முன்னே தோன்றுகின்றன. என்னுடைய உயிர் தான் போனாலும் பரவாயில்லையே பிறகு என் குடும்பத்தையுமல்லவோ சிரழித்து விடுவார்கள் என்று நினைத்ததும் மனஞ்சோர்ந்து பயம் கவ்வத் தொடங்கி விட்டது.

இத்தனை வேதனை குழப்பங்களிற்குமிடையே சாப்பாட்டு மேசையைக் கவனிக்கிறேன். படுபாவி தேநீருக்குப் பதில் அழிப்பு வேலை நடத்துபவனுக்குக் கசிபுக் கொடுத்து உபசரிக்கிறானே! இவனும் மனிதனா?

நாட்களாக மாதங்களாக வருடங்களாக பொழுது ஓடி மறைந்தது. ''சத்தியம் தோற்றதுமில்லை. தர்மம் அழிந்ததுமில்லை'' என்ற தத்துவத்திற்கிணங்க காலம் மாறியது அந்நியப் படையும் கப்பலேறிவிட்டது. நிலமை சிறிது சிறிதாக முன்னேற்றம் காணத் தொடங்கி விட்டது. கந்தையரும் வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிய படி கடை வாசலில் நிற்பார். தெருவாலே போய்க் கொண்டிருக்கும் போராளி இளைஞர்களின் அண்ணே என்ற அன்பான அழைப்பிற்குச் சிரிப்பார் தலையாட்டுவார். சிலவேளைகளில் அவர்களை இடைமறித்து மற்றவர்கள் நாலு பேர் பார்க்கும் படி கதைக்குக் கொண்டிருப்பார். இப்போது மெள்ள மெள்ள தான் நாட்டுக்குச் சேவை செய்யும் ஒரு இலட்சியவாதியென்றும் மார்தட்டிப் பேசுமளவிற்கு உஷாராகி விட்டார்.

சீ.... இவன் மட்டும் தானா? இவனைப் போல் இன்னும் எத்தனை எத்தனையோ பச்சோந்திகள் உலாவத்தான் செய்கின்றனர் என்பதை நினைக்கும் போது எனக்குள்ளே ஒரு வெறுப்புப் இப்படிப்பட்ட சந்தர்ப்பவாதிகளை அவர்களின் குற்றம் குறைகளை எடுத்துக்காட்டி எழுத்து மூலமாகவாவது திருத்த முடியுமா? என்ற எண்ணமும் எழுகிறது.

வெய்யிலில்வந்த களைப்பும் மறைகிறது. கடன் பற்றிய யோசனையும் மறக்கிறது. நான் களவெடுக்கவில்லை. பொய் கூறவில்லை வாய் விட்டுக்கேட்டே கடன் வாங்கினேன். அதன்படி இராப்பகல் பாராது உழைப்பேன் கடன் கட்டுவேன்.

ஆனால் நாட்டிலே உலாவும் சீர்கேடுகளை ஒவ்வொருவரும் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் தவறுகளை எழுத்து வடிவில் எடுத்துக் காட்டவேண்டுமென்ற உள்ளக் கொதிப்பில் விறுவிறுவென்று வீட்டினுள்ளே சென்று பேப்பரும் பேனாவும் எடுத்து வருகிறேன் இதோ எழுதத்தொடங்கிறேன். ''இவர்களும் மனிதர்களா?'' தலையங்கமிடுகிறேன்.

**மஞ்சுளா நடராஜா**

□



## குஞ்சுப் பாஞ்சாலியே

நந்தா

ஒன்றன் பின் ஒன்றாக மோதிக் கொண்டிருக்கின்றனவே.

எப்படியெப்படியெல்லாம் ஒவ்வொருத்தனும் நெஞ்சிலே ஒன்று நாவிலே ஒன்று என்று வைத்து நாடகமாடி ஊரை ஏமாத்தி பச்சோந்தியாக வாழ்கின்றான். எனக்கு மட்டும் ஏன் அந்த வாழ்க்கை வாழ முடியவில்லை.?

நீதி, நேர்மை, நியாயம் இவைகள் தான் என்னுடைய அகராதியின் முதற்பக்கத்தில். உள்ளதை உள்ள படி சொன்னால் இவன் கொழுவற்காரன்; குற்றம் செய்தவனிடம் அந்தக் குற்றத்தை நீ செய்தது என்று எடுத்துக் காட்டினால் ஓ.... அவர் எடுக்கிறது முழுவதும் களவு பிறகு என்னடாவெண்டால் மற்றவையளைத் திருத்த வந்திட்டார். பார் பார் இவருக்கு வைக்கிறன் வேலை என்பவை தான்.

அண்ணையின் குடும்பம். இன்னும் பக்கத்து வீட்டில் வயோதிபத் தம்பதிகள் பிள்ளைகளை எங்காவது ஓடித் தப்புங்கள் நாங்கள் இரண்டு பேரும் வீடுவாசல் பொருள் பண்டங்களுக்குக் காவலாய் இருக்கிறம். விதி வந்தால் போறம் என்று வீட்டிலேயே தங்கி விட்டார்கள்.

நானோ ஸ்ரீலங்கா ஆமிப் பிரச்சனைக்கு பயாவிளான் பள்ளிக் கூடத்திலிருந்து அடிக்கும் ஷெல்லுக்கும் ஹெலியில் இருந்து ஏவும் குண்டுகளுக்கும். வேட்டுகளுக்கும் பயந்து ஊர் ஊராக ஓடி வீடுவீடாக மாறி இருந்து. பிள்ளை குட்டிகளுடன் திரிந்து அலுத்துச் சலித்ததில் இனிச் செத்தாலும் பிழைத்தாலும் ஒரு இடமும் ஓடுவதில்லை என்ற வைராக்கியம்.

சந்தையா அண்ணையும் ஏதோ எங்களின் தைரியத்

''ஏனண்ணை? வல்லைவெளிக்குப் புல்லும் ஆயுதம் எண்டு ஒரு வேளை வெல்லவும் கூடும் தானே'' - எனக்குள் ஒரு ஆதங்கம். தோல்வியடையக் கூடாதே. நம்முடைய பெடியள். என்ன செய்யப் போறான்களோ?

''எட மடையா! அவங்கள் எங்களுக்கு உதவி செய்ய வந்தவர்கள். உந்தச் சீனாக்காரன், பாகிஸ்தானியன் எல்லாரையும் விரட்டியடிச்ச எந்தப் பெரிய வல்லாசோட இவை போதி என்ன செய்வினம்'' - சந்தையர் உன்னிப்பாகத் தலையை ஆட்டி விளாசுகிறார்.

எனக்கும் நாவடக்க முடியாமல் கேட்கிறேன் - ''அப்பச் சந்தையா அண்ணை ஊர் வலங்களென்றும், கூட்டங்களென்றும் முன்னுக்கு நிண்டு பெடியளின்ர மோட்டார் சைக்கிளிலைமுன்னாலும் பின்

தங்காசர்ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஓடியாடித்திரியும் போது மற்றவர்களுடன் உற்சாகமாக அரசியல பேசும் போதும் என்னை நினைத்து நானே எனக்குள் வெட்கப்படுவதுண்டு. காரணம் தமிழ் மக்களின் அபிலாசைகள் எவையெவை? போராட்டம் ஏன் அரம்பமானது? போராளிகளின் தியாகங்கள் யாவையும் என்னால் விளங்கிக் கொள்ள முடிகிறது. தமிழ் மக்களின் சிறுமை நிலையை எண்ணி உள்ளம் கொதித்தெழுகிறது. ஆனால் ஆயுதம் ஏந்தும் வயதை நான் தாண்டி விட்டேன் அத்தோடு குடும்பச் சுமை. கடன்காரரின் தொல்லை. இவைகளே எனக்கு முன்னால் பூதாகாரமாக எழுந்து நிற்கும் போது மக்களின் துயர் துடைக்கும் தொண்டில் இறங்க என்னால் முடிவதில்லை என்றாலும் போராளிகளின் தூய்மையான தியா

வல்லவே.

அன்றொருநாள் இப்படித்தான் நல்ல களைப்பு வீட்டுக்குப் போய்ச் சேரும் முன் தேநீர் அருந்தாமல் சைக்கிள் மிதிக்க முடியாது. என் கால்களும் கைகளும சோர்ந்துவிட்டன நாவும் வரண்டு விட்டது. சந்தையா அண்ணையின் கடையிலை போய் ஒரு 'ரீ' குடித்து விட்டுப் போவம என நினைத்துக் கொண்டு கடைப்பக்கமாகச் சயிக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே நுழைய முனைகிறன்.

அன்று இராமாயணத்திலே அழகிய இலங்கா புரியைத் தீயிட்டுப் பொசுக்கிய அனுமான்களின் மறு அவதாரங்கள் மூன்று அங்கே மூக்கும் முழிகளுமாக உட்கார்ந்திருப்பதை காணுகிறேன். அதற்குள் கறுப்புத் துவக்கொண்டைக்காரன் ஒருவன் எழுந்து என் சட்டைக் கலரைப்பிடித்த வண்ணம் தாடையில் ஒரு

பயம் கவ்வத் தொடங்கி விட்டது.

இத்தனை வேதனை குழப்பங்களிற்குமிடையே சாப்பாட்டு மேசையைக் கவனிக்கிறேன். படுபாவி தேநீருக்குப் பதில் அழிப்பு வேலை நடத்துபவனுக்கு கசிபுக் கொடுத்து உபசரிக்கிறானே! இவனும் மனிதனா?

நாட்களாக மாதங்களாக வருடங்களாக பெ முது ஓட மறைந்தது. ''சத்தியம் தோற்றதுமில்லை. தர்மம் அழிந்ததுமில்லை'' என்ற தத்து

னேன். அதன்படி இராப்பகல் பாராது உழைப்பேன் கடன் கட்டுவேன்.

ஆனால் நாட்டிலே உலாவும் சீர்கேடுகளை ஒவ்வொருவரும் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் தவறுகளை எழுத்து வடிவில் எடுத்துக் காட்டவேண்டுமென்ற உள்ளக் கொதிப்பில் விறுவிறுவென்று வீட்டினுள்ளே சென்று பேப்பரும் பேனாவும் எடுத்து வருகிறேன் இதோ எழுதத்தொடங்கிறேன். ''இவர்களும் மனிதர்களா?'' தலையங்கமிடுகிறேன்.


□

# விண்வெளி விஞ்ஞானம்

## வெள்ளியில் மலைத் தொடர்கள்

வெள்ளிக் கிரகம் வெகு தொலைவில் இருப்பதனால் அதனை நோக்கி அனுப்பப்படும் ராடார் அலைகள் அளவுக்கு மிஞ்சி அசலிக்கின்றன. இங்ஙனம் அசலிக்கின்ற தன்மையினால், வெள்ளியில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் இந்த அலைகள் குவிந்து கொள்வது சாத்தியமில்லை. அங்கேயிருந்து பூமியை நோக்கி வரும் ராடார் எதிரொலியும், ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து பிரதிபலிக்கப்பட்டுத் திரும்பாமல், முழுக் கோளத்திலிருந்தும் பிரதிபலிக்கப்படுகிறது. இவ்விதம் பிரதபலிக்கப்பட்டு வரும் எதிரொலியின் அலைகள் மிகவும் சிக்கலான முறையிலே ஆராயப்பட்டுக் கணிக்கப்படுகின்றன. இவ்விதம் கணிக்கப்பட்ட பின்னரே, மூடி மறைக்கப்பட்டிருக்கும் வெள்ளியின் மேற்பரப்பு, அதன் அமைப்பு ஆகியவை பற்றிய விபரங்கள் அறிந்து கொள்ளப்பட்டன.

இவ்விதம், மிகச்சிக்கலான சிரமமான முறையிலே தகவல்களை அறிந்து கொள்வதில் முதற்படியாக, ராடார் அலைகளின் ஒரு பகுதியைப் பிரதிபலிக்கும் -பொதுப் பகுதிகளை அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. வெள்ளியின் மத்தியபிரதேசம் பூமியை நோக்கி இருக்கும்போது, பூமிக்குக் கிட்ட உள்ள வெள்ளியின் பகுதிகளில் இருந்து பிரதிபலிக்கப்பட்ட ராடார் அலைகளின் எதிரொலி முதலிலே பூமியை வந்து அடையும். இவற்றைத் தொடர்ந்து, தூரத்தில் உள்ள பிரதேசங்களில் பட்டுப் பிரதிபலிக்கும் அலைகள் பூமியை வந்து அடையும். பூமியில் இருந்து வெள்ளியின் மத்திய பகுதிக்கு உள்ள தூரத்திலும், வெள்ளியின் விளிம்புகள் சுமார் 4,000 மைல் தூரத்திலே உள்ளன. ஆகையால் வெள்ளியின் விளிம்புகளில் இருந்து பிரதிபலிக்கப்படும் அலைகள் கடைசியாகப் பூமியை வந்து சேரும். இவ்விதம் அலைகள் பூமியை வந்து சேருவதற்கு இடையில் ஏற்படும் நேர வித்தியாசங்களை நுணுக்கமாகக் கணித்து அறிந்து கொள்வதன் மூலம வெள்ளியின் எந்தப் பகுதியில் இருந்து - மத்தியில் இருந்தா அல்லது விளிம்புகளிலிருந்தா




### உடுவில் விவியன் நமசிவாயம்

அல்லது மத்திய பகுதிக்கும் விளிப்புக்கும் இடையில் உள்ள பகுதிகளிலிருந்தா- எதிரொலி வருகிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். இந்த முறையைப் பின்பற்றி வெள்ளியிலே படிப்படியாக பெரிது பெரிதான வட்டப்பிரதேசங்களைப் பற்றி இப்பிரதேசங்களில் இருந்து பெறப்படும் எதிரொலிகளின் மூலம் அறிந்து கொண்டனர். ஆரம்பத்தில் பெரும்போக்காக நிர்ணயித்துக் கொள்ளப்பட்ட வெள்ளியின் பிரதேசங்கள் பின்காலக் கிரமத்தில் எதிரொலிகளின்சக்தியை அல்லது பலவீனத்தை அளந்து அறிவதன் மூலம் அங்கே உள்ள மேடு பள்ளம் மலைகள், மலைப்பிளவுகள் என்பவற்றை கணித்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

#### அல்பா, பீற்றா

வெள்ளியினுடைய மேற்பரப்பு எல்லா இடங்களிலும் ஒரே தன்மையானதாக மேடு பள்ளம் என்ற வித்தியாசமின்றி இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படியாயின் அதன் மேற்பரப்பில் வட்ட வடிவமான பல பிரதேசங்களில் இருந்து பிரதிபலிக்கப்படும் அலைகளின் சக்தியின் அளவும் எல்லாப்பிரதேசங்களுக்கும் ஒரேமாதிரி அளவுடையதாக இருக்கும்.

ராடார் அலைகள் வெள்ளியின் மீது படும்போது வட்டமான பிரதேசங்களிலேபடும் ஆனால் வெள்ளியில் பட்டுத் திரும்பும் ராடார் அலைகளின் சக்தி ஒரே மாதிரியாக இல்லாது அளவிலே வேறுபடுகிறது. சில பிரதேசங்களில் இருந்து பிரதிபலிக்கப்படும் அலைகள் வலுக் கூடியவையாகவும் வேறுபிரதேசங்களில் இருந்து பிரதிபலிக்கப்படும் அலைகள் வலுவிலே குறைந்தனவாகவும் இருக்கின்றன. வலுக்கூடிய அலைகளைப் பிரதிபலிக்கும் பிரதேசங்கள்-பிரதிபலிப்புத்தன்மை கூடிய பிரதேசங்கள், ராடார் சமிக்ஞை பிரதிபலிக்கப்பட்டு மீண்டும் பூமிக்கு வருவதில் ஏற்படக் கூடிய நேரத்தைக் கணித்து ஆராய்வதன் மூலம் பிரதிபலிப்புச்சக்தி கூடிய இடங்கள் எங்கெங்கே உள்ளன என்று நிர்ணயித்துக் கொள்ளலாம்.

ஒவ்வொருவட்டப்பிரதேசத்தின் எல்லைக்குள்ளே மேடுகள். பள்ளங்கள் எங்கே உள்ளன என்பதை கிரகம் சுழலும்போது. ராடர் அலைகள் பிரதிபலிக்கும் சுழலுவதைக் கொண்டு. திட்டவட்டமாக நிர்ணயித்துக் கொள்கிறார்கள். கிரகம் சுழல்வதனால். பிரதிபலிக்கப்படும் அலைகளிலும் டொப்ளர் விளக்கம் காணப்படும். இந்த டொப்ளர் விளக்கத்தையும் கணித்து அளந்து கொள்ள முடியும். இங்ஙனம் மிக டொப்ளர் விளக்க முறை சிக்கலான ராடாரையும் வானியல் முறையையும், ஆராய்ந்து வெள்ளியின் மேற்தரையின் படத்தையே வரைந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. ராடாரை உபயோகிக்கும் வானியல் வல்லுனர்கள், இது மாதிரியான ஆராய்ச்சியில் போதிய அனுபவமும் திறமையும் பெற்றுவிட்ட காரணத்தினாலே, பிரதிபலிப்பு அதிகமாகஉள்ள பகுதி ஒரு விளிம்பிலே தோன்றுவதையும், பின்னர் அது வெள்ளியின் மையத்தைநோக்கிச் சென்று, பின்னர் மறு விளிம்பில் மறைந்து போவதையும் அவதானிக்க முடிகிறது. ராடரின் உதவியுடன் மட்டுமே இதனைஅவதானிக்க முடியும். பிரதிபலிக்கும் தன்மை கூடிய பிரதேசங்கள் பூமியிலே உள்ள மலைத் தொடர்களைப் போன்ற உயர்ந்த - பூமிக்குச் சமீபமாக உள்ள பிரதேசங்கள் என்று அடையாளம் கண்டுகொண்டதுடன் நின்றுவிடாது அவற்றுக்குப் பெயரும் சூட்டியுள்ளார்கள்.

வெள்ளியில் உள்ள ஒரு மலைத்தொடருக்கு அல்பா மலைத்தொடர் என்றுபெயர் அல்பா மலைத் தொடரின் நீளம் சுமார் 2,400 மைல்கள் இன்னொரு மலைத்தொடருக்கு பீற்றா மலைத்தொடர் என்றுபெயர். கிழக்கு மேற்காக அமைந்திருக்கும் இம்மலைத் தொடரின் நீளம் அல்பா மலைத் தொடரின் நீளத்திலும் கூடியது. இரண்டும் ஒன்றுக்கொன்று குறுக்கே அமைந்தவை. பூமியில் உள்ள மலைத்தொடர்களின் அமைப்பிலிருந்து இவை மாறுபட்டவையாக - பல விளிம்புகளைக் கொண்டவையாக அல்லது எங்களுக்குத் தெரியாத புதுவித அமைப்பாகவும் இருக்கக் கூடும்.

□



கவிதை

# குஞ்சுப் பாஞ்சாலியே

நந்தா

அம்மணமாய் விரல்சூப்பி
அழுது கொண்டு நீ
நின்றாய்
மூக்குச்சளி
கொஞ்சம் காய்ந்தும் காயாமலுமாய்
கண்ணீரில் பாதி கரைந்தும்
கடைவாய் வரைபோய்
பூவரசு மரநிழலின் கீழே
தனியாக
அம்மணமாய், விரல் வாயில்
அழுதபடி நீ நின்றாய்
கிட்டவந்து உன்னை நான்
கேட்டதையும் பாராமல்
சட்டை செய்யாமல்
சலிச்சுச் சலிச்சழுதாய்
பட்டிக்காட் டின்அழகு
பளிச்சுப் பளிச் சென்று
வெட்டிற்று
எனக்குள் வேதனையோ வாட்டிற்று
சட்டைக் கழுதாயோ
கொதிச்சுதோ சாண்வயிறு
அம்மணமாய் நின்று அழுதுகொண்டு
நீ யிருந்தா
ஆம்மாவைக் காணாதோ, அக்காச்சி
துள்ளினளோ
அண்ணன் அடிச்சானோ
அப்பா உறுக்கி காதை முறுக்கினரோ
என்று கேட்பாரின்றி அழுது கொண்டு
நீ நின்றாய்
இன்றைககேன் குஞ்சே மீண்டும் அழுகின்றாய்
சொல்லி அழுதால் துயர் தேஞ்சு போமென்றோ
படிப்பதற்குப் போன அண்ணன்
பள்ளிக்கூடம் விட்டும் வீடுவந்து சேராத
விபரம் தெரிந்து கொண்டோ
சொல்லப்பயந்து
துடிச்சு மனம் ஒடிஞ்சு
அம்மணமாய் இங்கே ஏன்
அழுது கொண்டு நிற்கின்றாய்
கண்ணன் வருவானோ
கவலை ஒழிப்பானோ?

கட்டாய ராணுவப்பயிற்சிக்கு பாடசாலை மாணவர்களைக் கடத்தியபோது எழுதியது.)

# இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவர்கள்

| பெயரும் இறந்த திகதியும் | கற்ற கல்லூரியும் வயதும் |
|---|---|
| 1. தங்கராசா கீதகுமாரி 16-10-1987 | யாழ். இந்து மகளிர் கல்லூரி |
| 2. அருணாசலம் பாலகுமார் 13-10-1987 | யாழ். இந்துகல்லூரி |
| 3. சோபனா ஜெயசிங்கம் 19-10-1987 | யாழ். திருக்குடும்பகன்னியர் மடம் |
| 4. மகாலிங்கம் லிங்கேஸ்வரன் 21-10-1987 | யாழ் இந்துக் கல்லூரி |
| 5, பிரியந்தி 3-11-1987 | (வயது 1[illegible]) உடுவில் மகளிர் கல்லூரி |
| 6. மகேந்திர ராஜ் 3-11-1987 | (வயது 15) மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| 7. வித்தியானந்தன் மாலினி 12-11-1987 | வயது 14) சுண்டிக்குளி மகளிர் கல்லூரி |
| 8. வித்தியானந்தன் தாரணி 12-11-1987 | (வயது 06) கோண்டாவில்- இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் |
| 9. சோமசுந்தரம் இளங்கோ 20-11-1987 | (வயது 14) சாவகச்சேரி இந்துக்கல்லூரி |
| 10. தங்கராசா யசோதரன் 19-12-1987 | (வயது 17) யாழ். மத்திய கல்லூரி |
| 11. செல்வராசா 23-12-1987 | யாழ். இந்துக் கல்லூரி |
| 12. இராஜரட்ணம் லக்ஸ்மன் 24-10-1987 | (வயது 18) யாழ். மத்திய கல்லூரி. |
| 13. அரியரட்ணம் யசோதரன் 22-10-1987 | (வயது 10) யாழ். டொன் பொஸ்கோ வித்தியாலயம் |
| 14. டேவிற் தரன் 12-10:1987 | (வயது 13) புனித சம்பத்தரிசியார் கல்லூரி |
| 15. நடராஜா சுரேஷ்குமார் 12-10-1987 | (வயது 18) கொக்குவில் இந்துக் கல்லூரி |
| 16. திருத்தணி ராஜா | (வயது 12) மட்டக்களப்பு |
| 17. தம்பியையா மதீஸ்வரன் 30·10·1988 | (வயது 17) நெடுங்கேணி மகாவித்தியாலயம் |
| 18. அன்ரன் அலன் 13-11-1988 | (வயது 20) தொழில் நுட்பக் கல்லூரி |
| 19. ரவீந்திரன் 19-2-1989 | (வயது 18) சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி |
| 20. முரளீதரன் 19-2-1989 | (வயது 18) சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி |
| 21. இ. நீதிநாதன் 15-3-1989 | (வயது 17) பேராதனைப் பல்கலைக் கழகம் |
| 22. பிரபாகரன் 25-4-1989 | (வயது 17) கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் |
| 23. தேவரூபன் 13-5-1989 | (வயது 19) நெடுங்கேணி மகாவித்தியாலயம் |
| 24. கிருஷ்ணப்பிள்ளை சிவானந்தன் 17-5-1989 | நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி |
| 25. பரமேஸ்வரன் முரளீதரள் 5-6-1989 | (வயது 16) கொக்குவில் இந்துக் கல்லூரி |
| 26. இளையதம்பி மகேந்திரராசா 13-6-1989 | உடுத்துறை மகா வித்தியாலயம் |
| 27, சண்முகம் உதயவர்மன் 19-6-1989 | (வயது 17) புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் |
| 28. பரமசிவம் பிரேம்குமார் 16-11-1988 | வதிரி திரு இருதயக் கல்லூரி |

## கடந்த இரண்டு வருடங்களில்

## போராட்டத்தின் நிழலில்

தமிழ் மக்களது போராட்டமானது உரிமைப் போராட்டம் என்ற கட்டத்தைத் தாண்டி விடுதலைப் போராட்டமாக பரிமாணம் பெற்ற போது போராட்டத்திற்குள் பலர் உள்வாங்கப்பட்டனர். கணேசகுமாரையும், தேவகுமாரனையும் பொறுத்த வரை அவர்கள் வாழ்ந்த சூழலும் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளும் இன்றைய தமிழ் சமூகம் வாழும் சூழலில் இருந்தோ அல்லது சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளிலிருந்தோ அந்நியப்பட்டவையல்ல. தமிழ் மாணவ சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் எல்லா வடிவங்களும் மாணவர்களான கணேசகுமாரையும், தேவகுமாரையும் பாதிக்கவே செய்தன. ஆகவே இந்த சமகாலப் பிரச்சினைகளின் உறுத்தல்களிலிருந்து அந்நிய மண்ணுக்கு அகதியாகத் தப்பியோடுவதிலும் பார்க்க மண்ணின் மைந்தர்களோடு இணைந்து கொண்டு ஏகோபித்த நிலையில் போராடுவதே அனுகூலமான பலனைத்தரும் என எண்ணிய இவர்களும் இவர்களைப்போன்ற ஏனையமாணவர்களும் எண்ணியதும் செயல்பட்டதும் ஒன்றும் வியப்பானதல்ல. தமக்குச் சரியெனப்பட்டபாதையில் தமதுகருத்து இசைவுக்கமைந்ததான விடுதலைஅமைப்புடன் இணைந்து கொண்டு இவர்கள் இருவரும் இவர்களைப் போன்ற மாணவர்களும் செயல்பட்டமை ஒன்றும் வியப்பானதல்ல.

1948, 1949ஆம் ஆண்டுகளில் மலையக மக்களின் பிரசாவுரிமை பறிக்கப்பட்டமையாலும் ஐம்பதுகளில் தமிழ் மக்களது மொழியுரிமையும், திட்டமிடப்பட்ட குடியேற்றங்களும் அறுபதுகளில் வேலைவாய்ப்புகளில் இனரீதியாக ஒதுக்கப்பட்டமையும் தமிழ் மக்களது போராட்டத்தை ஒரு கொதிநிலையில் வைத்துக் கொண்டிருந்தது. ஆனால் எழுபதுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரி

ஒரு மனிதாபிமானப் பணியாகும். இந்தவகையில் கணேசகுமார் யுத்தகளத்தில் விடுதலைப் போராளிகளுக்கு ஆற்றவேண்டிய பணிகளை ஒரு தாதிபோல் நின்று செய்து கொடுத்தான். ஒரு போராளியாக ஒரு தாதியாகச் செயல்பட்ட அவன் பல வெகுஜன போராட்டங்களையும்ஒழுங்கு செய்தான். இராணுவ ரீதியான அடக்குமுறைகளுக்கு எதிராக இராணுவமொழியில் பதில்சொன்ன கணேசகுமார் மக்களை போராட்ட மயப்படுத்தி மக்களுக்கு நன்கு பரீட்சயமானதும் பழக்கப்பட்



கணேஷ்குமார்

டதுமான சாத்வீக வடிவிலான போராட்டங்களையும் ஒழுங்கு செய்தான். பாடசாலை பகிஷ்கரிப்பு, கடையடைப்பு, ஹர்த்தால், துக்க தினம் முதலான போராட்டங்களிலும் பங்களிப்புச் செய்தான். விடுதலை ஸ்தாபனத்தின் சுவரொட்டிகளை ஒட்டுதல் பிரசுரங்களை மக்கள் மத்தியில் விநியோகம் செய்தல் முதலான பணிகளையும் செய்துவந்தான் தேசத்துரோகிகளும் ஆக்கிரமிப்பு இராணுவமும் கணேசகுமாரைக் கைது செய்யப் பலதடவைகள் முயன்றபோதும் அவன் புத்தி சாதுர்யமாக தப்பிக்கொண்டான். காட்டிக்கொடுக்கும் கயமைத்தனம் எம்மண்ணை

# அறிவுலகப் படுகொலைகள்

''சமுதாயம் போலியாக
இருக்கும்வரை
சம்பிரதாயங்கள் சடங்குகள்
சவக்குழிக்குள் புதைக்கப்
படமாட்டா
மாறாக
மானிட நேயமும்
மனோ வளர்ச்சியின்
உயர்ச்சியும்
மனிதத் தன்மையுமே
மண்ணுக்குள்
புதைக்கப்படும்''

1981 ஆம் ஆண்டு யாழ். சென்ஸ். ஜோன்ஸ் கல்லூரி ஆறாம் வகுப்புப் பிரவேசம் பரீட்சையில் தோற்றிக் கணிதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று பாடங்களிலும் அதி உயர்ந்த புள்ளிகளைப் பெற்று முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் எல்லா வகுப்பிலும் மிகத் திறமை சித்திபெற்று பரிசில்கள் வருடம்தோறும் பெற்றார். சதுரங்க விளையாட்டு, பூப்பந்தாட்டம், கிரிக்கட் ஆகிய விளையாட்டுகளில் மட்டுமன்றி சிறுகதை, நாடகம் எழுதுதல் பொது அறிவுப் போட்டி ஆகியவற்றிலும் பங்குபற்றி பரிசில்களும் விருதுகளும் பெற்றுக்கொண்டார்.

### மாபெரும் சாதனை

இவர் கல்வித்துறையில் பெற்ற சாதனைகளில் மிகவும் பெரிய சாதனை இவர் க, பொ. த. (சா) பரீட்சையில் எட்டுப்பாடங்களிலும் மிகத்திறமைச் சித்திகளைப் பெற்று (Eight Distinctions) அகில இலங்கையிலுமே இப்

வேளையில் அவற்றை ஒருங்கிணைத்து இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் என்ற அமைப்பை இவர் உருவாக்கினார். இவரது தந்தையார் கண்டியைச் சேர்ந்த டொன் சைமன் வணசிங்கா. தாயார் மட்டக்களப்பு வந்தாறுமூலையைச் சேர்ந்த முருகப்பன் நாச்சிப்பிள்ளை. தமிழர் போராட்டங்களில் இவர் முன்நின்றார். 1961 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகப்

காக இவர் ''றோ'' வின் கட்டளைப்படி ஈ. பி. ஆர். எல். எவ். குழுவினரால் சுட்டுக் கொல்லயபட்டார்.

தமிழ் ஆசிரியர் சங்கங்கள் இரு பிரிவுகளாக நின்ற



டி. கே. எல். வணசிங்கா

ரும் ஈ. பி. ஆர். எல், எவ். தேசத்துரோகிகளும் ஒன்று கூடி இக் கொலைக்கான சதித் திட்டம் ஒனறைத் தீட்டினார்கள் என்ற தகவல்களை ஆசிரியர் சங்க பிரமுகர் ஒருவர் அண்மையில் வெளியிட்டிருக்கிறார்.

இந்திய இராணுவத்தாலும் தேசத்துரோகிகளாலும் கொல்லப்பட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரது பெயர்ப்பட்டியல்களை இங்கே பார்க்கிறீர்கள் தமிழீழத்தின் விடிவுக்காக உழைத்து தமது இருப்பை இழந்த இவர்கள் இல்லாதிருப்பது ஒரு கசப்பான வேதனையான நிஜம் தான். ஆனால் இவர்களைப் போன்ற பலர் சிந்திய குருதியில் தான் இன்று விடுதலைப்பயிர் அறுவடையை நோக்கி வளர்த்து கொண்டிருக்கிறது.

## கடந்த இரண்டு வருடகாலத்தில் தேசத்துரோகிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட ஆசிரியர்கள் விபரம் வருமாறு

| | | |
|---|---|---|
| சுப்பிரமணியம் இரவீந்திரா | - (விஞ்ஞான ஆசிரியர்) சங்கானை | 25·10·1988 |
| நாகேந்திரம் கிருஷ்ணானந்தன் | - (பொருளியல் ஆசிரியர்) யாழ்ப்பாணம் | 12·11·1988 |
| பாலகிருஷ்ணன் | - யாழ்ப்பாணம் | 1988 |
| ஆனந்தராசா | - கிளிநொச்சி மகாவித்தியாலயம் | 19·11·1988 |
| கருணானந்த சிவம் | - நடேஸ்வரா கல்லூரி, காங்கேசன் துறை | 14·12·1988 |
| சண்முகம் சண்முகலிங்கம் | - யாழ். இந்துக் கல்லூரி | 26·01·1989 |
| எஸ். டி. கே. வணசிங்கா | - ஒய்வு பெற்ற அதிபர், மட்டக்களப்பு | 31·03·1989 |
| க. செல்லத்துரை | - அதிபர், மீசாலை விக்னேஸ்வரா | 12·04·1989 |
| குழந்தைவேல் ராஜவேல் | - சங்கீத ஆசிரியர், இன்பருட்டி | 14·08·1989 |
| விநாயக மூர்த்தி | - ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் | 19·06·1989 |
| திரு. ஞானசேகரம் | - புத்தூர் | 01·12·1989 |
| சாந்தகுமாரி | - ஆசிரியை, கிளிநொச்சி | 27·12·1989 |
| கணபதிப்பிள்ளை நவரெட்ணராஜா | - நாவாந்துறை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம் | 24·4·1988 |

### கார் பொம் குண்டு வெடிப்பு

யாழ்ப்பாண வரலாற்றிலேயே 'கார் பொம்' நேரக் கணிப்பு வெடிகுண்டு ஒன்றை பொருத்தி பாடசாலை சிறுவர்களை கொன்று குவித்த இரத்தக்கறைபடித்த ஒரு சம்பவம் 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி இடம் பெற்றது. அன்று பாடசாலை முடிவடைகின்ற நேரம். மழைத்தூறலாக

18. அன்ரன் அலன் (வயது 20)
13-11-1988 தொழில் நுட்பக் கல்லூரி

19. ரவீந்திரன் (வயது 18)
19-2-1989 சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி

20. முரளீதரன் (வயது 18)
19-2-1989 சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி

21. இ. நிநாதன் (வயது 17)
15-3-1989 பேராதனைப் பல்கலைக் கழகம்

22. பிரபாகரன் (வயது 17)
25-4-1989 கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்

23. தேவருபன் (வயது 19)
13-5-1989 நெடுங்கேணி மகாவித்தியாலயம்

24. கிருஷ்ணபிள்ளை சிவானந்தன்
17-5-1989 நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

25. பரமேஸ்வரன் முரளீதரன் (வயது 16)
5-6-1989 கொக்குவில் இந்துக் கல்லூரி

26. இளையதம்பி மகேந்திரராசா
13-6-1989 உடுத்துறை மகா வித்தியாலயம்

27. சண்முகம் உதயவர்மன் (வயது 17)
19-6-1989 புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்

28. பரமசிவம் பிரேம்குமார்
16-11-1988 வதிரி திரு இருதயக் கல்லூரி

## கடந்த இரண்டு வருடங்களில் தேசத்துரோகிகளால் கொல்லப்பட்ட தேசபக்தர்களான மாணவர்கள்

| பெயரும் இறந்த திகதியும் | கற்ற கல்லூரியும் வயதும் |
|---|---|

29. சின்னத்தம்பி பராபரன்
9-12-1988 பேராதனை பல்கலைக்கழகம்

30. எஸ். ஜெகலோகன் (க.பொ.த.சா)
1-3-1989 திருமலை

31. எஸ். அருள்சந்திரன் (க,பொ.த.சா)
1-3-1989 திருமலை

32. முகம்மது இப்சல்
13-3-1989 மன்னார் முஸ்லிம் மகாவித்தியாலயம்

33. சின்னத்துரை இந்திரன்
13-4-1989 சாவகச்சேரி இந்துக் கல்லூரி

34. சின்னத்துரை இன்பநாதன்
24-4-1989 இருதயாக் கல்லூரி

35. பாரத்
24-4-1989 கிளிநொச்சி மகா வித்தியாலயம்

36. அகிலன் திருச்செல்வம்
10-5-1989 யாழ். சென்ற்.பற்றிக்ஸ் கல்லூரி

37. முத்துசிவஞானம் ரமேஸ்வரன்
22-3-1989 யாழ். மத்திய கல்லூரி

38. முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன் [illegible]
13-5-1989 யாழ். மத்திய கல்லூரி

39. நாகரட்ணம் ஆனந்த ராசா (வயது 17)
1-6-1989 யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி

40. தியாகராசா கஜேந்திரன் (இந்திரன்)
17-6-1989 யாழ்.சென்ற்.ஜோன்ஸ் கல்லூரி

41. சின்னப்பு தர்மபாலன்
19-6-1989 அச்சுவேலி மகாவித்தியாலயம்

42. விநாயமூர்த்தி ஜெயிதரன்
19-6-1989 ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்

43. இராமநாதன் கணேஷ்குமார் (வயது 19)
24-6-1989 சென்ற்.பற்றிக்ஸ் கல்லூரி

44. சுப்பிரமணியம் பரந்தாமன் (வயது 17)
4-7-1989 தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

45. விஜயக்குமார் மாரிமுத்து
9-7-1989 யாழ். மத்திய கல்லூரி

46. மகாலிங்கம் மகேஸ்வரன்
23-7-1989 யாழ்.மத்திய கல்லூரி

47. அருளானந்தம் சுதாகரன்
21-8-1989 ஹாட்லிக் கல்லூரி

48. மாணவி
21-8-1989 மல்லாகம் மகாவித்தியாலயம்

49. சேகு நஹீம்
1-8-1989 அட்டாளைச்சேனை

மான பல்லைத்தரும் என எண்ணிய இவர்களும் இவர்களைப்போன்ற ஏனையமாணவர்களும் எண்ணியதும் செயல்பட்டதும் ஒன்றும் வியப்பானதல்ல. தமக்குச் சரியெனப்பட்டபாதையில் தமதுகருத்து இசைவுக்கமைந்ததான விடுதலைஅமைப்புடன் இணைந்து கொண்டு இவர்கள் இருவரும் இவர்களைப் போன்ற மாணவர்களும் செயல்பட்டமை ஒன்றும் வியப்பானதல்ல.

1948, 1949ஆம் ஆண்டுகளில் மலையக மக்களின் பிரசாவுரிமை பறிக்கப்பட்டமையாலும் ஐம்பதுகளில் தமிழ் மக்களது மொழியுரிமையும், திட்டமிடப்பட்ட குடியேற்றங்களும் அறுபதுகளில் வேலைவாய்ப்புகளில் இனரீதியாக ஒதுக்கப்பட்டமையும் தமிழ் மக்களது போராட்டத்தை ஒரு கொதிநிலையில் வைத்துக் கொண்டிருந்தது. ஆனால் எழுபதுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரியான தரப்படுத்தல் கல்வி முறையானது தமிழர்போராட்டம் வேறு ஒரு வடிவம் எடுக்கக் காரணமாயிற்று. இது எழுபதுகளில் நடுப்பகுதியில் ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட நிலையில் ஆயுதப்போராட்டமாக முன்னெடுக்கப்பட வழி வகுத்தது.

ஒரு இலட்சியவாதி போராட்ட நெருக்கடியில் தனது சொந்தங்களையும் பந்த பாசங்களையும் இரண்டாம் பட்சமாக்கியோ அல்லது பின்தள்ளியோ எப்படி தனது இலட்சியத்தை முதன்மைப் படுத்துவானோ அதையே கணேஷ்குமாரும் தேவகுமாரும் ஏனைய மாணவர்களும் செய்தனர்.

இதில் கணேஷ்குமார் இன்னுமொரு பரிமாணத்தை வெளிக்கொணர்ந்தான். அதாவது களப்பயிற்சிக்காகக் கானகத்திற்குச்சென்று பாசறையில் புகுந்து தன்னையும் போர் அணியின்வியூகத்தில் இணைத்துக்கொண்டான். முறையாகப் பாசறையில் பயிற்சியை முடித்துக்கொண்டு முகாமுக்குத் திரும்பிய கணேசகுமார் அப்போதைய தெல்லிப்பளை பிரதேச பொறுப்பாளரும் பின்னைய வலிகாமம் பொறுப்பாளருமான லெப். கேணல் மதியின் வழிநடத்தலில் யுத்த காலத்தில் போராளிகளுக்குக் களத்தில் ஆற்றப்பட வேண்டிய ஆதார சேவைகளைச் செய்துவந்தான். இங்கிலாந்து நாட்டுக் கவிஞன் 'லோர்ட் பைரன்' கிறீசுக்கு வந்து கிராமியப் போரில் ஈடுபட்டிருந்த போர்வீரர்கள் காயப்பட்ட போது வைத்திய சிகிச்சை செய்தார். புளோரன்ஸ் நைட்டிங்கேர்ஸ் 2ஆம் உலகமகா யுத்தத்தின்போது போர் வீரர்களுக்கு இவ்வாறான பணிகளைச் செய்தான்.காயப்பட்ட போர் வீரர்களுக்கு சிகிச்சையளிப்பது பக்கச் சார்பான ஆதரவல்ல அது



கணேஷ்குமார்

டதுமான சாத்வீக வடிவிலான போராட்டங்களையும் ஒழுங்கு செய்தான். பாடசாலை பகிஷ்கரிப்பு, கடையடைப்பு, ஹர்த்தால், துக்கதினம் முதலான போராட்டங்களிலும் பங்களிப்புச் செய்தான். விடுதலை ஸ்தாபனத்தின் சுவரொட்டிகளை ஒட்டுதல் பிரசுரங்களை மக்கள் மத்தியில் விநியோகம் செய்தல் முதலான பணிகளையும் செய்துவந்தான் தேசத்துரோகிகளும் ஆக்கிரமிப்பு இராணுவமும் கணேசகுமாரைக் கைது செய்யப் பலதடவைகள் முயன்றபோதும் அவன் புத்தி சாதுர்யமாக தப்பிக்கொண்டான். காட்டிக்கொடுக்கும் கயமைத்தனம் எம்மண்ணை விட்டு அகலாமையால் தனது இருப்பை கணேஷ்குமார் இழந்தான். ஆனாலும் எதிரிகளால்அவனிடமிருந்து எந்தவிதமான தகவலையும் பெறமுடியவில்லை. கொடூரமான சித்திரவதைகளையெல்லாம் இன விடுதலைக்காகத் தாங்கிக் கொண்டு மௌனமாகவே இருந்திருக்கிறான். அவனது மரணம் ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவித்துவிட்டது. அவன் வரலாற்றில் நிறைந்து விட்டான்.



தேவகுமார்

யாழ்ப்பாணம் சென்ஸ் ஜோன்ஸ் கல்லூரி இரண்டு மாணவர்களைஇழந்துள்ளது. ஒருவர் விஜயரட்ணம் தேவகுமார், மற்றவர் திருச்செல்வம் அகிலன். தேவகுமார் மாணவர்கள் மத்தியில் அறிவாளி என்று பெயர் பெற்றவர். தேசத் துரோகிகளின் செயலால் அகாலமரணத்தை 30-12-89 அன்று தழுவிக் கொண்ட தேவகுமாரனுக்கு இறக்கும்போது வயது 19மட்டுமே. அந்தச் சிறுவயதில் அவர் எழுதிய உயர்ந்த சிந்தனையோட்டக் கருவூலக் கவிதைகளில் ஒன்று பின்வருமாறு

| | | |
|---|---|---|
| கருணானந்த சிவம் | - நடேஸ்வரா கல்லூரி, காங்கேசன்துறை | 14·12·1988 |
| சண்முகம் சண்முகலிங்கம் | - யாழ். இந்துக் கல்லூரி | 26·01·1989 |
| எஸ். டி. கே. வணசிங்கா | - ஓய்வு பெற்ற அதிபர், மட்டக்களப்பு | 31·03·1989 |
| க. செல்லத்துரை | - அதிபர், மீசாலை விக்னேஸ்வரா | 12·04·1989 |
| குழந்தைவேல் ராஜவேல் | - சங்கீத ஆசிரியர், இன்பருட்டி | 14·08·1989 |
| விநாயக மூர்த்தி | - ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் | 19·06·1989 |
| திரு. ஞானசேகரம் | - புத்தூர் | 01·12·1989 |
| சாந்தகுமாரி | - ஆசிரியை, கிளிநொச்சி | 27·12·1989 |
| கணபதிப்பிள்ளை நவரெட்ணராஜா | - நாவாந்துறை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம் | 24·4·1988 |

எழுதுதல் பொது அறிவுப் போட்டி ஆகியவற்றிலும் பங்குபற்றி பரிசில்களும் விருதுகளும் பெற்றுக்கொண்டார்.

### மாபெரும் சாதனை

இவர் கல்வித்துறையில் பெற்ற சாதனைகளில் மிகவும் பெரிய சாதனை இவர் க, பொ. த. (சா) பரீட்சையில் எட்டுப்பாடங்களிலும் மிகத்திறமைச் சித்திகளைப் பெற்று (Eight Distinctions) அகில இலங்கையிலுமே இப் பரீட்சையில் அதிஉயர்ந்த புள்ளிகளைப் பெற்ற இரண்டா

வேளையில் அவற்றை ஒருங்கிணைத்து இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் என்ற அமைப்பை இவர் உருவாக்கினார். இவரது தந்தையார் கண்டியைச் சேர்ந்த டொன் சைமன் வணசிங்கா. தாயார் மட்டக்களப்பு வந்தாறுமூலையைச் சேர்ந்த முருகப்பன் நாச்சிப்பிள்ளை. தமிழர் போராட்டங்களில் இவர் முன்நின்றார். 1961 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இவர் முன்னணி வகித்தார். சிறீலங்கா

# அருண் பிரசாத்


வது மாணவனாக வந்து தாம் கற்ற கல்லூரிக்கும் தமிழ் சமூகத்திற்கும் தேடிக் கொடுத்த பெருமையாகும். இவரது இந்தசாதனை பற்றி கொழும்பிலிருந்து வெளியாகும் ''தஐலண்ட்'' பத்திரிகை முதற்பக்க செய்தி வெளியிட்டது.

'அறிவும் ஆற்றலும் நிரம்பப் பெற்ற ஒரு மாணவன் அநியாயமாகக் கொல்லப்படுகிறான் என்றால். அதன் அர்த்தம் என்ன? ஒவ்வொரு தமிழ் மாணவனும் எதிர்காலத்தில் ஒரு ஐன்ஸ்டீனாகவோ அல்லது ஷேக்ஸ்பியராகவோ அல்லது பென்சமின் பிராங்கினினாகவோ மிளிர முடியும். கொல்லப்பட்ட மாணவர்கள் பலரும் பல்துறை ஆற்றல் பெற்றவர்களாகவேயுள்ளனர். இப்படிப்பார்த்தால் நமது சமுதாயம் பல ஐன்ஸ்டீன்களையும் பெஞ்சமின் பிராங்கினினையும் ஷேக்ஸ்பியரையும் இழந்து போயுள்ளது' என சிந்தனைச் செல்வர் சிரித்திரன் சிவா ஒரு முறை வேதனையோடு சொன்னார்.

### தொழிற்சங்கவாதி வணசிங்கா

இலங்கையில் மிக நீண்டகால அனுபவமுள்ள தொழிற்சங்க வாதியான டி.எஸ்.கே. வணசிங்கா 31-3-1989 அன்று மட்டக்களப்பில் அவரது இல்லத்தில் வைத்து தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்தமைக்

இராணுவத்தின் அராஜக செயல்களை இவர் கண்டித்து போராட்டங்கள் நடத்தினார். இராணுவ அராஜகங்களை ஏகோபித்த முறையில் எதிர்க்க வேண்டும் என்பதற்காக மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளனம் என்ற அமைப்பை உருவாக்கினார். தமிழர்களுக்காகப்



ஆனந்தராசா (மாஸ்டர்)

பாடுபட்ட ஒரு தலைவரை தேசத்துரோகிகள் தமதுபுதிய எஜமானின் ஏவலை ஏற்று 31-3-89 அன்று இரவு மட்டக்களப்பு வெயிலி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக் கொன்றனர். இவர் சுடப்படுவதற்கு முன்னர் மட்டக்களப்பில் உள்ள ஒரு அரசியல் தலைவரின் இல்லத்தில் றோ அதிகாரிகளும் ஆக்கிரமிப்பு இராணுவத்தின

### கார் பொம் குண்டு வெடிப்பு

யாழ்ப்பாண வரலாற்றிலேயே 'கார் பொம்' நேரக் கணிப்பு வெடிகுண்டு ஒன்றை பொருத்தி பாடசாலை சிறுவர்களை கொன்று குவித்த இரத்தக்கறைபடித்த ஒரு சம்பவம் 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி இடம் பெற்றது. அன்று பாடசாலை முடிவடைகின்ற நேரம். மழைத்தூறலாக பொழிந்து கொண்டிருந்தது. அந்த நேரம் மூன்று ஈ. பி. ஆர் எல்.எவ். தேசத்துரோகிகள், ''றோ'' வின் ஆலோசனைப்படி சென்ற். ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக ஒரு ''டட்சன் பிக் அப்'' வானில் வந்து இறங்கினார்கள். அங்கு ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றைத் தள்ளிக் கொண்டு சென்று சென்ற். ஜோன்ஸ் கல்லூரிக்கும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும் முன்பாகவுள்ள பழைய பூங்கா சந்தியில் நிறுத்தினார்கள். இரண்டு கல்லூரிகளும் முடிவடைந்து மாணவர்கள் வெளியேறும் நேரம் வெடிக்கக் கூடியதாக நேரக் கணிப்பு குண்டு (டைம் பாம்) பொருத்தப்பட்டிருந்தது. நல்ல வேளையாக மழை பெய்தமையால் பாடசாலை மாணவர்கள் வழமைக்கு மாறாக நெருக்கமாக பாடசாலையை விட்டு வெளியேறவில்லை. இதனால் பல மாணவர்களின் உயிர் காப்பாற்றப்பட்டது. மழை பெய்யாவிடின் பெரும் தொகையான மாணவர்கள் இறந்திருப்பார்கள். அப்படி இருந்தும் பின்வரும் அப்பாவி மாணவர்களின் உயிர் அநியாயமாகத் தேசத்துரோகிகளால் பறிக்கப்பட்டது.

செல்வன். சதாசிவம் ஹரிசூதனன் (17 வயது) யாழ். சென்ற் ஜோன்ஸ் கல்லூரி.

செல்வி. குழலி தனபாலசூரியர் (16 வயது) யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்.

செல்வன். பூபால பிள்ளை திருத்தணி கேசன் (17 வயது) யாழ். சென்ற் ஜோன்ஸ் கல்லூரி.

செல்வி. தனபாலசிங்கம் வித்யா (8 ஆம் ஆண்டு) யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

(5ஆம் பக்கம் பார்க்க)

## அறிவுலகப்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்வன் நடேசபிள்ளை சுபநேசன் என்ற 18 வயது சென்ற் ஜோன்ஸ் கல்லூரி மாணவனது கண் பார்வை பாதிக்கப்பட்டது. அத்துடன் சுண்டுக்குளியைச் சேர்ந்த பொது மக்கள் இருவரும் இச் சம்பவத்தில் உயிர்துறந்தனர். இக்கோரக் கொலையைத் தேசத்துரோகிகளைக் கொண்டு நிறைவேற்றிய இந்திய மத்திய அரசின் புலனாய்வுத்துறையினர் இதனையும் விடுதலைப் புலிகள் மீது சுமத்திப் பிரசாரம் செய்தனர். மாகாணசபை தேர்தல் நடைபெறுவதற்கு பத்து நாட்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட இப்படுகொலைகளுக்குக் காரணம் கிழக்கு மாகாணத்தில் இக்கொலைகளைச் சுட்டிக் காட்டி விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதன் மூலம் கிழக்கில் வாழும் தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுவிடவே இக்கொலைகளை றோ செய்தது. ஒரு 'பவூனன்' சிம்மாசனம் ஏற்ற பல பாடசாலை மாணவர்களைப் பலிகொடுத்த பாரத அரசின் பண்பாட்டின் முன் மானுடம் தோற்றுப் போய் விட்டது.

### வல்வைப் படுகொலை

இந்திய இராணுவம் இலங்கையில் நடாத்திய படுகொலைகள் பலவற்றில் மிக மிலேச்சத்தனமானது 1989 ஆகஸ்ட் முதல் வாரம் வல்வெட்டித்துறையில் நடாத்திய படுகொலைகளாகும். அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்னாமில் லெப். வில்லியம்கெலி தலைமையில் நடாத்திய மைலாய் படுகொலையைப் போல, பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அல்ஜீரியாவில் கேணல் மந்நியூ தலைமையில் நடாத்திய கெஸ்பார் படுகொலையைப் போல, பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்தியாவில் ஜெனரல் டயர் தலைமையில் நடாத்திய ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் போல இந்திய பிராந்திய வல்லரசு விஸ்தரிப்பு வாதிகள் ஈழத்தில் யாக்கரை முகாம் பொறுப்பதிகாரியான பிரிகேடியர் சங்கர் பிரசாத் தலைமையில் நடாத்திய வல்வைப் படுகொலை உலக வரலாற்று சுவடிகளில் மானுட நேயத்திற்கு செந்நீரால் அபிஷேகம் செய்த ஒரு கோரச் சம்பவமாகப்பதிவாகியுள்ளது. இக்கோர சம்பவத்தில் பின்வரும் மாணவர்கள் இந்தியப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.


1. இ. யவனராஜ் (11வயது)

இதனால் ஆத்திரமுற்ற இராணுவ முகாம் பொறுப்பதிகாரி முரளீதரன் ஒரு நாள் வீதி வழியாக வந்து கொண்டிருந்த போது அவனை வழிமறித்து துவிச்சக்கர வண்டியை ஒரு சுவரில் வைக்குமாறு கூறிவிட்டு சுவரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டியை கிழிக்குமாறு பணித்தான். முரளீதரன் சுவரொட்டியைக் கிழிக்கும் போது சுட்டுக்கொன்றான். கொலை செய்து விட்டு முரளீதரன் சுவரொட்டியைக் கிழித்தமையால் தான் அவன் சுடப்பட்டான் என்று தான் செய்த கொலையை நியாயப்படுத்தினான்.

உண்மையில் முரளீதரன் சென்றதுவிச்சக்கரவண்டி பூட்டிக்கிடந்தது. பூட்டிய துவிச்சக்கர வண்டியின் திறப்பு முரளீதரன் அணிந்திருந்த கால் சட்டைப் பொக்கட்டில் இருந்தது. முகாமுக்கு முன்னால் சுவரொட்டி கிழிக்கும் எவராவது தனது சயிக்கிளைப் பூட்டி வைத்துவிட்டு கிழிப்பார்களா? இந்திய இராணுவம் எவ்வளவு கேவலமானது என்பதற்கு இச்சம்பவமும் ஒரு உதாரணமாகும்.

### கோபாலகிருஷ்ணன்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவனான முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன் படிக்கும் காலம் தொட்டு மாணவர் அமைப்புக்களில் உறுப்பினராகவிருந்து விடுதலைப்பணிகள் புரிந்து வந்தவராவார். உடுவில் அவரது சொந்த இடமாயினும் மல்லாகம் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் அரசியல் கருத்துக்களைப் பரிமாறும் இடமாகவிருந்தபடியால் அவர் அடிக்கடி மல்லாகம் வருவார் விடுதலைப்புலிகளின் கருத்துக்களாலும் யதார்த்தபூர்வமான போராட்ட அணுகுமுறைகளாலும் கோபாலகிருஷ்ணன் வெகுவாக கவரப்



முரண்பட்ட ஆயுதபாணிகளான தேசத்துரோகிகள் அவரைத்தேடிச் சென்றபோது அவர் வீட்டில் இல்லாமையால் அவரது மகனான அகிலனை கடத்திச் சென்று சுட்டுக்கொன்று வீதியில் வீசியமை நாகரிக மனித வர்க்கத்



### திருச்செல்வம் அகிலன்

திற்கே மாசு கற்பிச்கும் இழிசெயல் என்பதில் இரண்டுபட்ட கருத்துக்கே இடமில்லை. பல துறையாற்றல் பெற்ற அகிலன் அகால மரணம் அடைவதற்கு சில நாட்களுக்கு முன்னர் எழுதிய ஒரு கவிதையில் பின்வருமாறு கூறியிருந்தார்.

மரணத்தின் நாட்களை
நாங்கள் எண்ணுகிறோம்
இப்போது எல்லாம் உணர்கிறோம்
மரணம் கடினமானதொன்றல்ல
ஒரு நாயாய், ஒரு அநாதை பிணமாய்
புதிய எசமானர்களுக்காக
தெருக்களில் மரணிப்பதை
நாம் வெறுக்கிறோம்
மகிழ்ச்சிக்காகப் போராடி
மக்களுக்காக இறப்பதை
நாம் விரும்புகிறோம்

— எஸ். தி. அகிலன்

றுமதி செய்யும் ஒரு கைத் தொழிற்பேட்டையாக அமையக்கூடாது, என்பதே பொதுவான கருத்து,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைபொறுத்தவரை 1983ம் ஆண்டு தொடக்கம் இனக்கலவரங்களின்போதும் இராணுவ நடவடிக்கைகளின்போதும்பல மாணவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 1987 ஆம் ஆண்டுக்குப்பின்னர் அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் நடவடிக்கையின் போது சுட்டுக் கொல்லப்பட்ட மாணவர்களின் விபரம் பின்வருமாறு:-

ஜீவரட்ணம் - கலைப்பீடம்
இன்பராஜா –
முஸாதிக் – கலைப்பீடம்
சிவசங்கர் - மருத்வப்பீடம்
கிருபாகரன் - கலைப்பீடம்
விமலேஸ்வரி –
பிரபாகரன் - கலைப்பீடம்
சத்தியேந்திரா - மருத்துவ பீடம்
ஜெகநாதன் - விஞ்ஞான பீடம்

இவர்களுள் கலைப்பீட இறுதியாண்டு மாணவனான முள்ளியவளையைச் சேர்ந்த சின்னத்துரை பிரபாகரனின் மறைவு எமது இதயங்களில் இரத்தக் கசிவை ஏற்படுத்திய ஒன்றாகவுள்ளது. பல பரிமாணங்களைக் கொண்ட ஒரு வரலாற்றுத்துறை அறிவாளியாக பிரபாகரன் வளர்ந்து வந்தார்.

இவருக்கு யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் கல்வியூட்டிய வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்கள் இவரது நினைவுக் குறிப்பேட்டில் பின்வருமாறு கூறுகிறார்.

''பிரபாகரனின் பங்களிப்பு பற்றி நாம் கொண்டிருந்த எதிர்பார்ப்புக்கள் அநேகம் இத்தனையும் ஒரே நொடியில் சிதறடிக்கப்பட்டதை நினைக்கும் போது கண்கள் கலங்குகின்றன. பிரபாகரனின் திடீர் அஸ்தமனம் ஒரு சாதாரணமானதன்று. நம்மினத்தின் நம்பிக்கை ஒளிக்கதிர்கள் ஒன்றின் திடீர் அஸ்தமனமே. சமூகபிராணியாகிய மனிதன் சமுதாயத்திற்காகவே வாழப் பிறந்தவன், என உள்ளார உணர்ந்தவன். இத்தகைய ஒரு விலை மதிப்பற்ற உயிர் திடீரென நம்மிடமிருந்து பறிக்கப்பட்டதை





11 - 10 - 1989

நேற்று எங்களைப் படம் பிடித்துச் சென்றதற்கான செலவாக ஒவ்வொருவரும் பத்து ரூபா தரவேண்டும் என்று 'வல்லரசாம்' இந்தியாவின் அதிகாரிகள்எம்மைக்கேட்டுள்ளார்கள். தங்களுடைய தேவைக்கு தாங்களே தீர்மானித்து எம்மைப் படம்பிடித்துவிட்டு கைதிகளான எம்மிடம் பத்து ரூபா கேட்கிறார்களே, உங்களிடம் கேட்கவில்லையா என்று பக்கத்து புளொக்கில் கேட்டோம். ''எங்களிடமும் கேட்டார்கள் தான். விடுதலைக்கான பத்திரங்கள் தயாரிப்பதற்கு காசு வேண்டும். பத்து ரூபா தாருங்கள் என்று தான் கேட்டார்கள்'' என்று அவர்கள் சொன்னார்கள். பருத்தித்துறை முகாமில் India Super Power Country என்று நாங்கள் நக்கலாக சொன்னபோது ஒரு ஆமி No Super Poor Country என்று சொன்னதுதான் ஞாபகம் வந்தது. ''ஏற்கனவே எம்மைப் பற்றிய விபரங்கள் பதிவதற்காக என்று சொல்லி மாதாந்தம் எங்கள் எல்லோரிடமும் பணம் வாங்குகிறார்கள். இப்போது படம் எடுத்ததற்கும் காசு கேட்கிறார்கள். இந்த லட்சணத்தில் இவர்களுக்கு ஏன் வல்லரசு ஆசை? எனறு நமது பையன்களுடன் கதைத்துக்கொண்டு இருந்த போது குறிப்பிட்டேன். அப்போது ஒரு பையன் தன்னை கேணல் வாசவன் விசாரித்த போது ''உங்களிடம் கறண்ட் இருக்கிறதா? தேயிலை இருக்கிறதா? பெற்றோல் இருக்கிறதா? ஒன்றுக்குமே வழியில்லாத உங்களுக்கு ஏன் தனிநாடு? நீங்கள் பேசாமல் இந்தியாவுடன் இணைந்து இருப்பது தானே?'' என்று தன்னைக் கேட்டதாயும் ஒன்றுக்குமே வழியில்லாத இந்த நாட்டைப் பிடிப்பதற்காக ஏன் இத்தனை ஆயிரம் பேர் செத்து இவ்வளவு பணத்தைச் செலவழிக்கிறீர்கள் என்று கேட்க நினைத்ததாயும் பின்னர் இந்தக் கழுதையோடு கதைத்து என்ன பயன் என்று நினைத்துவிட்டுப் பேசாமலிருந்ததாயும் தெரிவித்தான்.

மகாராஷ்டிர மாநிலத்தில் சிறந்த மாணவனாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவன் பசிக்கொடுமையினால் நாலாவது மாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்டான் என்ற செய்தியை வெரித்தாஸ் வானொலி சொன்னதை ஒருவன் குறிப்பிட்டு இங்கு செலவுசெய்யும் பணத்தை இந்தியாவில் வறுமையை ஒழிக்கும் திட்டங்களுக்காகச் செலவு செய்யலாம். ராஜீவ் காந்தியின் பிடிவாதத்தால் அநியாயமாகும் இந்தியப் பொருளாதாரத்தை பானை வாங்கவும், படம் எடுக்கவும் என்று எங்களிடம் வாங்கும் பணத்தின் மூலம் ஈடுகட்டலாம் என்று ராஜீவின் ஆலோசகர்கள் யாராவது சொல்லியிருப்பார்கள் என்று நக்கலாகச் சொன்னான். ''பானைக் கதை'' என்னவென்று கேட்டேன். ''உங்களுக்குக் குடிதண்ணீர் வைப்பதற்கும் பானை வாங்கித் தருகிறோம் என்று ஒவ்வொருவரிடமும் ஐந்து ரூபா, பத்து ரூபா என்று வாங்கினார்கள். எல்லோரிடமும் வாங்கிய பணத்தைக் கணக்கிட்டால் ஆயிரக்கணக்கில் இருக்கும். பின்பு ஒவ்வொரு புளொக்குக்கும் ஒவ்வொரு பானை வாங்கித் தந்துவிட்டு ஒருவாரம் செல்ல எல்லாப் பானையையும் தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள்'' என்றான்.

இது மட்டுமல்ல பருத்தித்துறை முகாமில் நாங்கள் வெளியுலகத் தொடர்பு எதுவுமின்றி மாதக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அந்த ஹாட்லிக் கல்லூரி விஞ்ஞான கூடத்தின் தளபாடங்கள் அனைத்தையும் உடைத்து அவற்றைச் சமையலறைக்குக் கொண்டு சென்று விறகாகப் பாவித்ததும் நினைவுக்கு வந்தது. அடுத்தநாட் காலை ஒரு மண்டபத்தின் கூரையில் ஏறி ஒவ்வொரு ஓடாகச் சுத்தியலால் உடைத்துவிட்டு பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் பெறுமதியான ஊசிக்கால்களை (கூரையைத்தாங்கி நிற்பவை) கழற்றி அவற்றைக்கூட அடுப்புக்குள் வைத்து இரவு பகலாக எரித்ததையும் பையன்களுக்குச் சொன்னேன். 'எங்கள் நாட்டிற்குள் புகும்போது வீடு கட்டித் தருகிறோம், பள்ளிக்கூடம் கட்டித் தருகிறோம் என்று வந்தவர்கள் இங்குள்ள பாடசாலைகளை நிர்மூலமாக்கி எமது எதிர்காலச் சந்ததியினரை கல்வியறிவு இல்லாதவர்களாக்கும் ஒரு திட்டத்தின் ஒரு பகுதியே இது'' என்று இன்னொரு பையன் குறிப்பிட்டான். ''ஆம் அன்று எமது பாடசாலையின் தளபாடங்கள், ஊசிக்கால்கள் எரிந்த போது எமது மனமும் இவ்வாறே இரத்தக்கண்ணீர் வடித்தது'' என்று சொன்னேன்.

இன்று வீட்டிற்குக் கடிதமொன்று எழுதினேன். தாங்களாக வந்து தமது அலுவலகத் தேவைக்கு படம் பிடித்துவிட்டு பத்து ரூபா கேட்கிறார்கள். என்னிடம் பணம் இல்லை. அடுத்த விசிற்வரும் போது பத்து ரூபா கொண்டு வரவும். இல்லாவிட்டால் யாரிடமாவது கடன்வாங்கி வரவும்'' என்று வேண்டுமென்றே எழுதினேன். கடிதம் என்ன நோக்கத்தில் எழுதப்பட்டது என்பது இவர்களுக்கு எங்கே புரியப்போகிறது? இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் இந்த விஷயத்தை வெளியில் தெரியப்படுத்துவதற்காகத்தான் நான் இப்படி எழுதினேன் என்பதைப் புரிந்துகொள்வார்கள். இவர்களின் வண்டவாளங்களையெல்லாம் அம்பலப்படுத்தியே ஆகவேண்டும். □

### ஆளுக்கு ஒன்று..

இரண்டு சிறுவர்கள் ஒரு மர முந்திரித் தோட்டத்தில் புகுந்து, கைகள் நிறைய முந்திரிக் கொட்டைகள் பொறுக்கிக் கொண்டு, அடுத்திருந்த மயானத்தில் போய்

வந்தவர்-''பயிருக்கில்லை... எனக்குத்தான்...... வயிற்றுப் பூச்சிக்கு.... வைத்தியர் சொன்னவர்...'' □

லாம் பொய்'' என்று சத்தமிட்டார்.

பேச்சாளர் அமைதியாகப் பதிலளித்தார் —

''இந்த மனிதரைப் பற்றி நான் தாராளமனதுடன்

னாயில் லெப். வில்லியம்கெலி தலைமையில் நடாத்திய மைலாய் படுகொலையைப் போல, பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அல்ஜீரியாவில் ஹேனல் மந்நிபு தலைமையில் நடாத்திய செஸ்பார் படுகொலையைப் போல, பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்தியாவில் ஜெனரல் டயர் தலைமையில் நடாத்திய ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் போல இந்திய பிராந்திய வல்லரசு விஸ்தரிப்பு வாதிகள் ஈழத்தில் யாக்கரை முகாம் பொறுப்திகாரியான பிரிகேடியர் சங்கர் பிரசாத் தலைமையில் நடாத்திய வல்வைப் படுகொலை உலக வரலாற்று சுவடிகளில் மானுட நேயத்திற்கு செந்நீரால் அபிஷேகம் செய்த ஒரு கோரச் சம்பவமாகப் பதிவாகியுள்ளது. இக்கோர சம்பவத்தில் பின்வரும் மாணவர்கள் இந்தியப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1. இ. யவனராஜ் (11வயது) சிவபுரவீதி V.V.T
2. ஆ. சுந்தரேஸ்வரன் (11) சிதம்பரா கல்லூரி V.V.T
3. பா. மகேந்திரதாஸ் (16) சிதம்பராகல்லூரி V.V.T
4. செல்வி நா. பவப்பிருந்தா (15வயது) உடுப்பிட்டி
5. அ. சுவர்ணதாஸ் (18) மாணாங்கானை V.V.T
6. கு. செல்வானந்தவேல் (18) திருவில் V.V.T
7. ஆ. பரம்சோதி (17) சிதம்பரா கல்லூரி V.V.T
8. ஆ. பராக் (18) சிதம்பரா கல்லூரி V.V.T
9. அ. மதிவாணன் (17) சிதம்பரா கல்லூரி V.V.T

**முரளீதரன்**

**கோரக் கொலை.**

மானிப்பாய் இராணுவ முகாம் அருகிலுள்ள வீட்டில் வசித்து வந்த கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவனான பதினாறு வயது நிரம்பிய பரமேஸ்வரன் முரளீதரனின் கொலையானது மிகவும் கொடூரமானது. இம்மாணவன் தனது வீட்டிற்கு அருகிலுள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்திற்கு பொது மக்கள் வாசிப்பதற்காக பத்திரிகைகளை எடுத்து வந்து வைப்பது வழக்கமாகும். இவரது வீட்டிற்கு அருகில் இருந்த இராணுவ முகாம் பொறுப்பதிகாரி சனசமூக நிலையத்திற்கு பத்திரிகைகளைப் போடு முன்னர் தான் வாசிக்க தினமும் எடுத்து வந்து தரவேண்டும் என்று இம்மாணவனுக்கு உத்தரவு போட்டான். இந்த உத்தரவு விடுதலைப் போராளிகள் மனதில் தப்பபிப்பிராயத்தை உருவாக்கும் என இம்மாணவனின் பெற்றோர்கள் முகாம் பொறுப்பதிகாரியிடம் சொல்லிஉங்கள் கட்டளையை எம்மால் நிறைவேற்ற முடியாது என மறுத்து விட்டனர்.

ஆதரவாளர் அரசியல் கருத்துக்களைப் பரிமாறும் இடமாகவிருந்தபடியால் அவர் அடிக்கடி மல்லாகம் வருவார் விடுதலைப்புலிகளின் கருத்துக்களாலும் யதார்த்தபூர்வமான போராட்ட அணுகுமுறைகளாலும் கோபால கிருஷ்ணன் வெகுவாக கவரப்



முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன்

பட்டார். மல்லாகத்திலுள்ள ஒரு விடுதலைப்புலி ஆதரவாளருடன் இணைந்து விடுதலைப் பணிகள் செய்து கொண்டிருந்தபோது அவரைப் பற்றிய தகவலை துரோகி, ஒருவன் மல்லாகம் இராணுவமுகாமில் இருந்த அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கும் அவர்கள் மத்தியில் கூடாரமடித்து கும்மாளமடித்துக் கொண்டிருந்த தேசத்துரோகிகளுக்கும் கொடுத்தான். தேசத்துரோகிகளின் தலைவன் அந்த விடுதலை அபிமானியை நரவேட்டையாட அலைந்து திரிந்தான் அதிஷ்டவசமாக அந்த விடுதலை அபிமானி தப்பிக் கொண்டார். ஆனால் அந்த ஆதரவாளரைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டிருந்த முத்துக்குமாரு கோபால கிருஷ்ணன் தேசத்துரோகிகளால் அடித்தே கொல்லப்பட்டதை விடுதலை நெஞ்சங்கள் எப்படித்தான் மறக்கமுடியும்?

**திருச்செல்வம்**

**அகிலன்**

முன்னாள் முரசொலி ஆசிரியர் எஸ். திருச்செல்வம் அவர்களின் ஒரே மகன் அகிலன் யாழ்ப்பாணம் சென்ற் ஜோன்ஸ் கல்லூரியின் முன்னணி மாணவர்களுள் ஒருவராக விளங்கியவர்.

கருத்தைக் கருத்தால் மோதி மற்றவர் கருத்தைக் கவர்வதே சிறப்பான வழி என்பது மட்டுமல்ல சினேக பூர்வமான கருத்துப்பரிமாறல்களுக்கும் ஆரோக்கியமான கருத்து வளர்ச்சிக்கும் அதுவே கண்ணியமான மார்க்கமுமாகும். எஸ். திருச்செல்வம் அவர்களது கருத்துடன்


பிணமாய் புதிய சமமானர்களுக்காக தெருக்களில் மரணிப்பதை நாம் வெறுக்கிறோம் மகிழ்ச்சிக்காகப் போராடி மக்களுக்காக இறப்பதை நாம் விரும்புகிறோம்

— எஸ். தி. அகிலன்

அறிவும் ஆற்றலும் பெற்றவரான அகிலன் இளம் வயதில் மறைந்தமை அறிவுலகிற்கு ஏற்பட்ட ஒரு இழப்பு என்பதில் சந்தேகமில்லை.

**பல்கலைக்கழக மாணவர்கள்**

ஒரு நாட்டின் எதிர்காலத் தவர்களையும் தலைசிறந்த நிர்வாகிகளையும் உருவாக்கும் பணியில் பல்கலைக் கழகத்திற்கு முக்கியபங்குண்டு ஒவ்வொரு கால கட்டத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு பல்கலைக்கழகம் மாணவர்களுக்கு கல்வியூட்ட



சின்னத்துரை பிரபாகரன்

வேண்டும் என்பது பொதுவான ஒரு கோட்பாடாகும். ஒரு பல்கலைக் கழகம் ஊழியச் செறிவுள்ள மாணவர்களை உற்பத்தி செய்து அவர்களை வெளிநாடுகளுக்கு ஏற்

டிய வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்கள் இவரது நினைவுக் குறிப்பேட்டில் பின்வருமாறு கூறுகிறார்.

''பிரபாகரனின் பங்களிப்பு பற்றி நாம் கொண்டிருந்த எதிர்பார்ப்புக்கள் அநேகம் இத்தனையும் ஒரே நொடியில் சிதறடிக்கப்பட்டதை நினைக்கும் போது கண்கள் கலங்குகின்றன. பிரபாகரனின் திடீர் அஸ்தமனம் ஒரு சாதாரணமானதன்று. நம்மினத்தின் நம்பிக்கை ஒளிக்கதிர்கள் ஒன்றின் திடீர் அஸ்தமனமே. சமூகபிராணியாகிய மனிதன் சமுதாயத்திற்காகவே வாழப் பிறந்தவன், என உள்ளார உணர்ந்தவன். இத்தகைய ஒரு விலை மதிப்பற்ற உயிர் திடீரென நம்மிடமிருந்து பறிக்கப்பட்டதை நினைக்கும் போதே நெஞ்சம் உருகுகிறது.'' என எழுதியுள்ளார்.

**பேராசிரியர்கள்**

கடந்த இரண்டு வருட காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இரண்டுபேராசிரியர்களை இழந்துள்ளது ஒருவர் கல்விப்பீடம் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள். இவர் 1987 ஒக்டோபர் இராணுவ நடவடிக்கையின் போது இறந்தார். மற்றவர் 1989ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தேசத் துரோகிகளான ஈ. பி. ஆர். எல்.எவ். குழுவினரால் 'றோ'வின் பணிப்புரைகளின் படி கொல்லபட்ட திருமதி திரணகம அவர்களாகும். இவர் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உடற்கூற்றியல் பிரிவு தலைவராகவிருந்தார்.

இவ்வாறு பல கொலைகளைச் செய்தசொந்த தேசத்துரோகிகளும் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவமும் விடுத்த அறிக்கை ஒன்றின் வாசகம் இப்படிக் காணப்படுகிறது.

''ஆசிரியர்களே! மாணவர்களே! நாம் மாணவர்களின் சீருடைகளின் இரத்தக் கறையையோ கரும்பலகைகளில் துப்பாக்கிச் சன்னத் துவாரங்களையோ அல்லது வகுப்பறைகளில் ஆசிரியர்களின் சுவரொட்டிகளையோ பார்க்க விரும்பும் வக்கிர உணர்வு படைத்தவர்கள் அல்ல.''

☐

நாடு நீங்கள் பேசாமல் இந்து யாவுடன் இணைந்து இருப்பது தானே?'' என்று தன்னைக் கேட்டதாயும் ஒன்றுக்குமே வழியில்லாத இந்த நாட்டைப் பிடிப்பதற்காக ஏன் இத்தனை ஆயிரம் பேர் செத்து இவ்வளவு பணத்தைச் செலவழிக்கிறீர்கள் என்று கேட்க நினைத்ததாயும் பின்னர் இந்தக் கழுதையோடு கதைத்து என்ன பயன் என்று நினைத்துவிட்டுப் பேசாமலிருந்ததாயும் தெரிவித்தான்.

மகாராஷ்டிர மாநிலத்தில் சிறந்த மாணவனாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவன் பசிக்கொடுமையினால் நாலாவது மாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்

பின்பு ஒவ்வொரு புளொக்குக்கும் ஒவ்வொரு பானை வாங்கித் தந்துவிட்டு ஒருவாரம் செல்ல எல்லாப் பானையையும் தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள்'' என்றான்.

இது மட்டுமல்ல பருத்தித்துறை முகாமில் நாங்கள் வெளியுலகத் தொடர்பு எதுவுமின்றி மாதக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அந்த ஹாட்லிக் கல்லூரி விஞ்ஞான கூடத்தின் தளபாடங்கள் அனைத்தையும் உடைத்து அவற்றைச் சமையலறைக்குக் கொண்டு சென்று விறகாகப் பாவித்ததும் நினைவுக்கு வந்தது. அடுத்தநாட் காலை ஒரு மண்டபத்தின் கூரையில் ஏறி ஒவ்வொரு ஓடாகச் சுத்தியலால்

கத் தேவைக்கு படம் பிடித்துவிட்டு பத்து ரூபா கேட்கிறார்கள். என்னிடம் பணம் இல்லை. அடுத்த விசிற்வரும் போது பத்து ரூபா கொண்டு வரவும். இல்லாவிட்டால் யாரிடமாவது கடன்வாங்கி வரவும்'' என்று வேண்டுமென்றே எழுதினேன். கடிதம் என்ன நோக்கத்தில் எழுதப்பட்டது என்பது இவர்களுக்கு எங்கே புரியப்போகிறது? இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் இந்த விஷயத்தை வெளியில் தெரியப்படுத்துவதற்காகத்தான் நான் இப்படி எழுதினேன் என்பதைப் புரிந்துகொள்வார்கள். இவர்களின் வண்டவாளங்களையெல்லாம் அம்பலப்படுத்தியே ஆகவேண்டும். ☐

## ஆளுக்கு ஒன்று..

இரண்டு சிறுவர்கள் ஒரு மரமுந்திரித் தோட்டத்தில் புகுந்து, கைகள் நிறைய முந்திரிக் கொட்டைகள் பொறுக்கிக் கொண்டு, அடுத்திருந்த மயானத்தில் போய் மறைந்திருந்து, சமபங்காகப் பிரிப்பதற்காக, எனக்கொன்று, உனக்கொன்று .. என எண்ணிக்கொண்டிருந்தனர். அவ்வேளை இரண்டு முந்திரிக்கொட்டைகள் உருண்டு வெளியே நடை பாதைக்குப் போய்விட்டன.

அப்பாதையால் [மதுபோதையில்] சென்ற ஒருவர் சுடலையிலிருந்து குரல் வருவதைக் கேட்டுப் பயந்து எடுத்தார் ஓட்டம். ஓடிக்களைத்து ஒரு மதுக் கடையில் நுளைந்தார். ஒரு கிளாஸ் மது கேட்டு வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு, ஓ மை கோட்... என்ற படி ஒரு கதிரையில் அமர்ந்தார்.

"என்ன சங்கதி மகனே... எதைக் கண்டு இப்படி ஓடி வந்தாய்?" என்று கேட்டார் அருகிலிருந்த கிழவர்.

"சுடலையிலே பேய்கள் பங்கு பிரிக்கின்றன" என்றார் அவர், நடுங்கியபடி.

**தொகுப்பு:**
**எஸ். பி. கே.**

"உனக்கென்ன மேல்வீடு பிழையோ?" என்று கேட்டார் கிழவர்.

"என்ன... எனக்கா நீ வா காட்டுகிறேன் என்றார்" அவர்.

"சரி வா..." என்றார் கிழவர். இருவருமாக சுடலைப் பக்கம் போனார்கள்.

தெருவில் நின்று காதுகொடுத்து அவதானித்தார்கள்.

"ஒன்று உனக்கு... ஒன்று எனக்கு... சரி இவ்வளவும் உனக்கு ...இவ்வளவும் எனக்கு..: வெளியில் விழுந்த இரண்டில் ஒன்று உனக்கு... ஒன்று எனக்கு..... எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போகலாம்..."

கிழவர் மற்றவரை முந்திக் கொண்டு எடுத்தார் ஓட்டம்.

☐

இரசாயனப் பொருட்கள் விற்பனைக் கடைக்கு வந்தவர் – ''பூச்சிக் கொல்லி ஒரு சிறு போத்தல் தாருங்கோ...''

விற்பனையாளர் – ''என்ன பயிருக்கு....?''

வந்தவர்-''பயிருக்கில்லை... எனக்குத்தான்...... வயிற்றுப் பூச்சிக்கு.... வைத்தியர் சொன்னவர்...''

☐

குற்றஞ்சாட்டப்பட்டவனைப் பார்த்து நீதிபதி கேட்டார் – உனக்காக வாதாட ஒரு சட்டத்தரணி உண்டா?

குற் — '' தேவையில்லை ஐயா... என் நண்பர்கள் யூரியில் இருக்கிறார்கள்''

☐



## ஒரே நாய்

ஆசிரியர் — "நாயைப் பற்றி நீ எழுதிய கட்டுரை சொல்லுக்குச் சொல் உன் அண்ணன் எழுதியது போலவே இருக்கு...?"

மாணவன் — "சரி சேர்... வீட்டில் ஒரு நாய்தான் இருக்கு சேர்... அதைப்பற்றித்தான் அவனும் எழுதினான்"

☐

## உண்மை கசக்கும்

மாபெரும் கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருந்தார் ஒரு எம். பி.

கூட்டத்திலிருந்த, அவருடைய அரசியல் எதிரி ஒருவர் இடைமறித்து, ''நீங்கள் என்னைப் பற்றிச் சொல்வதெல்லாம் பொய்'' என்று சத்தமிட்டார்.

பேச்சாளர் அமைதியாகப் பதிலளித்தார் —

''இந்த மனிதரைப் பற்றி நான் தாராளமனதுடன் பொய்களையே சொன்னேன். அவரைப் பற்றிய உண்மைகளை கூறத் தொடங்கினால்....''

## புதிய சிந்தனை

கிணற்றை நோக்கிச் செல்லும் வழியில் இரு வாளிகள் சந்தித்துக் கொண்டன.

என்ன உற்சாகமின்றித் தோன்றுகிறாய் என்று கேட்டது ஒன்று.

"ஆ, எங்கள் பயனற்ற தன்மையைப் பிரதிபலிக்கிறேன். நாங்கள் எங்களைநிறைத்துக்கொண்டே போகிறோம்." ஆனால் வெறுமையாகவே திரும்புகிறோம்.

"அன்பே! அப்படி எண்ணுவது எவ்வளவு அந்நியமாகப் படுகிறது. நாம் பெறுமையாக வந்தாலும் எப்போதும் நிறை வோடுதானே போகிறோம். இந்த ரீதியில் பார்த்தியானால், என்னைப் போல் நீயும் மகிழ்ச்சியாகவே இருக்க முடியும்.

☐

## பாவமன்னிப்பு

தான் செய்த பாவங்களுக்கு மன்னிப்புப் பெற மதகுருவிடம் போனான் ஒரு வாலிபன்.

அவனிடமிருந்து பாவச் செயல்களையெல்லாம் கேட்டறிந்த குரு, 'சரி அவ்வளவு தானே? உண்மையில் நீ எல்லாவற்றையும் என்னிடம் சொல்லிவிட்டாயா?' என்று கேட்டார்.

'இல்லை... ஃபாதர்... என்று தயங்கிய வாலிபன் தொடர்ந்தான்—

'நேற்று மாலையில் ஒரு பழைய கயிற்றைத் தெருவில் கண்டு எடுத்துச் சென்றேன்...'

குரு இடைமறித்தார்.

'ஒரு பழைய கயிற்றை எடுத்துப் போவது பாவமில்லை மகனே, அதை நாங்கள் மன்னித்துவிடலாம்.'

'ஓ .. நன்றி ஃபாதர் நன்றி, ஆனால் அந்தக் கயிற்றின் முடிவில் ஒரு பசுமாடு இருந்தது. அதை சொல்ல மறந்துவிட்டேன்' என்றான் அவன் அமைதியாக. ☐

# சிறுவர் பகுதி




## கண்டுபிடிப்புகள்

### அச்சுயந்திரம்

அச்சகம் இன்று நீங்கள் படிக்கும் இப்பத்திரிகை முதல் உங்களுக்கு பிடித்த அறிவு சமாச்சாரங்களை பலருக்கு இலகு முறையில் பரப்பப் பயன்படும் சாதனம். இந்த அச்சகவியல் எப்படி ஆரம்பமானது? அச்சகவியலின் ஆரம்பம் சீன தேசம் ஆண்டு 1593. அக்காலத்தில் தமக்கு தேவைவான எழுத்துக்களை மரக்கட்டைகளில் வெட்டி மை பூசி அடித்து வந்தார்கள். சீனரின் இவ் ஆரம்பத்தின் பின் ஐரோப்பிய நாடுகளில் அச்சகவியல் நவீனமானது. 'கூடன்பேர்க்' என்பவர் அச்செழுத்தை உருவாக்கி அச்சியந்திர யுகத்தை ஆரம்பித்து வைத்தவர் ஆவார். இவர் உருவாக்கிய அச்சியந்திரத்தின் பின் பல நவீன அச்சு நுணுக்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சேக்ஸ்டன் என்பவர் நவீன அச்சியந்திரத்தை உருவாக்கினார்.

இரண்டு மூன்று வர்ணங்களை ஒரே படத்தில் அச்சிடும் முறை 'லித்தோ' எனப்படும். இவ் லித்தோ முறை 1857–ல் 'ஸ்கோப்லர்' என்ற ஜேர்மனியரால் அறிமுகப் படுத்தப்பட்டது.

இதே வேளை அச்சுக்கோர்க்கும் முறையில் புதிய கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவை தனியச்சுப் பொறி, வரியச்சுப் பொறி.


ஒரு பெரிய சட்டியில் ஈயம் உருக்கிக் காய்ச்சப்பட்டுக் கொண்டிருக்கும் அதனருகே ஒரு அச்சுப் பொறி இருக்கும். நாம் நமக்கு என்ன எழுத்துக்கள் தேவையோ அவற்றை பொறியியல் இருக்கும் அச்சுப் பலகையில் தட்டலாம். பொறி தட்டப்பட்டதும் பொறி அவ்அவ் எழுத்துக்களை ஒரு தடித்த அட்டையிலே அழுத்தும் இவ்வாறு அழுத்தியதும் எழுத்து அட்டையில் பதிந்துவிடும். இப்படி முழுவதும் அழுத்தியபின் ஈயம் அட்டையில் பாயவிடப்படும். இப்போது ஈயத்தகடு ஒன்று உருவாகும். அதில் அட்டையில் உள்ள எழுத்துகள் மேடாகக் காணப்படும். இத்தகட்டை அச்சியந்திரத்திலுள்ள உருளையில் பூட்டி அச்சிடப்படும்.

இங்கு அச்சுக்கோக்கும் பொறிகள் தனியச்சுப் பொறி வரியச்சுப் பொறி என இருவகைப்படும். தனியச்சுப் பொறி 1887இல் 'லோனஸ்டன் என்ற அமெரிக்கராலும், வரியச்சுப் பொறி 1885ல் 'மேகன்கலர்' என்ற அமெரிக்கரால் தயாரிக்கப் பட்டது.

அச்சியந்திரத்தில்றோட்டர் என்ற வகை உண்டு. இது அது 1846 இல் அமெரிக்கரான 'ஹோர்' என்பவரால் தயாரிக்கப்பட்டது,

அச்சியந்திரத்தை ஒத்த தட்டச்சு இயந்திரத்தை உங்களுக்குத் தெரிந்திருக்கும். இத் தட்டச்சு இயந்திரம் 1868ல் 'சோல்ஸ்' என்ற அமெரிக்கரால் உருவாக்கப்பட்டது.

## வழிகாட்டுங்கள் .....



இதோ இங்கே நிற்கும் மண்புழுக் குட்டிக்கு தனது வீடு செல்லும் பாதை தெரியவில்லையாம்... நீங்கள் அதற்கு வழி காட்டி உதவுங்களேன்.

## நோபல் பரிசு என்றால் என்ன?

அடிக்கடி பத்திரிகைகளில் பார்ப்பீர்கள், செய்திகன்ல் கேட்பீர்கள். "இவருக்கு இந்த ஆண்டு நோபல் பரிசு வழங்கப்படுகிறது" என்று. நோபல்பரிசு என்றால் என்ன? அது எதற்காகக் கொடுக்கப்படுகின்றது?

சென்ற நூற்றாண்டின் இறுதியில் 'அல்பிரெட் நோபல்' என்ற விஞ்ஞானி சுவீடன் என்ற நாட்டில் வாழ்ந்தவர் நீங்கள் நினைக்கும் 'டைனமெற்றை' கண்டுபிடித்த 'நோபல்' தான் இவர். இவர் நிறைந்த சொத்திற்கு வாரிசு. ஆனாலும் என்ன? இவரது வாழ்க்கையோ சோகமானது. கவலையான வாழ்க்கைவாழ்ந்தார். அதனால் தனிமரமான எனக்கு ஏன் இவ்வளவு சொத்துக்கள் என நினைத்தார். தனது சொத்தை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என நினைத்தார். உலகில் மனித முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவர்கள் செல்வமின்மையால் வாடுதலைக்கண்டார். உடனே ஒரு யோசனை நோபலின் மனதில் உதித்தது. ஒவ்வொரு துறையிலும் மனித முன்னேற்றத்திற்காக உழைத்தவர்களை தெரிவு செய்து அவர்கட்கு தனது சொத்துக்களைப் பரி



நோபல் பரிசுப் பதக்கம்

சாக அளிக்க முன் வந்தார். தனது சொத்துக்களை பணமாக்கி சுவீடன் வங்கியில் இட்டார். பணத்தின் பெறுமதி 900,000 டொலர்கள். இந்தப் பணத்திற்கு வங்கி தரும் வட்டியை பரிசாக அளிக்குமாறு உறுதி எழுதி வைத்து விட்டு 1896 ஆம் ஆண்டில் மரணமானார்.

நோபல் உயிரோடு இருக்கும்வரை எவருக்கும் பரிசு கொடுக்கப்படவில்லை. ஆம் அவர் தம் சொத்தை உலக நன்மைக்காக வழங்கும் நல்ல காட்சியைஅவர்காணவில்லை. நோபல் மரணமானார் இவர் இறப்பின்பின் உலகில் மனித குலத்தின் நன்மைக்காக உழைப்போர் எவரெவர் என்று ஒவ்வொரு துறையும் ஆராயப்பட்டது. அத்துடன் பரிசாக வழங்கப்பட ஒரு பதக்கமும் தயாரானது. அல்பிரெட் நோபலின் படத்துடனான பதக்கம் ஒவ்வொரு முறையும் பரிசுடன் சேர்த்து வழங்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது. சரி இதைத் தீர்மானித்தவர்கள் யார்?

நோபல் உயிரோடு இருக்கும் போது அவரால் நிர்ணயிக்கப்பட்ட பரிசுக்குழுவினர் தான் நோபலின் திட்டத்தை செயலாக்க முன் வந்தவர்கள்.

## தேடிப்படியுங்கள்....

ஒலிவர் ருவிஸ்ற்; வாழ்க்கையின் கஷ்டங்களை உங்களுக்கேற்ற முறையில் தருகின்றார் இதன் எழுத்தாளர் சார்ள்ஸ் டிக்கன்ஸ் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தம்சிறுவயதில்மிகமிக கஷ்டப்பட்டவர் தன்வாழ் நாளில் பட்ட கஷ்டங்களை அடிப்படையாகக்கொண்டு இளைஞர்களுக்கும் சிறுவர்க்கும் எற்ற வகையில் கதைகளாகவும் கட்டுரைகளாகவும் எழுதினார். அப்படி அவர் எழுதிய கதைகளில் ஒன்று தான் இந்த ஒலிவர் ருவிஸ்ற்.

### சார்ள்ஸ் டிக்கன்ஸ் எழுதிய ஒலிவர் ருவிஸ்ட்

கதைச்சுருக்கம் ஒலிவர் ருவிஸ்ற் என்பவர் ஒருசிறுவன். லண்டன் மாநகரின் வீதியோரத்தில் வாழ்பவன் பெற்றோரை இழந்து வீதிவீதியாக அநாதையாகச்சுற்றுகின்றான் அப்படிச் சுற்றும் போது நிறையத் துன்பங்களை அனுபவிக்கிதிறான். பல மோசடிக்காரர்களிடம் அகப்பட்டு திணறுகிறான். இச் சிறுவன் ஒரு கிழவனிடம் அகப்பட்டுக் கொள்கிறான். அவன் ஒரு விசித்திரமானமனிதன் நீங்கள் கல்விபயில பள்ளிக் கூடங்கள் உள்ளன ஆனால் இச்கிழவனும் ஒரு பள்ளிக்கூடம் வைத்திருக்கின்றான் அங்கு கற்பிப்பது என்ன தெரியுமா? பிறரிடமிருந்து பொருட்களை எப்படித் திருடுவது? வீதியில் அநாதையாகச்சுற்றும் ஏழ்மையான சிறுவர்களை பிடித்து வந்து அவர்கட்கு திருடுவது பற்றி கற்றுக் கொடுக்கின்றான். சிறுவர் திருடும் பொருட்களை தான் வாங்கி அனுபவிக்கின்றான். ஆனால் சிறுவர்களை வதைத்தான் இப்படி வதைப்பட்டவர்களில் ஒலிவரும் ஒருவன்.

இவனிடம் வதைபட்ட ஒலிவர் என்ன செய்தான்? இதை நான் கூறமாட்டேன் நீங்களே தேடிப்படித்து முடிவை அறியுங்கள்.

நீங்கள் இக் கதைகளை பெற எனது சில குறிப்புகள் இது பலரால் சுருக்கி எளிய ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது. லோங்மன், ஒரியன்ற் என்ற நிறுவனங்கள் இக்கதையை எளிய ஆங்கிலத்தில் பிரசுரித்தன

நான் அறிந்த வரையில் பல ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் வெளிவரும் 'ஈழநாடு வாரமலர்' பத்திரிகையில் பெருமாள் எனபவரால் மொழிபெயர்க்கப்பட்டு தொடராக வெளிவந்தது.

இனி என்ன தேடுதல் வேட்டையை ஆரம்பியுங்கள்.

## நிறந்தீட்டிப்பாருங்கள்!



\+ அடையாளமிடப்பட்ட கட்டங்களுக்கு ஒரு நிறமும்
— அடையாளமிடப்பட்ட கட்டங்களுக்கு ஒரு நிறமும் தீட்டுக.



வன்னி மக்களில் முக்கால் வாசிப்பேர் விவசாயத்

கடந்த காலத்தில் ஏற்பட்ட இராணுவ அட்டூ

நவீன அச்சு நுணுக்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சேக்ஸ்டன் என்பவர் நவீன அச்சியந்திரத்தை உருவாக்கினார்.

இரண்டு மூன்று வர்ணங்களை ஒரே படத்தில் அச்சிடும் முறை 'லித்தோ' எனப்படும். இவ் லித்தோ முறை 1857–ல் 'ஸ்கோப்லர்' என்ற ஜேர்மனியரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதே வேளை அச்சுக்கோர்க்கும் முறையில் புதிய கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவை தனியச்சுப் பொறி, வரியச்சுப் பொறி.

ஒரு பெரிய சட்டியில் ஈயம் உருக்கிக் காய்ச்சப்பட்டுக் கொண்டிருக்கும் அதனருகே பொறிகள் தனியச்சுப் பொறி வரியச்சுப் பொறி என இருவகைப்படும். தனியச்சுப் பொறி 1687இல் 'லோனஸ்டன் என்ற அமெரிக்கராலும், வரியச்சுப் பொறி 1885ல் 'மேகன்கலர்' என்ற அமெரிக்கரால் தயாரிக்கப்பட்டது.

அச்சியந்திரத்தில்றோட்டர் என்ற வகை உண்டு. இது அது 1846 இல் அமெரிக்கரான 'ஹேர்' என்பவரால் தயாரிக்கப்பட்டது,

அச்சியந்திரத்தை ஒத்த தட்டச்சு இயந்திரத்தை உங்களுக்குத் தெரிந்திருக்கும். இத் தட்டச்சு இயந்திரம் 1868ல் 'சோல்ஸ்' என்ற அமெரிக்கரால் உருவாக்கப்பட்டது.

என்று. நோபல்பரிசு என்றால் என்ன? அது எதற்காகக் கொடுக்கப்படுகின்றது?

சென்ற நூற்றாண்டின் இறுதியில் 'அல்பிரெட் நோபல்' என்ற விஞ்ஞானி சுவீடன் என்ற நாட்டில் வாழ்ந்தவர் நீங்கள் நினைக்கும் 'டைனமெற்றை' கண்டுபிடித்த 'நோபல்' தான் இவர். இவர் நிறைந்த சொத்திற்கு வாரிசு. ஆனாலும் என்ன? இவரது வாழ்க்கையோ சோகமானது. கவலையான வாழ்க்கைவாழ்ந்தார். அதனால் தனிமரமான எனக்கு ஏன் இவ்வளவு சொத்துக்கள் என நினைத்தார். தனது சொத்தை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என நினைத்தார். உலகில் மனித முன்னேற்றத்



நோபல் பரிசுப் பதக்கம்

சாக அளிக்க முன் வந்தார். தனது சொத்துக்களை பணமாக்கி சுவீடன் வங்கியில் இட்டார். பணத்தின் பெறுமதி 900,000 டொலர்கள். இந்தப் பணத்திற்கு வங்கி தரும் வட்

காட்சியை அவர் காணவில்லை. நோபல் மரணமானார் இவர் இறப்பின்பின் உலகில் மனித குலத்தின் நன்மைக்காக உழைப்போர் எவரெவர் என்று ஒவ்வொரு துறையும் ஆராயப்பட்டது. அத்துடன் பரிசாக வழங்கப்பட ஒரு பதக்கமும் தயாரானது. அல்பிரெட் நோபலின் படத்துடனான பதக்கம் ஒவ்வொரு முறையும் பரிசுடன் சேர்த்து வழங்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது. சரி இதைத் தீர்மானித்தவர்கள் யார்?

நோபல் உயிரோடு இருக்கும் போது அவரால் நிர்ணயிக்கப்பட்ட பரிசுக்குழுவினர் தான் நோபலின் திட்டத்தை செயலாக்க முன் வந்தவர்கள். □



+ அடையாளமிடப்பட்ட கட்டங்களுக்கு ஒரு நிறமும்
— அடையாளமிடப்பட்ட கட்டங்களுக்கு ஒரு நிறமும் தீட்டுக.




# இருதயங்கள் ஓலமிடுகின்றன!

இயந்திரத்தனமாக இயங்கிக் கொண்டிருக்கும் நகரப்பகுதியில் வாழும் மனிதன், தன் ஒய்வுக்காலத்தை இனிமையாக்கிக் கொள்வதற்காக - கிராமத்திற்குள் நுழைந்து விடுகிறான்.

இயற்கை தன் இளைய கரங்களினால் எந்தநாளும் கவிதை வரைந்து கொண்டிருக்கும் இடம் கிராமம்.

கிராமங்களில் இயந்திரங்களின் சப்தத்தைக் கேட்க முடியாது.

இலைகள் சலசலப்பதும், தூரத்துப் புலவுகளில் நரிகள் ஊளையிடுவதும், குயில்கள் - மயில்கள் ஆனந்தத்தில் ஓசை எழுப்புவதும் அமைதியைத் தேடும் நெஞ்சங்களுக்கு ஆறுதலைக் கொடுக்கின்றன.

வடமாகாணத்தில் உள்ள வன்னிப்பகுதி கிராமங்களில் அமைதி 'தாராளமாக' நிறைந்திருக்கிறது.

ஆனால் —

இங்கே வாழும் மக்கள் வறுமையால் புலம்புவது மட்டும் சப்தத்துடன் சம்பந்தப் படுத்தப்படாமல் தனித்து இருக்கிறது.

வன்னி மக்களில் முக்கால் வாசிப்பேர் விவசாயத்தித்தில் தான் தமது வாழ்க்கைக் காலத்தை முடக்கி வைத்துள்ளனர்.

மண்ணில் தூவிய விதை, அந்த மண்ணிற்கே உரமாகி விடுவதுண்டு.

வெயிலும், மழையும் தான் அவர்களின் நிரந்தரத் தோழர்கள்.

இந்தத் தோழர்கள், கை கொடுப்பதற்கு மாறாக-கைவிரித்து விடுவது சோகமானது.

மாரி வந்த பின்பும் வெள்ளை மேகங்கள் தான் வானில் அலைந்து திரியும்.

திடீரென்று அடைமழை பொழியும் காலம் தப்பி மழை பெய்யும் போது, சேகரித்து வைக்கப்பட்டிருந்த விதை பொருட்கள் பசி அரக்கனுக்கு படையல் செய்யப்பட்டிக்கும்.

எப்படியோ சிலர் இங்கே விதைத்து விடுகிறார்கள். மண்ணில் கிடக்கும் விதைகளை முளைக்க வைப்பதற்கும், வளர்த்தெடுப்பதற்கும் விவசாயி படும் பாடு... அப்பப்பா. அவற்றை வார்த்தைகளுக்குள் பூட்டிவைக்க முடியாது.

எந்தப் பொருளுக்காக நாம் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறோமோ, அந்த ஏக்கத்திலும் தவிப்பிலும் உள்ள சுகம் அந்தப் பொருள் கையில் கிடைத்த பின் ஏற்படுவதில்லை.

— இது நிதர்சனம்!

வன்னிக் கிராமங்களில் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவனின் நிலையும் இது தான்.

அறுவடைக்குப் பின், கடன்காரக் கோஷ்டிகளுக்கு பதில் சொல்வது எப்படி என்ற நிலைமையில், பலர் இங்கே அறுவடை செய்வதை விரும்புவதில்லை என நான் அறிந்துள்ளேன்.

என்ன செய்வது? விதைத்ததை அறுக்கத்தானே வேண்டும்.

நெல் விதைத்தவனின் வீட்டில் வைக்கோலையும், சப்பியையுமே காணமுடியும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட இராணுவ அட்டூழியத்தினால், பல நிலயங்கள் தரிசுகளாகவே காணப்படுகின்றன.

தோட்டத்தில் தொழில் செய்து கொண்டிருப்பவனின் மண்வெட்டியைப் பறித்தே, அவன் கழுத்து கத்தரிக்கப்பட்டிருக்கிறது.

பயிர்களுக்கு நடுவே இராணுவ வண்டிகள் பயணித்திருக்கின்றன. கதிர் மிதிக்கும் களத்தில் வைத்தே பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதோ!

ஏழு ஆண்டு கண்ணீர் வாழ்க்கையின் பின் மீண்டும் இங்கே வசந்தம் ஜனனமாகி விட்டது.

மெல்லிய தென்றல், பூக்களின் வாசத்தை அள்ளி வந்து இதயங்களுக்குள் பரப்புகின்றது.

ஆனால் —

இங்கே – வறுமை இரவு, விடியவில்லை.
கடந்த காலக் காயங்கள் ஆறவில்லை.

கிராமங்களில் அமைதியுண்டு.

கண்ணீரும் உண்டு.

நெருப்பும் உண்டு.

நகரங்களில் இயந்திரங்களின் சப்தத்தை தாங்க முடியாமல் தவிப்பவர்களுக்குச் சொல்கிறேன்.

'கிராமங்களில் இருதயங்கள் தவிக்கும் ஓலத்தை நீங்கள் கேட்டுப் பாருங்கள்'.

இங்கே வினை விதைக்காமலேயே, பலர் வினையைத்தான் அறுத்தெடுக்கிறார்கள். இதனை —

விவசாயிகள் வெட்டி எடுத்த விளை பொருட்களை, பாதி விலைக்குப் பெற்றுச் சென்ற வியாபாரிகளிடம் பார்க்க முடியும். கவனமாகப் பாருங்கள்.

இன்னும்....

## வைரவரிகள்

O பணப் பிரச்சினை என்றால் எல்லோரும் ஒரே மதத்தவர்தான்.

O அதிகமாகப் புகழடைந்து விட்ட ஒரு பெயர் எவ்வளவு பெரிய பாரம்.

O முதல் வரிசையில் மூடி மறைக்கப்பட்டவன் இரண்டாவது வரிசையில் மின்னுகிறான்.

O நம் இருதயம் பிணைக்கப்பட்டிருக்கும் இடம் தான் நமது நாடு.

□ வால்டர்

O குற்றத்தை மன்னிக்கலாம். துரோகத்தனத்தை மன்னிக்கவே முடியாது.

□ ரூசோ

O பெரும்பாலும் வறுமை தான் மனிதனிடமுள்ள ஜீவனையும் பண்புகள் அனைத்தையும் தின்றுவிடுகிறது.

O வீண் பெருமையை பகலுணவாக அருந்தும் அகம்பாவமானது நிந்தனையை இரவுணவாக அருந்தவைக்கும்.

□ பெஞ்சமின் பிராங்ளின்

# தரிசனம்

உலக நாடுகள் ஒவ்வொன்றும், எவ்வாறு மொழியால், மதத்தால், இனத்தால், கலை கலாசாரம் பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றால் வேறுபாடு அடைந்திருக்கின்றனவோ அவ்விதமே சுதேச வைத்திய முறையிலும் வேறுபட்டு உள்ளன.

இலங்கைத் தமிழ் மக்களின் சித்த மருத்துவ முறையானது பன் நெடுங்கால வரலாற்றினைக் கொண்டது.

தற்காலத்தில் நவீன விஞ்ஞான வளர்ச்சி காரணமாக ஆங்கில வைத்தியமுறை சகல கிராமங்களிலும் விரவி இருந்தாலும் சித்த வைத்திய முறையும் இயங்கி வருகின்றது.

துறைக்கே இந்த நிலைமை என்றால் ஏனைய துறைகளைக் கேட்கவா வேண்டும்?

சோதிடத்தில் கணிசமானோரும் விளையாட்டில் ஓரளவுக்கேனும் சினிமா போன்ற துறைகளில் அக்கறை உள்ளோருமே நம் மத்தியில் உள்ளனர்.

விஞ்ஞானம், மருத்துவம் போன்ற அறிவியல் துறைகளில் போதிய அக்கறை இல்லாதோரே அதிகமாக உள்ளனர். அது காரணமகக இத்துறை சார்ந்த வெளியீடுகளும் மிக மிக அரிதாகவே உள்ளன.

ஆனால் உண்மையில் நாளாந்த வாழ்க்கையில் நாம் முறைகளும்(சி. எஸ்.சுப்பரமணியம்)கூடியிருந்து கொடுமை செய்யும் ஜீவ ஜந்துக்கள் (க. சிற்றம்பலம்) போன்ற கட்டுரைகளே சாதாரணபொதுமக்களுக்கு பிரயோசனம் அளிக்கக்கூடிய தாகும்.

நாவற்குழி வாழ் மக்களின் குருதி நிறப் பொருளின் செறிவை அறிதல்என்னும் கட்டுரை மிகப்பிரயோசன மானமுயற்சி அந்த வகையில் அது சித்தமருத்துவத்துறை மாணவர்களுக்கு பயன்தரக்கூடியதாகும். ஏனைய கட்டுரைகளும் அவ்வாறானதே.

''சித்தமருத்துவம்தான் வளரவேண்டிய சொந்த மண்ணில் வேரைப் பதித்து ஐந்து வருடங்கள் பூர்த்தியாகிறது. இந்த வேளையில் சித்தமருத்துவம் தன்னை நன்கு நிலை நிறுத்திக் கொள்ளவும், தன் கிளைகளை மக்கள் மத்தியில் பரப்பி நோய் என்னும் வெப்பத்திலிருந்து விடுபடுவதற்குமருத்துவ நிழலைக் கொடுப்பதையும் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது. இதன் பிரதிபலிப்பே சித்த மருத்துவ மாணவர் மன்றத்தின்மலர் வெளியீடும்இதர முயற்சிகளும் ஆகும்.''

## யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவம் 1988 - 89 ஆண்டு மலர் - ஒரு பார்வை

எந்த முறையினைக் கையாண்டாலும் மனிதர்களின் வியாதியைத் தீர்ப்பதே அடிப்படையானது. சுதேச வைத்திய முறையானது வியாதிகளை வேருடன் களைவதிலும் வியாதி வருவதற்கு முன்னர் தடுப்பதிலும் முக்கிய பங்கினை வகிப்பதாகக் கூறப்படுகின்றது.

சித்த மருத்துவத் துறையானது அண்மைக் காலமாக ஏனைய கல்வித் துறைகளுக்கு இணையான ஒரு துறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்க ஆரம்பித்த தன் விளைவாக சித்த மருத்துவத்துறையில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு உள்ளது எனலாம்.

அறிந்திருக்க வேண்டிய எத்தனையோ உபயோகமான விடயங்களைக்கூட தெரிந்து வைத்திருகக வேண்டும் என்ற அக்கறை சிறிதும் இல்லாமல் இருப்பது புதினமான ஒன்றல்ல.

இத்தகைய பின்னணியில் சித்த மருத்துவம் 1988/89 மலரைப் பார்க்க வேண்டியுள்ளது. இந்த நூல் சாதாரண பொதுமக்களுக்கும், இத்துறையினைப் பயிலுவோருக்காகுமாக வெளியாகி உள்ளது.

இந்த மலரை கையில் எடுத்தவுடன் நெருடும் முதலாவது விடயம் தனித்த ஆங்கிலத்தில் உள்ள அட்டையே. அட்டையைப் பார்த்தவுடன் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட மலரா? என்ற மயக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. இந்த செயற்பாடு பழைய ஆண்டு மலர்களில் இருந்து இந்த ஆண்டுவரை மாறாததன்

என சித்தமருத்துவ மன்றம் தன் அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளது. வரவேற்கப்பட வேண்டிய விடயம் தான்.

ஆனால் வருடாவருடம் மலரை வெளியிடுகின்றோம் என்பதோடு நின்று விடக்கூடாது.

எத்தனை பேருக்கு இந்த மலர் கிடைக்கின்றது முப்பதைந்து ரூபாய் கொடுத்து எத்தனை பேர் இந்த மலரை வாங்குவார்கள்?

இத்தகைய வெளியீடுகளிலும், அமைப்பிலும் மிகுந்த சிரமங்கள் இருக்கும். உண்மையில் ஆண்டுக்கு ஒரு தடவையேனும் இத்தகைய மலர்களை வெளிக்கொண்டு வருவது மிகுந்த இடர்பாடுடைய நடவடிக்கை ஆகும்.

என்றாலும் எதிர் காலத்தில் ஆவது சித்த மருத்துவத்

**இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**

பல்கலைக்கழக மட்டத்தில் இத்துறையானது விரிவுபெற்றதனால் மக்களுக்கு இதனால் கிடைக்க வேண்டிய பயனும் விரிவு பெறுகின்றது; நவீன விஞ்ஞான வளர்ச்சியின் பின்னணியில் இத்துறையினைக் கற்பவர்களின் எதிர்

# இலக்கிய நினைவுகள்


நவாலி சோமசுந்தரப் புலவர் யாழ்ப்பாணத்து சாதாரண மக்களது வாழ்க்கையை பிரதிபலித்து எழுதிய கவிதைகள் தனித்துவம் வாய்ந்தவை. மஹாகவியினுடைய கவிதைகளும் யாழ்ப்பாணத்து மிக சாதாரண மக்களதும் நடுத்தர வகுப்பாரதும் வாழ்க்கையை பிரதிபலிப்பன. ஆனால் சோமசுந்தரப் புலவர் மகாஹாகவியினிடத்து எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்த வில்லை. மஹாகவி அவர் விரும்பி படித்தது பாரதியையும் பாரதிதாசனையும் தான்.

திருகோணமலை அரச கடற்படையில் திரு. து. உருத்ரமூர்த்தி (அதுதான் அவர் இயற் பெயர்) அவர்களும் நானும் இலிகிதர்களாக கடமை புரிந்தது 1959ஆம் ஆண்டுக்கும் 1963ஆம் ஆண்டுக்மிடையிலான கால கட்டத்தில் அங்கு அரச பங்களாக்களிலேயே அயலவராக திரு. உருத்ரமூர்த்தியும் நானும் வசித்து வந்தோம். நான் அங்கு மாற்றலாகி செல்வதற்கு முன்பே அவர் அங்கு கடமை ஏற்று விட்டார். நான் அங்கு மாற்றலாகி அவருடன் பல மாதங்கள் நண்பராக பழகிக்கொண்டிருந்த போதும் அவர்தான் எனது பெருமதிப்பிற்குரிய மஹாகவி என எனக்குத் தெரியாது. ஏதோ ஒன்று என் மூளையில் தட்டத்திடுமென ஒரு நாள் ''நீங்கள் பத்திரிகைகட்கு எழுதுவது உண்டா'' என அவரைநான் கேட்ட போது...

செல்வேன்.' என்ற கவிதை மிகவும் வரவேற்பைப்பெற்றது. 'தாமதம் ஏன் என்ற கவிதையைப் பற்றி அந்த நாட்களில் கவிஞர் முருகையன் சி. சு. செல்லப்பாவின் எழுத்துப் பத்திரிகையில் விமர்சனம் செய்திருந்தார். இக் கவிதையில் தொக்கு நிற்கும் கண்ணியமான அடக்கமான விரகம் உண்மையாகவே சிங்காரமானது:

கணவன் கந்தோரிலிருந்து வீடுவர நேரமாகி விட்டது. மனைவியும் அவளது சிறு குழந்தையும், அவரைக் காண வில்லை என ஏங்கித் தவிக்கிறார்கள். இதைப் படம்பிடித்துக் காட்டும் இக் கவிதை தாபத்தைக் காட்டும் கவிதைகளில் சிகரம் போன்றது.

ஏனென்றால் அவர் குழந்தைப் பிள்ளை போன்ற சுபா



ரது இயற்பெயரானது .உருத்திரமூர்த்தி என்ற பெயரிலே கலைமகளில் சில கவிதைகள் பிரசுரமானதாக ஞாபகம்.

நான் அவரோடு கடமையாற்றும் நாட்களில் 'கல்லழகி' என ஒரு பெருங்கவிதை பல பக்கங்கள் கொண்டதாக எழுதி எனக்கே முதன் முதலாக காட்டினார். கவிஞருக்கே உரிய சில பிரத்தியேகமான சிந்தனைகளின் வெளிப்பாடாக அமைந்த இக் கவிதை கவிஞருக்கு மிகவும் பிடித்திருந்தது. அதை விளங்க அன்று எனக்கு முதிர்ச்சி போதவில்லை. இக் கவிதையை பிரபல விமர்சகரும் கவிஞரைப்பற்றிய ஈழத்து பேனா மன்னர் வரிசையில் சிறப்பாக எழுதியவருமான கரவைக்கவி கந்தப்பனார்

## [ கோதைப்பழம் 'மஹாகவி' பற்றி சில சிந்தனைகள் ]

ஒரு நாள் கவிஞர் அவர்கள் கந்தோரில் என்னிடம் தனது 'வள்ளி' என்ற கவிதைத் தொகுப்பை அன்பளிப்பாகக் கொடுத்தார். அது அவருடைய தனிப்பட்டசைப் பிரதியென அதில் அவருடைய கைப்பட எழுதப்பட்ட கவிதை வடிவிலான ஒரு குறிப்பிலிருந்து பின்பு தெரிந்தது. அவர் எழுதிய குறிப்பு பழம் பெரும் எழுத்தாளர் அ.செ.மு. அவர்களை விழித்து எழு

வெம் காண்டால் அன்பு காட்னால் இணைந்து விடுவார். ஆகவே எனது சந்தேகத்தைக் கேட்டதும் வழக்கத்தை விட சற்று பலமாகவே சிரித்து அதன் கருத்தை விளக்கினார் சாதாரணமாக நாங்கள் கோது என்று நடைமுறையில் காய்ந்த பழங்களின் மேல் ஓடுகளையும் - இறந்த நத்தை போன்ற பிராணிகளின் மேல் ஒடுகளையும் பேச்சு வழக்கில் கூறுவது வழக்கமல்லவா.

திரு. கனகசெந்திநாதனுக்கு கவிஞர் அனுப்பி அவரது பதிலையும் கோரியிருந்தார். செந்திநாதனிடமிருந்து பதிலே வரவில்லை.

மஹாகவியைப் பற்றிப் பலருக்குத் தெரியாத விஷயம் அவரது ஆங்கில புலமை பத்திரிகைத் தரமாக அழகாக ஆங்கிலத்தில் எழுதும் புலமை அவருக்கிருந்தது. அவரது ஆங்கில நடையில் கூட ஒரு

> ஒரு சவாலை ஏற்று எழுதப்பட்ட இக் கவிதைய உண்மையான ஒரு கவிஞனினால் மட்டுமே எழுத முடியும். மஹாகவி பிறவிக் கவிஞன் என்பதை மறுக்க முடியாது.

> மஹாகவியைப் பற்றிப் பலருக்குத் தெரியாத விஷயம் அவரது ஆங்கிலப் புலமை -பத்திரிகைத் தரமாக அழகாக ஆங்கிலத்தில் எழுதும் புலமை அவருக்கிருந்தது. அவரது ஆங்கில நடையில் கூட ஒரு கவிதையின் குழைவு காணப்படும்.

''ஓம்- நான்' ''மஹாகவி என்ற புனை பெயரில் கவிதை எழுதுகிறேன். என்று கூறி முடிப்பதற்கு முன் நான் பாய்ந்து அவரை இறுக்கப் பிடித்துக் கொண்டு- ''ஐஸே நான் உம்முடைய விசிறி இத்தனை மாதங்களாக நான் அறிந்து கொள்ளாமலிருந்தேனே'' என அங்கலாய்த்தது மட்டுமல்ல. உடனே எனது மனநிலையிலும் பெரிய மாற்றம் ஏற்பட்டது. இதுகாறும் ஒரே கந்தோரில் கடமை பார்க்கும் இரு உத்தியோகத்தர் இருவருக்கிடையில் இருக்கும் மனோநிலையிருந்து ஸ்ரீ

தப்பட்டிருந்தது. அது பின் வருமாறு

அ. செ. மு.

''பாட்டெழுதச் சொல்லி
படித்து விட்டுப் போற்றி;
அதை
ஏட்டில் அழகாய் அச்
சேற்றுவையே- கேட்டுக்
கேபிள்
என்னை எழுத்து துறைக்கு
இறக்கிவிட்ட
உன்னை மறவாதுலகு''என்று

எழுதி அதன் கீழ் 25-7-55 என்று தேதியும் இட்டிருக்கிறார். எனக்கு அன்பளிப்பு

அப்படி ஒன்றுமேயில்லாமல் காய்ந்து போன கோதினை 'பழம்' என போற்றிக் கொண்டாடும் பேர்வழிகளைத்தான் 'கோதைப் பழம்' என்போர் எனச் சாடியிருக்கிறார். மேலும் இக்கவிதை பிறந்த சந்தர்ப்பத்தைக் கூட அவர் கூறினார்.

அந்நாட்களில் தான்தோன்றித்தனமாக கவிதைகள் எழுதும் இளைஞர் ஒருவர் எமது கவிஞருக்கு விசிறியாக இருந்தார். ஒரு நாள் மஹாகவியின் கவிதை ஒன்று பத்திரிகையொன்றில் வெளிவந்திருந்தது. அந்த இளைஞர் அந்தக் கதையை வாசித்து உடன்

கவிதையின் குழைவு காணப்படும்.

காட்டுமல்லிகைக் கொடி முற்றத்தில் மனிதரின் செல்லத்தில் வளருகிறதாம். ஆனால் காட்டுமல்லிகையோ புறம்போக்கான புதர் வேலிகளில் யாருமறியாமல்மலர்ந்து உதிர்ந்து போய்விடுகிறதாம்.

இக் கவிதையை கவிஞர் தனது கைப்படவே எனக்கு எழுதிக் கொடுத்தார். நிலையற்ற வாழ்க்கையின் உருட்சியில் அது எங்கோ நழுவி விட்டது. பெரிய துரதிர்ஷ்டம் இக் கவிதையை வோர்ட்ஸ் வேர்தீன் டஃபோடி Daffodils என்ற கவிதையோடு ஒப்பிட்டு

தாகக் கூறப்படுகின்றது.

சித்த மருத்துவத் துறையானது அண்மைக் காலமாக ஏனைய கல்வித் துறைகளுக்கு இணையான ஒரு துறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்சழகத்தில் இயங்க ஆரம்பித்தன் விளைவாக சித்த மருத்துவத்துறையில் ஒரு விழிப் புணர்ச்சி ஏற்பட்டு உள்ளது எனலாம்.

மலரைப் பார்க்க வேண்டியுள்ளது. இந்த நூல் சாதாரண பொதுமக்களுக்கும், இத்துறையினைப் பயிலுவோருக்காகுமாக வெளியாகி உள்ளது.

இந்த மலரை கையில் எடுத்தவுடன் நெருடும் முதலாவது விடயம் தனித்த ஆங்கிலத்தில் உள்ள அட்

பதோடு நின்று விடக்கூடாது.

எத்தனை பேருக்கு இந்த மலர் கிடைக்கின்றது முப்பதைந்து ரூபாய் கொடுத்து எத்தனை பேர் இந்த மலரை வாங்குவார்கள்?

இத்தகைய வெளியீடுகளிலும், அமைப்பிலும் மிகுந்த சிரமங்கள் இருக்கும். உண்மை

## இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

பல்கலைக்கழக மட்டத்தில் இத்துறையானது விரிவுபெற்றதனால் மக்களுக்கு இதனால் கிடைக்க வேண்டிய பயனும் விரிவு பெறுகின்றது; நவீன விஞ்ஞான வளர்ச்சியின் பின்னணியில் இத்துறையினைக் கற்பவர்களின் எதிர்காலம் மிகப் பிரகாசமாகவே இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையின் நான்காவது ஆண்டு சித்த மருத்துவ மலர் சென்ற ஆண்டு இறுதிப் பகுதியில் வெளியிடப் பட்டது.

''இவ்வகையான வெளியீடுகள் பல்கலைக்கழக மட்டத்திலிருந்து சாதாரண பாமர மக்களுக்கும் ஆராய்ச்சி நோக்குடையோருக்கும் எமது துறை சார்ந்த அறிவியல் கருத்துக்களை எளிமைப்படுத்தி காவுகின்ற கருவியாக ஏன் இருக்கக் கூடாது? இவ் வினாவின் விளைவுதான் இவ்வாண்டு மலர். பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பட்டம் பெற்ற மேதாவிகளுக்குமே உரியது என்ற மரபை நாம் மாற்ற முனைந்திருப்பதற்கான அடிப்படைக் காரணமாகும்'' என மலர் ஆசிரியர் எஸ். யோகேந்திரன் குறிப்பிட்டு இருப்பது கருத்திற்கு எடுக்க வேண்டிய விடயமாகும்.

எமது மக்கள் அவர்கள் புத்திஜீவிகளாக இருந்தாலும் கூட காத்திரமான வாசிப்புக்களில் அக்கறை காட்டுவது குறைவு. கலை இலக்கியத்

டையே. அட்டையைப் பார்த்தவுடன் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட மலரா? என்ற மயக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. இந்த செயற்பாடு பழைய ஆண்டு மலர்களில் இருந்து இந்த ஆண்டுவரை மாறாததன் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை?

அட்டைப் படத்தினைப் பார்த்த ஒரு ஆங்கில அறிவு இல்லாத சாதாரண பொது மகன் என்ன செய்வான் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இம் மலரில் மொத்தமாக பதினைந்து கட்டுரைகளும் வாழ்த்துச் செய்தி, என் எண்ணங்கள் மறைத்தின் மனத்துடிப்பு, நினைவில் நின்ற பேராசான் வித்தியானந்தன், நன்றியுரை போன்ற இதரவிடயங்களும் உள்ளன.

பதினைந்து கட்டுரைகளில் நான்கு ஆங்கிலக் கட்டுரைகள் இந்த ஆங்கிலக் கட்டுரைகள் பொது மக்களிற்காக இம்மலரில் சேர்க்கப்பட்டு இருக்க மாட்டாதுஎனநம்புகின்றேன்.

ஏனைய கட்டுரைகளில் கயரோகம் (செல்வி திரிபுரநாயகி சிதம்பரநாதபிள்ளை) இலங்கையில் காணப்படும் தாவரநஞ்சுகள் டாக்டர் (திருமதி ரீ சரவணபவானந்தன்) பாரிச வாதம் (சி. வடிவேலு) மூலவியாதி (சி. ராஜ்குமார்)

முதலுதவியின் நோக்கமும், முறிவுகளுக்குரிய சிகிச்சை

யில் ஆண்டுக்கு ஒரு தடவையேனும் இத்தகைய மலர்களை வெளிக்கொண்டுவருவது மிகுந்த இடர்பாடுடைய நடவடிக்கை ஆகும்.

என்றாலும் எதிர் காலத்தில் ஆவது சித்த மருத்துவத் துறையினரும், சித்த மருத்துவமன்றத்தினரும் இது பற்றி யோசிப்பது நன்றாக இருக்கும்.

இத்தகைய சிறப்பான மலரை வெளியிட்ட சித்த மருத்துவத் துறையினரும் மலராசிரியர் எஸ். யோகேந்திரனும் பாராட்டுக்குரியவர்கள்.

உண்மையில் மக்களை சென்றடைவது தான் முக்கியமான நோக்கமாக இருந்தால் அவர்களுக்கு உபயோகமான கட்டுரைகளைக் கொண்ட (அது சிறிய வெளியீடாக இருந்தாற் கூடப் பரவாயில்லை) குறைந்த விலையில் வெளிக்கொண்டு வருவதே பொருத்தமான செயலாகும்.

அவ்வாறே சித்த மருத்துவத் துறை மாணவர்களுக்கும் இத்துறையில் ஈடுபாடும் ஆராய்வும் கொண்டோருக்கும் பயன் தரக் கூடிய விதத்தில் வேறு ஒரு வெளியீட்டை வெளியிடுவது பொருத்தமாக இருக்கும்.

பொதுமக்களுக்கான தேவையும் பயன்படும் மருத்துவ மாணவர்களுக்கான தேவையும் பயன்பாடும் வேறு வகைப்பட்டதாகும்.

□

## உடன் மருத்துவம்

● ஆஸ்த்மா நோயின் உபத்திரவம் குறையவேண்டுமென்றால்: நாலு வில்வம் இலைகளுடன் நாலு துளசி இலைகளையும் சேர்த்துக் கசக்கி அத்துடன் நாலு மிளகாயையும் சேர்த்து வாயில் போட்டு மென்று சாப்பிடுங்கள். சீக்கிரத்தில் உபத்திரவம் குறையும்.

● சளிபிடித்து மூக்கடைப்பு இருந்தால் ஒரு மஞ்சள்துண்டை ஓர் ஊசியில் குத்தி நெருப்பில் காட்டி, அதிலிருந்து வரும்புகையை மூக்கினுள் இழுக்கவேண்டும். சளிகுறையும்: மூக்கடைப்பு நீங்கும்.

மட்டுமே எழுத முடியும். மஹாகவி பிறவிக் கவிஞன் என்பதை மறுக்க முடியாது.

''ஓம்- நான்' ''மஹாகவி என்ற புனை பெயரில் கவிதை எழுதுகிறேன். என்று கூறி முடிப்பதற்கு முன் நான் பாய்ந்து அவரை இறுக்கப் பிடித்துக் கொண்டு- ''ஐஸே நான் உம்முடைய விசிறி இத்தனை மாதங்களாக நான் அறிந்து கொள்ளாமலிருந்தேனே'' என அங்கலாய்த்தது மட்டுமல்ல. உடனே எனது மனநிலையிலும் பெரிய மாற்றம் ஏற்பட்டது. இதுகாறும் ஒரே கந்தோரில் கடமை பார்க்கும் இரு உத்தியோகத்தர் இருவருக்கிடையில் இருக்கும் மனோநிலையிருந்து ஸ்ரீ ராமனுக்கு முன்பாக குகன் நின்ற நிலையாக என் நிலை அந்தக் கணமே மாறிவிட்டது. ஏனென்றால் 'மஹாகவி' என்ற முத்திரையில்லாமல் பத்திரிகைகளில் எவருடைய கவிதை வந்தாலும் நான்திரும்பியும் பார்க்கமாட்டேன். மஹாகவி எழுதினால் அந்தக் கவிதையில் மூன்று நான்கு வரிகளாவது நெஞ்சைத் தொட்டு அருமையாய் இருக்கிறது. என்று வாய் விட்டுக் கூற வைக்கும் பண்பிருக்கும்.

முதன் முதலாக நான் வாசித்த மஹாகவியின் கவிதை 'மறுமலர்ச்சி' பத்திரிகை கையெழுத்துப்பிரதியாக இருந்த போது அதில் வெளிவந்த 'முத்தம்' என்ற தலைப்பில் வெளிவந்த மூன்று கவிதைகள் இப்பொழுது அது ஞாபகமில்லை. ஆனால் அதன் சாரம் 'நான் கொடுக்கும் முத்தம் உனக்குப் பிடிக்கவில்லை என்றால் திருப்பிக் கொடுத்து விடேன்.' என்பதாகும். இதை வாசித்த பொழுது எனக்கும் பதினைந்து வயதிருக்கும். இந்தக் கவிதையிலிருந்த சமத்காரம் அதாவது. wit அந்த வயது எனக்கு மிகவும் வினோதமாகவும் சுவையாகவும் இருந்தது.

இதன் பின்பு மறுமலர்ச்சிப் பத்திரிகை அச்சேறி தமிழ் நாட்டின் மணிக்கொடியோ என கற்றோர் பாராட்டும் வண்ணம் வெளிவந்த போது மாஹாகவியின் 'காதலியாள்' 'காதலுளம்' என்னும் கவிதைகள் வெளி வந்தன.

அந்தக் காலத்தில் கொழும்பில் சிறு சிறு பொந்துகளிலிருந்து கொண்டு கடைகளில் சாப்பிட்டு நாக்கு செத்துப் போன அரச நடுத்தர உத்தியோகத்தர் ஒருவர் எப்போ யாழ்பபாணம் போவேன். என ஏங்கிக் கொண்டு இருக்கும் மனோநிலையை அழகாக சித்திரிக்கும் ''யாழ்ப்பாணம் தப்பட்டிருந்தது. அது பின் வருமாறு

அ. செ. மு.

''பாட்டெழுதச் சொல்லி
படித்து விட்டுப் போற்றி;
அதை
ஏட்டில் அழகாய் அச்
சேற்றுவையே- கேட்டுக்
கேபிள்
என்னை எழுத்து துறைக்கு
இறக்கிவிட்ட
உன்னை மறவாதுலகு'' என்று

எழுதி அதன் கீழ் 25-7-55 என்று தேதியும் இட்டிருக்கிறார். எனக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட அதே நூலில் கடைசி அட்டையின் உள்பக்கத்தில் தி. ச. வரதராஜனுக்கு ஒரு நன்றிக் குறிப்பு:
''மெச்ச என்றால் முடியாது- மெய்யாக

அச்சுக் கலைக்கோர் அழியாத உச்சி அமைத்தாய்-அதனழகை ஆரச்சுவைக்க இமைக்காத கண்ணா எனக்கு''- 18-7-55 கவிஞரின் கைப்பட தனது உள்ளத்தில் கனிந்த நன்றி உணர்வை காட்டி எழுதப்பட்ட வரிகளையடக்கியே 'வள்ளி' என்ற நூலை விலை மதிப்பற்ற பொக்கிஷமாக என்னிடம் வைத்திருக்கிறேன்

## ❀ தி. நடனசபாபதி சர்மா

'வள்ளி' என்ற கவிதைத் தொகுதியில் முதற் கவிதை 'சிகரத்தை நான் அமைப்பேன்' என்பதாகும். இதில் நாலாவது கவிதையின் ஈற்றடிகள்

**'கொண்டேன் கொடுக்கின்றேன் கொள்ளா விட்டாலென்ன கோதைப்பழமென்போர் குறைகள் கண்டாலென்ன'** என்று வருகிறது.

இக் கவிதையைப் படித்த பொழுது அதில் காணப்படும் ''கோதைப் பழம்' என்ற சொல்லுக்கு பொருள் விளங்கவில்லை. ஆகவே அவரது இக் கவிதையைக் காட்டி அதில் வரும் கோதைப்பழம் என்ற சொல்லுக்கு என்ன பொருள் என சிறு பிள்ளைத்தனமாக வினவினேன். மஹாகவி ஓகோ என்று பெரிய சிரிப்பு சிரித்தார். அவர் அப்படித்தான் சிரிப்பது வழக்கம். நமுட்டுச் சிரிப்பு சிரிப்பதோ வஞ்சகச் சிரிப்புச் சிரிப்பதோ அவர் வழக்கமல்ல. வஞ்சகமில்லாமல் ஓகோவென்று சிரிப்பது தான் அவரது சுபாவம்

கில நடையில் கூட ஒரு கவிதையின் குழைவு காணப்படும்.

அப்படி ஒன்றுமேயில்லாமல் காய்ந்து போன கோதினை 'பழம்' என போற்றிக் கொண்டாடும் பேர்வழிகளைத்தான் 'கோதைப் பழம்' என்போர் எனச் சாடியிருக்கிறார். மேலும் இக்கவிதை பிறந்த சந்தர்ப்பத்தைக் கூட அவர் கூறினார்.

அந்நாட்களில் தான்தோன்றித்தனமாக கவிதைகள் எழுதும் இளைஞர் ஒருவர் எமது கவிஞருக்கு விசிறியாக இருந்தார். ஒரு நாள் மஹாகவியின் கவிதை ஒன்று பத்திரிகையொன்றில் வெளிவந்திருந்தது. அந்த இளைஞர் அந்தக் கதையை வாசித்து உடன் தொலைபேசியை எடுத்து கவிஞரைக் கூப்பிட்டு.

'மஹாகவி செத்துப்போனான்'' என்று கூறினார். அன்று வெளிவந்த கவிதை அந்த இளைஞருக்கு அவ்வளவு ரசிக்கத்தக்கதாக இருக்கவில்லைப் போலும் உடனே பிறந்தது தான் 'சிரத்தை நான் அமைப்பேன்' என்ற மஹாகவியின் கவிதை கவிஞர் தன் கவிதையைப்பற்றிக் கொண்டிருந்த தன்னம்பிக்கையும்-அபிமானமும் இக்கவிதையில் மிளிர்கின்றன. ஒரு சவாலை ஏற்று எழுதப்பட்ட இக்கவிதையை உண்மையான ஒரு கவிஞனினால் மட்டுமே எழுத முடியும். மஹாகவி பிறவிக் கவிஞன் என்பதை மறுக்க முடியாது.

உருத்திரமூர்த்தி தனது கவிதை ஒன்றினை கலைமகள் பத்திரிகைக்கு அனுப்பியிருந்தார். ஆனால் அது பிரசுரமாகவில்லை. பின் ஒரு சமயம் கலைமகள் ஆசிரியர் இலங்கைக்கு வந்த போது கவிஞர் அவரைச் சந்திக்க நேர்ந்த போது பிரசுரமாகாத கவிதை பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. பாரதியைத் தவிர யாருக்கும் மஹாகவி என்ற பெயர் பொருந்தாது. ஆகவே தான் அதைப் பிரசுரிக்கவில்லையென்றும் கவிதை நன்றாகத் தான் இருந்தது எனவும் கலைமகள் ஆசிரியரால் விளக்கப்பட்டதாம். அதற்கு கவிஞர் அவர்கள் தன்னைத்தான் ஒருபோதும் மஹாகவியென்று உரிமை கொண்டாட வில்லையென்றும் 'மஹாகவி' என்பது புனை பெயராக மாத்திரமாகத்தான் பாவித்தது எனவும் விளங்கப்படுத்தியும், கலை மகள் ஆசிரியர் திருப்தி அடையவில்லை. பின்பு அவ

கவிதையின் குழைவு காணப்படும்.

காட்டுமல்லிகைக் கொடி முற்றத்தில் மனிதரின் செல்லத்தில் வளருகிறதாம். ஆனால் காட்டுமல்லிகையோ புறம்போக்கான புதர் வேலிகளில் யாருமறியாமல்மலர்ந்து உதிர்ந்து போய்விடுகிறதாம்.

இக் கவிதையை கவிஞர் தனது கைப்படவே எனக்கு எழுதிக் கொடுத்தார். நிலையற்ற வாழ்க்கையின் உருட்சியில் அது எங்கோ நழுவி விட்டது. பெரிய துரதிர்ஷ்டம் இக் கவிதையை வோர்ட்ஸ் வேர்தீன் டஃபோடி Daffodils என்ற கவிதையோடு ஒப்பிட்டு நான் கூறிய போது. ஆங்கிலக் கவிஞரின் கவிதை பற்றி விபரம் என்னிடம் கேட்டு புளகாங்கிதமெய்தினார் கவிஞர். (முற்றும்)

## அன்பான வாசகர்களே.

□ ஞாயிறுமலர் பற்றிய உங்களது அபிப்பிராயங்கள் ஆலோசனைகள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

□ படைப்பாளிகள் சிறு கதை, கவிதை மற்றும் ஆக்கஇலக்கியப் படைப்புகள் அனுப்பி மலரின் தரத்திற்கு உயர்வூட்டுமாறு வேண்டுகிறோம்

□ படைப்புக்களை அனுப்புவர்கள் படைப்பாளர்க்குரிய இதயசுத்தியுடன் தங்கள் புனைபெயர்களுடன் சொந்தப் பெயர் முழுவிலாசம் இணைத்திருத்தல் அவசியம்.

□ கடந்த கால நிகழ்வுகளின் பதிவுகள், அனுபவ வெளிப்பாடுகள் இலக்கிய வடிவங்களாக வரவேண்டிய காலத்தின் தேவையை உணர்ந்து இலக்கிய கர்த்தாக்கள் தங்கள் படைப்புக்களை எழுதுமாறு வேண்டுகிறோம்


□ அறிவியல், வரலாறு, அபிவிருத்தி, மற்றும் சமூகவியல் சம்பந்தமான விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்

□ சொந்த விருப்பு வெறுப்புக்களையும், காழ்ப்புணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும் சகல படைப்புகளும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ஆ-ர்

## உளவியல்

# கட்டிளமைப்பருவத்தினரின் நடத்தைக் கோலங்களும் அதன்-- சமூகத்தாக்கங்களும் ஆளுமை விருத்தியும்



எமது ஒவ்வொரு முயற்சிகளையும் மிக நிதானத்தோடும், அறிவோடும் ஆற்றவேண்டிய கட்டாயச் சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர்களோடும், பெற்றோர்களோடும், அவர்களுக்கு நல்வழி காட்டும் ஆசான்களோடும் சில கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டியது அவசியம். காலத்தின் தேவைக்கு ஏற்ப, சூழலின் தாக்கத்துக்கு ஏற்ப தம்மை இசைவாக்கம் செய்துகொள்ளுந் திறன் படைத்தவர்கள் இளைஞர்கள், கட்டிளமைப் பருவத்துக்குரியவர்கள் என உளவியலாளர்களால் வகுத்துக் கூறப்படும் பருவத்துக்குரியவர்கள். இவர்களால் இன்றைய சமூக அமைவில் ஏற்படும் பல்வேறு வகைப்பட்ட தாக்கங்களை எடுத்து விளக்குவதும், அதற்கான காரணங்களை ஆராய்வதுமே இக்கட்டுரையின் நோக்கம். ஆரோக்கியமான ஒரு சமூக அமைவின் விருத்திக்கு எதிர்மறையான தாக்கங்களைக் கொடுக்கும் இவர்களின் நடத்தைகளையும், அதற்கான காரணங்களையும் ஆராய்ந்து அறிந்து கொள்வது, திட்டமிடப்படும் சமூக வளர்ச்சிக்கு அவசியமானதொன்றாகும்.

> எமது மீட்புக்காய் தம் உயிரையும் துச்சமென மதித்துப் போராடுகின்றார்கள். உயிர்த்தியாகம் செய்கின்றார்கள்- மண்ணின் மீட்புக்காய் ஆயிரமாயிரமாய் அணிதிரண்ட போராளிகள் எப்பருவத்தினர், கழுத்திலே மரணச்சான்று, கையிலே துப்பாக்கியுமாய் வீதியோரங்களில் ஏறுநடை போடுகின்றார்களே அவர்கள் கட்டிளமைப் பருவத்தைச் சார்ந்தவர்கள் இல்லையா?

சமூகப் பொருளாதாரக் காரணிகளாலும், நாமிருவர் நமக்கிருவர் என இருகுழந்தைகளைப் பெற்றுவிட்டு அவர்கள்மீது அளவுக்கதிகமான பாசத்தைக் காட்டுவதாலும், ஆரம்பகாலத்தில் அன்பு, உறவுத் தேவைகள்

யோர் கூற்றுக்கள் பொய்யாகலாம். குழந்தைப் பருவ நடத்தைதையை வைத்து உய்த்தறிய முடியாது. குழந்தைகளின் நீண்ட வளர்ச்சிப் பருவம் சூழல் தாக்கங்களால் மாற்றமடையலாம். ஆனால் கட்டிளமைப் பருவத்தில் இனங்காண்கின்ற நடத்தைக் கோலங்களை வைத்து உரிய வரை எடைபோடுவது பெரும்பாலும் பிழைப்பதில்லை. பல கல்வி உளவியலாளர்கள், பிறழ்வு உளவியளாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்: பரிசோதனைகள் மூலம் நிறுவியுமுள்ளனர். பல

தார விடுதலைக்கு அடிப்படையான ஆரம்ப முயற்சிகள் இப் பருவத்திலே தான் தீர்க்க தரிசனமாக ஆரம்பித்துள்ளன. ஏன் குடும்பப் பொறுப்புக்கள், தாய், தந்தை சகோதரங்களுக்குக்காகத் தம் வாழ் நாளைத் தியாகஞ் செய்யும் மனப்பக்குவம் வலிமை இப் பருவத்தில்தான் தோன்றியுள்ளன, எமது யாழ்ப்பாண மத்தியதரச் சமூக மனப்பாங்குகளில் இதுவும் ஒன்றை இப் படிஅமைய ஆரம்பத்தில் கூறியதுபோல் அறியாப்பருவம், உணராப்

அனுபவ உண்மைகள் இதற்குச் சான்றாகும். பொறுமையும் பொறுப்பும் வாய்ந்த பிள்ளை, அறிவும் அடக்கமும் வாய்ந்த பிள்ளை,விவேகமும், வாய்ந்த பிள்ளை, அறிவும், ஆற்றலும் நிறைந்த பிள்ளை என இப்பருவத்தினரைப் பார்த்து, பெற்றோர்கள்,மூதியவர்கள், குரு, அனுபவவாதிகள் தரும் மதிப்பீடுகள் நிலையானதொரு நற்தாட்சிப் பத்திரமாக அமைவதைப் பலரும் அனுபவத்தில் கண்டுள்ளோம்.

இதேபோல், பொறுப்பறியாத பருவம், உண்மையை உணரத் தெரியாத பருவம், தன்னிலை உணரத் தெரியாத பருவம் கேட்பார் சொற்கேட்கும் பருவம், உணர்ச்சிக்கே முதலிடம் கொடுக்கும்பருவம், என இப் பருவத்தினரைப் பற்றிக் கூறும் கருத்துக்களும் உள்ளன. இவை உண்மையில் உளவியல் ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துக்

பருவம் என எப்படி ஒதுக்கலாம். அப்படி அறியாப் பருவத்தில் விடும் பிழைகளா இவை. உற்றுப்பாருங்கள், கால நேரமின்றித் தெருத் தெருவாக அலைதல், போதை வஸ்த்துக்கு அடிமையாதல், பெண்களோடு சகோதரங்களாகப் பிறக்காதவர்கள் போல் அவர்களைக் கண்டால் அவாவுறுதல் அடுத்தவர் கேட்கமுடியாத ஒழுக்கயீனமான சொற்களைப் பாவித்தல், பொருள் இடம் பார்க்காது பெண்களை இடித்தல் நெருக்குதல், ஏசுதல், வழிதல் எவ்வித கலைநயமோ, அறிவோ அற்ற விளம்பரப் படங்களை இரண்டு மூன்று முறை விழுந்தடித்துப் பார்த்தல், அத்தகைய படங்களில் வரும் தரக்குறைவான பாடல்களை பாடுதல், அத்தகைய இசை நாடாக்களை வேண்டிச் சுவைத்தல், ஆடுதல், சமூக அரசியல், பொருளாதார உணர்வு எதுவுமின்றி நாட்டில், சூழலில் நடப்பது என்ன என்ற பிரக்ஞையின்றிச், சூழல் தாக்கமதுவுமே இன்றி வீதியில் வம்பளத்தல், பெரியோரை, வயதுமுதிர்ந்தவர்களைக் கணம்பண்ணாது கண்டபடி வைதல், கோஷ்டிசேர்ந்து களவெடுத்தல் அத்தகையயோர்க்கு துணை போதல், ஏமாற்றுதல், தமது தவறுகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவமின்றி மற்றவர் மீது சினந்து விழுதல், திட்டுதல் போன்ற நடத்தைகளை

# விண்ணில் ஒரு புதிய கண்

கடந்த 25ஆம் திகதி காலை 8-29ற்கு அமெரிக்காவின் கென்னடி ரொக்கற் ஏவுதளமுனையிலிருந்து டிஸ்கவரி என்ற விண்வெளி விமானம் அமெரிக்க நேரப்படி (Space Shuttle) விண்வெளி யுகத்தில் புதிய சகாப்தத்தை தொடக்கி வைப்பதற்காக ஒரு பொருளை சுமந்து சென்றது. அந்தப் பொருள்......

ஒரு தொலை நோக்கி விண்ணில் மிதந்து கொண்டே அங்கே நிகழும் சாகசங்களை பூமிக்கு தரும் தொலை நோக்கி அது. அதன் பெயர் 'ரெப்பிள்' பூமியிலேயே நிறைய வானியல் தொலை நோக்கி இருக்கும் போது பல கோடி பணச் செலவில் ஏன் இந்தத் நொலை நோக்கி என்ற கேள்வி பலருக்கு எழலாம்.

பூமிக்கு வளிமண்டலம் உள்ளது. வளிமண்டலத்தில் வாயுக்கள், தூசுக்கள் ஏராளமாக உள்ளன. வெகுதொலைவில் இருந்து வரும் நட்சத்திரங்களின் ஒளியை நம் வளிமண்டல வாயுக்களும் தூசுக்களும் சிதைக்கின்றன.இப்படி சிதைப்பதன் மூலம் அந்த ஒளியின் முக்கால் பிரகாசம் மழுங்கடிக்கப்படுகிறது. அதனால் தெளிவற்ற ஒளியையே நம்மால், பூமியிலுள்ள தொலை நோக்கிகளால் காண முடிகிறது. விண்ணில் எத்தனையோ நிகழ்வுகள் நடக்கின்றன நட்சத்திரங்கள் வெடிக்கின்றன. பல பிரபஞ்சங்கள் உலவுகின்றன. ஆனால் இவற்றையெல்லாம் நம்மால் காண முடிவதில்லை. நம்மால் மட்டுமல்ல பூமியிலுள்ள வான் தொலைநோக்கிகளால் கூட தெளிவாக பார்க்க முடிவதில்லை.

இப்படியான இடர்களை நீக்கவே 'ரெப்பிள்' என்ற இத் தொலை நோக்கி ஏவப்பட்டது. 'ரெப்பிள்' என்றபெயர் ஒரு பிரபல அமெரிக்க விண்ணாய்வாளரின் பெயராகும். கி.பி. 1889 - 1953 காலப் பகுதியில் வாழ்ந்த 'எட்வின் பவல் ரெப்பிள்' என்ற இவ் விண்ணாய்வாளர் பிரபஞ்சத்தின் விரிவு.பால்வழி அமைப்பு என்பவற்றின் மீதான ஆய்வுகளில் ஈடுபட்ட நவீன விண்ணாய்வின் முன்னோடிகளில் ஒருவர் அவரின் பெயரையே வானில் புதிய விண்ணியலிற்கு முன்னோடியாகப் போகும் தொலை நோக்கிக்கும் இடப்

பட்டது. ரஷ்யாவின் சல்யூட்-6 என்ற விண் ஆய்வு நிலையத்தில் (Orbital Station) இது பொருத்தப்பட்டது. KRT-10 என்ற பெயருடையது. விண்வெளியில் முதலில் ஒரு தொலைநோக்கியை அமைத்து தொலைவில் நிகழும் நிகழ்வுகளை முதலில் கண்டபெருமை ரஷ்யாவையே சாரும்.

ஆனால் இன்று 'ரெப்பிள்' பிரபலமாக பேசப்படுவதற்கு காரணம் என்ன? அது தனியாக வானில் சுற்றிவரப் போகிறது. அத்துடன் விண்ணில் நிறுவப்பட்ட பெரிய தொலை நோக்கியாக தற்போது உள்ளமையே ரெப்பிள் பெரிதாகப் பேசப்படுவதற்கு உரிய காரணமாகும்.

## தி. தவபாலன்

ரெப்பிள் ஒரு தெறிப்பு தொலை நோக்கி ஆகும். தொலை நோக்கிகளில் இரு வகை உண்டு. ஒன்று முறிகதிர் தொலை நோக்கி. இது இரண்டு வில்லைகளைக் கொண்டு செய்யப்படுவது தெளிவு குறைவாக இருக்கும்.

மற்றது தெறிப்புத் தொலை நோக்கி (Refle Cting Telescope). இது அதிசக்தி வாய்ந்தது. இங்கு தொலை நோக்கும் கருவியாக பயன்படுவது ஒரு குழிவு ஆடி ஆகும். தொலைவிலிருந்து வரும் ஒளிக்கதிர்கள் இதில் குவிக்கப்பட்டு பின் தெறித்து வரும் பெரிய விம்பத்தை நோக்கலாம்.மிகமிகத் தெளிவானது. இது பூமியில் அனைத்து வான் தொலை நோக்கிகளும் இவ் வகையினது.


தொலை நோக்கிகளில் பயன்படுத்தப்படும் குழிவாடிகளின் அளவைப் பொறுத்துப் பிரகாசம் அமையும். மிகப் பெரிய 200 அங்குல விட்ட ஆடியைக் கொண்ட தொலை நோக்கி அமெரிக்காவின் பலோமர் மலையில் உள்ளது.

இந்தியாவில் நூறு அங்குல தொலை நோக்கியும் ரஷ்யாவில் 240 அங்குல தொலை நோக்கியும் அமைக்கப்பட்டு வருகின்றது.

ரெப்பிள் தொலை நோக்கியின் ஆடி 8 அடிகள் விட்டமுடையது. தொலை நோக்கியின் முழு நீளம் 13 மீற்றர்கள் ஆகும். தொலை நோக்கியின் ஆடியை 'பெக்கின் எல்மர்' என்ற நிறுவனம் தயாரித்தது. இந்த நிறுவனம் பலோமர் மலையிலுள்ள தொலை நோக்கிக்கான ஆடியையும் தயாரித்தது. தொலை நோக்கி இயங்குவதற்கு தேவையான சக்தியைப்பெற இரண்டு சூரியக்கல தட்டுகள் இணைக்கப்பட்டுள்ளன. தேவையான போது மட்டும் திறக்கக்கூடியதாக தொலை நோக்கியின் திறந்த வாசலில் ஒரு கதவு பொருத்தப்பட்டுள்ளது. இது பூமியிலிருந்து 600 கிலோ மீற்றர்கள் உயரத்தில் நிலைகொண்டு பூமியைச் சுற்றும். தொலை நோக்கியில் தோன்றும் காட்சிகளை வீடியோ படமாக்கி தொலை நோக்கியிலமைந்துள்ள ஒளி பரப்பு கருவி மூலம் விண்ணில் உலவும்வேறொரு செய்மதிக்கு ஒளி அலைகளை அனுப்பும் அச்செய்மதி அந்த அலைகளை பூமிக்கு அனுப்பும். செய்மதி அனுப்பும் அலைகள் புதிய மெக்சிகோவில் உள்ள தரை நிலையத்தால் வாங்கப்படும்.

1986 ஆம் ஆண்டு முதல் அனுப்பத்திட்டமிட்ட இத் தொலை நோக்கி பல தடவைகளுக்கு மேல் நிறுத்தப்பட்டு தற்போது வெற்றிகரமாக அனுப்பப்பட்டுள்ளது.

10 மில்லியன் டொலர்களை விழுங்கியுள்ள 12 தொன்திணிவுடைய இத்தொலை நோக்கி விண்யுகத்தில் ஒரு புரட்சியை செய்யப் போவதாக அமெரிக்கா கூறிவருகின்றது. அப்படி என்ன புரட்சியை நிகழ்த்தப்போகிறது.விரைவில் எதிர் பார்ப்போம்.



எமது மீட்புக்காய் தம் உயிரையும் துச்சமென மதித்துப் போராடுகின்றார்கள். உயிர்த்தியாகம் செய்கின்றார்கள்- மண்ணின் மீட்புக்காய் ஆயிரமாயிரமாய் அணிதிரண்ட போராளிகள் எப்பருவத்தினர், கழுத்திலே மரணச்சான்று, கையிலே துப்பாக்கியுமாய் வீதியோரங்களில் ஏறுநடை போடுகின்றார்களே அவர்கள் கட்டிளமைப் பருவத்தைச் சார்ந்தவர்கள் இல்லையா?

களையும் ஆராய்ந்து அறிந்து கொள்வது, திட்டமிடப்படும் சமூக வளர்ச்சிக்கு அவசியமானதொன்றாகும்.

சமூகப் பொருளாதாரக் காரணிகளாலும், நாமிருவர் நமக்கிருவர் என இருகுழந்தைகளைப் பெற்றுவிட்டு அவர்கள்மீது அளவுக்கதிகமான பாசத்தைக் காட்டுவதாலும், ஆரம்பகாலத்தில் அன்பு, உறவுத் தேவைகள் நிறைவேறாது விடுவதாலும், உறவுநிலைகளை நிர்ணயிக்காததாலும் உடலியற்தேவைகளை அவ்வப்பருவத்திற்கு ஏற்ப வழங்காததாலும், வீட்டுச் சூழ்நிலைகளை நிர்ணயிக்காததாலும், காலவளர்ச்சிக்கேற்ப கண்டித்து, அன்பு காட்டி, வழிகூறி வளர்க்கத் தந்தைமார் அருகில் இல்லாததாலும், குடும்பச் சுமைகளினால் குழந்தைகளைப் பராமரிக்கமுடியாது அவர்களின் போக்குக்கே விட்டுவிடும் தாய்மார்களின் மனோபாவங்களினாலும் இன்றைய இளைஞர் சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு உளவியற் தாக்கங்களையும் அதன் வெளிப்பாடுகளையும் மனம் விட்டுப் பகிர்ந்து கொள்வது அவசியம். 'மீட்டுப்பார்ப்பது திட்டமிடுவதற்கு சிறந்த காரணி' என்பர் சமூக உளவியலாளர்கள்.

கட்டிளமைப்பருவத்திற்குரிய உந்தல்கள், தூண்டல்கள், துலங்கல்கள் தனித்துவமானவை. பலதிறப்பட்டவை மனவெழுச்சிநிலை மேலோங்கியிருக்கும் பருவம் என்பார் உளவியலாளர். இப்பருவத்துக்குரிய உந்தல்களை, மனவெழுச்சிக் கோலங்களை, ஆளுமை' நுண்ணறிவுத் துலங்கல்களைப் பற்றிப் பலகருத்துக்களைக், கோட்பாடுகளை, விதிகளை உளவியலாளர்கள் வகுத்து விளக்கியுள்ளனர். மனவெழுச்சி நிலைகளையும், அதன் முதிர்ச்சிகளையும், ஆளுமை வெளிப்பாட்டையும், நுண்ணறிவுத் துலங்கல்களையும் வெளிப்படை நடத்தைக் கோலங்களாகஇனங்காணகூடியபருவம் இதுவே. இளைஞர்களின் எதிர்கால அமைவை நிலையை பெற்றோரும், குருவும், சமூகமும் வெளிப்படை உண்மைகளாக அனுமானிக்கும் பருவம் இக்கட்டிளமைப் பருவமே, 'தொட்டிலிற்பழக்கம் சுடுகாடு வரைக்கும்', 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா' என்ற முதி

யாத பருவம், உண்மையை உணரத் தெரியாத பருவம், தன்னிலை உணரத் தெரியாத பருவம் கேட்பார் சொற்கேட்கும் பருவம், உணர்ச்சிக்கே முதலிடம் கொடுக்கும்பருவம், என இப் பருவத்தினரைப் பற்றிக் கூறும் கருத்துக்களும் உள்ளன. இவை உண்மையில் உளவியல் ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துக்கள் அல்ல. உளவியல் ரீதியாகப் பதில் கூறுவதாக நினைத்துக் கொண்டு சிலர் கூறும் தற்காலிகமான சமாதானங்களே இவைகள். இவற்றில் ஓரளவே உண்மையுண்டு. சில இயலாமைகளை, விவேகமற்றதனத்தை, அறியாமைகளை, குடும்ப, சூழல்களால் ஏற்பட்ட தவறான மனோபாவத்தை, தீயநட்புக்களால் ஆராய்ந்துறைநுண் திறனற்ற காரணங்களால் இளைஞர்கள் விடுந்தவறுகளை நம்மவர்கள் அறிந்தவர்கள், என்பதற்காகவே மேற்கூறிய கருத்துக்களைக் கூறிச் சமாளிக்கப் பார்க்கின்றோம். விட்டு விலகும் நிலை, தப்பும் நிலை என இதைப்பற்றியும் உளவியளார்கள் விளக்கியுள்ளனர். மிக விழிப்புணர்வு பெற்ற நிலையில் உள,· உடற்காரணிகள் அபிவிருத்தியுறும் பருவத்தை அறியாப் பருவம், உணரத்தெரியாப் பருவம் எனக் கூறுதல் பொருந்துமா நியதியற்ற ஆளுமை விருத்தி, நுண்ணறிவுக்குறைபாடு, போதிய ஆற்றல் அனுபவமின்மை, குடும்பச் சூழல் வளர்ப்பு முறை இக்குறை பாடுகளுக்குப் பின்னால் இருப்பதை இனங்காணலாம் என ஜோன் மார்சல் எனும் சமூக உளவியாளர் குறிப்பிடுகின்றார்.

நாட்டின் சிறந்த சமூகத் தலைவர்கள், ஒழுக்க சீலர்கள், விஞ்ஞானிகள், மேதைகள், சிறந்த அரசியற் தலைவர்கள், இப் பருவத்திலே இனங்காணப்பட்டுள்ளார்கள். எந்த ஒரு மகத்தான சாதனைகளை எடுத்துப் பார்த்தாலும் அச் சாதனைகளுக்கு ஏற்ற மனப்பக்குவம், ஆளுமை, விவேகம் போன்றன இப் பருவத்தில் வெளிப்பட்டிருப்பதைப் பல வரலாற்று உதாரணங்களில் காணலாம். பல சமூக, அரசியல், பொருளா

அறிவோ அற்ற விளம்பரப் படங்களை இரண்டு மூன்று முறை விழுந்தடித்துப் பார்த்தல், அத்தகைய படங்களில் வரும் தரக்குறைவான பாடல்களை பாடுதல், அத்தகைய இசை நாடாக்களை வேண்டிச் சுவைத்தல், ஆடுதல், சமூக அரசியல், பொருளாதார உணர்வு எதுவுமின்றி நாட்டில், சூழலில் நடப்பது என்ன என்ற பிரக்ஞையின்றிச், சூழல் தாக்கமதுவுமே இன்றி வீதியில் வம்பளத்தல், பெரியோரை, வயதுமுதிர்ந்தவர்களைக் கணம்பண்ணாது கண்டபடி வைதல், கோஷ்டிசேர்ந்து களவெடுத்தல் அத்தகையயோர்க்கு துணை போதல், ஏமாற்றுதல், தமது தவறுகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவமின்றி மற்றவர் மீது சினந்து விழுதல், திட்டுதல் போன்ற நடத்தைகளை அறியாப்பருவம், வயதுக் கோளாறு. இப் பருவத்தில் இப்படித்தான் எனச் சமாதான மடையலாமா. இப்பருவத்தைச் சார்ந்த ஒரு பகுதியினர்தானே எமது மீட்புக்காய் தம் உயிரையும் துச்சமென மதித்துப் போராடுகின்றார்கள். உயிர்தியாகம் கொள்கின்றார்கள் மண்ணின் மீட்புக்காய் ஆயிரமாயிராமாய் அணிதிரண்ட போராளிகள் எப்பருவத்தினர் கழுத்திலே மரணச்சான்று, கையிலே துப்பாக்கியுமாய் வீதியோரங்களில் ஏறு நடைபோடுகின்றார்களே அவர்கள் கட்டிளமைப் பருவத்தைச் சார்ந்தவர்கள் இல்லையா. ஈழ விடுதலைக்காக தியாக வேள்விக்கு நெய்யாகிய தியாகச் சுடர்கள் எத்தனை எத்தனை. இவர்கள் அறியாப்பருவத்தால் விட்டிற் பூச்சிகளாய் அழிந்தவர்கள் எனலாமா. எமது ஈழமண்ணின் விடுதலை வரலாற்றில் எத்தனை கலங்கரை விளக்கங்கள். இப்பருவத்தைச் சார்ந்தவர்கள் தானே உலக வரலாற்றில் இதைப் போல் எத்தனை ஆதாரங்கள். இப்போது நம்மவரில் சிலர் ஒரிசா மாநிலத்தில் தஞ்சமடைந்திருக்கின்றார்களே அங்குகூட 1964ஆம் ஆண்டு மாணவர் போராட்டத்தால் அந்த அரசே ராஜினாமாச் செய்ததே. அந்த மாணவர்கள்எப்பருவத்தினர். ஒரிசா முதல் அமைச்சராக இருந்த காங்கிரஸ்காரர்மீது ஊழல் குற்றச்சாட்டுகளை கட்டிளமைப் பருவத்தைச் சேர்ந்த மாணவர்கள் சுட்டிக் காட்டி ஆட்சியையே மாற்றியமைத்தார்கள். அமெரிக்கப் பாசிசச் சக்திகளுக்கு எதிராக 1946இல் கூடிய மாணவர்களின் எதிர்ப்புக்குரல். தீர்க்க தரிசனமா விழிப்புக்குரலால் ஏற்பட்ட மாறுதல்கள் எத்தனை. அமெரிக்க காங்கிரசின் போக்குக்கு எதிர்ப்பு, பாசிச சக்திகளை உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் வேரறுப்பது, தன்னிறைவு பெறாத நாடுகளிலும், சுதந்திரத்திற்குப் பாடுபடும் நாடுகளிலும் உள்ளமாணவர்களுடன் ஒன்று சேர்வது என அவர்கள் எழுப்பும்குரல்ஒலிகள் எங்கெல்லாம் ஒலித்தன. இவர் கட்டிடிளமைப்பருவத்தினரே.எமது நாட்டில் 1972ஆம் ஆண்டிற்குப்பின் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வும், அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த வீரவிடுதலை வரலாறும் இத்தகைய பருவத்தினரால் சாதிக்கப்பட்டவைதானே. உளவியல் ரீதியாகத்தனியாக வேறுபாடுகள் காணப்படலாம். அவ்வேறுபாடுகள் கூட்டுமொத்தமான ஒரு சமூக அமைப்பை, சமூக வாழ்முறையை அதன் அடிப்படைப் பண்பாட்டைப்பாதிக்கலாமா? பாதிக்கவிடலாமா? அதனால்தான் இப்பருவத்தினரின் நடத்தைக் கோலங்களையும் அதற்கான காரணங்களையும் பின்னணிகளையும் ஆராய்தல் அவசியமாகின்றது. □

**வே. யுகபாலசிங்கம் B. A. (Hons)**


நம்மால் காண முடிவதில்லை. நம்மால் மட்டுமல்ல பூமியிலுள்ள வான் தொலைநோக்கிகளால் கூட தெளிவாக பார்க்க முடிவதில்லை.

இப்படியான இடர்களை நீக்கவே 'ரெப்பிள்' என்ற இத் தொலை நோக்கி ஏவப்பட்டது. 'ரெப்பிள்' என்றபெயர் ஒரு பிரபல அமெரிக்க விண்ணாய்வாளரின் பெயராகும். கி.பி. 1889 - 1953 காலப் பகுதியில் வாழ்ந்த 'எட்வின் பவல் ரெப்பிள்' என்ற இவ் விண்ணாய்வாளர் பிரபஞ்சத்தின் விரிவு.பால்வழி அமைப்பு என்பவற்றின் மீதான ஆய்வுகளில் ஈடுபட்ட நவீன விண்ணாய்வின் முன்னோடிகளில் ஒருவர் அவரின் பெயரையே வானில் புதிய விண்ணியலிற்கு முன்னோடியாகப் போகும் தொலை நோக்கிக்கும் இடப்பட்டுள்ளது.

'ரெப்பிள்' என்ற இத் தொலை நோக்கியே விண்ணிற்கு அனுப்பப்பட்ட முதல் தொலை நோக்கியல்ல.

சென்ற ஆண்டு ஐரோப்பிய விண்ணாய்வு முகாமையகமான 'ஈசா' KH–1 (KeyHole) என்ற விண்தொலை நோக்கியை அனுப்பியது இது விண்ணில் நட்சத்திரங்களின் அமைப்பை படமாக எடுத்து அனுப்புவதற்காகவே அனுப்பப்பட்டது.

1979இல் முதல் விண்வெளித் தொலை நோக்கி அனுப்பப்




(1) கதிர்வீச்சு தடைகருவி (**Raclial module with radiator**) (2) விண்விம்பங்கள் இனங்காணுகருவி (**Fireod Head star Trackers**) (3) ஒளிக்கதிர்களை கட்டுப்படுத்தும் கருவி (**Fine Guidance optical control sensors**) (4) அச்சு கட்டுப்படுத்தி (**Axial modules**) (5) பாதுகாப்பு உடல் (**Aft Shroud**) (6) தொடர்பு இயக்கப்பகுதி (**Equipment secton**) (7) முதன்மை ஆடி (**Primary mirror**) (8) விம்பம் எதிரொளிக்கும் ஆடி (**Secondary mirror**) (9) ஒளிபுகவிடும் கதவு (**Aperture Door**) (10) ஒளிபுகவிடும் தட்டு (**light Shield**) (11) சூரியகலத்தட்டு (**Double control outray**)

## மேல் படம்

(1) அடிப்படை குழிவு ஆடி (**Primary mirror**) (2) எதிரொளிக்கும் தள ஆடி (**Plane mirror**) (3) பரர்க்கும் கண் (**Eye piece**) ஒளிக்கதிர்கள் [(**Light rays**)

## வள்ளுவ வாக்கியம்

துணிவு!

குட்டி நாயொன்று துரத்திக்கொண்டு வந்தது. பயந்த குழந்தை ஓடிக்கொண்டே போயிற்று. குட்டி நாய்க்கு உஷார் பிறந்தது. மேலும் வேகமாய்த் துரத்திற்று! இது இயல்பான குணம்!

ஒருவன் வெருட்டுகிறான். மற்றவன் பயம் கொள்கிறான். இவனது பயத்தைக் கண்டு அவன் மேலும் வெருட்டுகிறான்! இது துன்பம் தருவோரின் இயல்பு!

பெரிய மாடொன்று இடிக்க முயன்றது. மனிதன் பயப்படவில்லை. சட்டென்று விலகித் தடியினால் மின்னல்போய் தாக்கினான். மாடு மிரண்டு பயம் கொண்டது! இறுதியில் அது அடங்க வேண்டியதாயிற்று!

நோய் வந்தது. விவேகி உரிய மருந்தெடுத்தான். அவன் எழுந்தான். நோய்தான் மடிந்தது! வறுமையை உழைப்பாளி வென்றான்! எரிக்க வந்த நெருப்பை ஊரார் அணைத்தனர். வீடு நிலைத்தது. நெருப்பு அணைந்தது! இவ்விதம் அடங்கிய தீமைகள் எத்தனையோ! காரணம் தெளிந்த செயலே! தீரமே!

உன்னை வெல்ல வந்தோரைத் தோற்றோர் ஆக்கு! துன்பத்தை நீ துன்பப்படுத்து! வீரனாய் நில்! வென்றோன் ஆவாய்! மருந்து அதுவே!

(குறள் 623)

□ **நாக. பத்மநாதன்**



உயிரிழந்த எனது தோழர்களுக்காக நான் பழிவாங்கச் சபதம் ஏற்கப்போதில்லை. அவாகளது உயிர்கள் விலை மதிப்பற்றவை; இந்தக்கொலைகாரர்கள் தங்களது உயிரைக் கொடுத்தால்கூட'. அதற்கு ஈடாகாது தங்களது நாட்டிற்காகப் போராடியவர்களின் உயிருக்கு இரத்தத்தால் மரியாதை செலுத்திவிடமுடியாது. அவர்கள் நேசித்தமக்களின் மகிழ்ச்சியே அவர்களுக்கு நாம்செலுத்தும் அஞ்சலியாக இருக்க முடியும்.

ஃ பிடல் காஸ்ட்ரோ